வழக்கறிஞர், காவல் துறையினர் தாக்குதல், போராட்டம் (ஒ.தீ.) 282

ல.

லத்தீப், திரு. எம். ஏ.—

சிம்கோ மீட்டர்ஸ், வேலை நிறுத்தமும் கதவடைப்பும் (ஒ.தீ.) 498—499

வரவு-செலவுத் திட்டம், 1979-80 (பொ.வி.) 358—359, 360

விவசாயிகள், கட்டண பாக்கிக்காக மின் இணைப்புத் துண்டிப்பு (ஒ.தீ.) 487—489

வ.

வடிவேல், திரு. கு.—

கலைக் கல்லூரி, கரூர், மேல் பட்டப்படிப்பு 463—464

வரதராஜன், திரு. என்.—

ஆசிரியர்கள், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி, உண்ணாவிரதம் (க. ஈ.). 421

வரவு-செலவுத் திட்டம், 1979-80 (பொ.வி.) 339—347

வழக்கறிஞர், காவல் துறையினர் தாக்குதல், போராட்டம் (ஒ.தீ.) 287

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வனவிலங்குகள்—

யானைகள், பாதுகாப்பு 374—376

வாரியம்—

மின்வாரியம், பட்தாரி இளநிலை உதவியாளர் சம்பள விகிதம் 241—242

விடுதிகள்—

தொழிற் பயிற்சி மாணவர்கள், அம்பத்தூர், வானொலிப் பெட்டி. 46—47

பிற்பட்ட வகுப்பு மாணவியர், நன்னிலம். 52

விளம்பரங்கள்—

விளம்பரப் பலகைகள் நிறுவ அனுமதி, சென்னை 37—38

விளையாட்டுகள்—

விளையாட்டுக் குழுவிற்கு அளித்த தொகை. 41

விஜயராகவன், திரு. பொ.—

சிம்கோ மீட்டர்ஸ், வேலை நிறுத்தமும், கதவடைப்பும் (ஒ. தீ.). 496

வழக்கறிஞர், காவல்துறையினர் தாக்குதல், போராட்டம் (ஒ. தீ.). 282

விவசாயிகள், கட்டண பாக்கிக்காக மின் இணைப்புத் துண்டிப்பு (ஒ. தீ.) 483

வீட்டு வசதி—

குடிசைவாழ் மக்கள், நுங்கம்பாக்கம் (க. ஈ.). 512—515

"கோர்" நிறுவனம், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கட்டப்பெற்ற வீடுகள். 456—460

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வீட்டுவசதி—தொடர்ச்சி.

வீட்டு வசதி வாரிய வியாபாரக் கூடங்கள், உலக வங்கி உதவி — 49—50

வீரப்பன், திரு. ஆர். எம்.—

தண்டாயுதபாணி கோவில், பழனி, உண்டியல் தகராறு (க. ஈ. அ.). — 419, 420—421

தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1979 — 515

வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.—

ஆசிரியர்கள், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி, உண்ணாவிரதம் (க. ஈ.). — 424

சிம்கோ மீட்டர்ஸ், வேலைநிறுத்தமும் கதவடைப்பும் (ஒ. தீ.). — 496

வேலுச்சாமி, திரு. ஒ. சோ.—

உதவி குற்ற விசாரணை வழக்கறிஞர்கள், தகுதி உயர்த்தல். — 377—379

சிம்கோ மீட்டர்ஸ், வேலைநிறுத்தம் (ஒ.தீ.) — 278—279

விவசாயிகள், கட்டண பாக்கிக்காக மின் இணைப்புத் துண்டிப்பு (ஒ.தீ.) — 423

வேளாண்மை—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், திருப்பூர், விரிவுபடுத்தல். — 605—606

குத்தகைப் பதிவு அதிகாரி, மன்னார்குடி, வரப்பெற்ற விண்ணப்பங்கள். — 51

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம். — 235—239

நிலவரி வசூல், தஞ்சை மாவட்டம் (க. ஈ.). — 618—620

பயிர்ச் சேதம், திருவில்லிபுத்தூர், விவசாயிகள் நிலைமை (க. ஈ.). — 301—303

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வேளாண்மை—தொடர்ச்சி.

பூச்சி மருந்து தெளிக்கும் தொழிலாளர்கள் மரணம், நிதி உதவி 1—4

மானாவாரிப் பயிர்த் திட்டம், கிழக்கு இராமநாதபுரம் 49

வாழை, கொடைக்கானல் வட்டத்தில் முடிக்கொத்து நோய் 447—448, 450—451

விவசாயிகள், பரிசுத் திட்டம். 471—477

விவசாயிகள், ஸ்ரீமதுரை, கூட்டுறவுக் கடன்கள். 38

வேளாங்கண்ணி கடற்கரையோரப் பகுதி, தென்னை, பனை மரங்கள் அழிதல். 44

ஜ.

ஜான் வின்சென்ட், திரு. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80 (பொ.வி.) 563—567, 632—636

ஜெபமணி, திரு. ர.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80 (பொ.வி.) 678—686

ஜேம்ஸ், திரு. ஜே.—

சிம்கோ மீட்டர்ஸ், வேலைநிறுத்தமும், கதவடைப்பும் (ஒ. தீ.). 499—500

வழக்கறிஞர், காவல்துறையினர் தாக்குதல், போராட்டம் (ஒ. தீ.). 285—286

விவசாயிகள், கட்டண பாக்கிக்காக மின் இணைப்புத் துண்டிப்பு (ஒ.தீ.) 483

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

— — —

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்) பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, பெருந் தொழில்கள், சுரங்கம்-கனிவளம்.

2. திரு. கி. மனோகரன்: (நிதி அமைச்சர்) நிதி திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள் மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. திரு. க. இராமச்சந்திரன்: (மின் துறை அமைச்சர்) மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கூட்டுறவு, ஆவணப் பதிவுத் துறையும்.

5. திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (வருவாய்த் துறை அமைச்சர்) வருவாய், வணிக வரிகள், ஆயத் துறை.

6 திரு. க. உரோ. எட்மண்ட்: (உணவுத் துறை அமைச்சர்) உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு.

7. திரு. இராம. வீரப்பன்: (செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்) செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சிங்கோனா உட்பட வனங்கள்.

8. திரு. க. நாராயணசாமி முதலியார்: (சட்ட அமைச்சர்) சட்டம் நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல் சீட்டுநிதிப்பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. திரு. செ. அரங்கநாயகம்: (கல்வி அமைச்சர்) தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. **திரு. கா. காளிமுத்து :** *(உள்ளாட்சித் துறை அமைச்சர்)* நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம்.

11. **திரு. எஸ். இராகவானந்தம் :** *(தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)* தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரஅமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** *(அரிசன நலத் துறை அமைச்சர்)* அரிசன நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. **திரு. சி. பொன்னையன் :** *(போக்குவரத்துத்துறை அமைச்சர்)* போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

14. **திரு. ப. குழந்தைவேலு:** *(வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர்)* வேளாண்மை, வேளாண்மை மறுநிதி. வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது). வேளாண்மை பொறியியல்.

15. **திரு. கா. இராசா முகமது :** *(ஊரகத் தொழில் துறை அமைச்சர்)* கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

16. **திரு. ஆர். சௌந்திரராஜன் :** *(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)* மக்கள் நல்வாழ்வுத்துறை.

17. **செல்வி பி. டி. சரஸ்வதி :** *(சமூக நலத்துறைஅமைச்சர்)* மகளிர், குழந்தைகள் நலம்உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள் அகதிகள், வெளியேற்றப்பட்ட வர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. **திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** *(கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்)* கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.

அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்

1.	திரு. எம். வின்செண்ட்:	நிதி அமைச்சரின் பேரவைச் செயலர்.
2.	திரு. ஆலூர் ஜெகதீசன்:	கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
3.	திரு. பி. முசிரிபுத்தன்:	வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
4.	திரு. ஐசரி வேலன்:	செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
5.	திரு. எம். ஏ. ஜெயவேலு:	சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.
6.	திரு. ஆ. வெள்ளைச்சாமி:	கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.
7.	திரு. ப. கோ. கிட்டு:	போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
8.	திரு. இரா. அருணாசலம்:	மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru PRABHUDAS PATWARI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large scale Industries, Mines and Minerals.

2. HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Finance, Planning, Legislature and Public Works (Buildings).

3. HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)—Co-operation, Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)—Revenue, Commercial Taxes and Excise.

6. HON. THIRU G. R. EDMUND (*Minister for food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayats Unions, Rural indebtedness and Bhoodan and Gramdan.

11. Hon. Thiru S. RAGAVANANDAM (*Minister for Labour*)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, Accommodation Control.

12. Hon. Thiru P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. Hon. Thiru C. PONNAIYAN (*Minister for Transport*)—Transport, Motor Vehicles Acts, Highways and Ports.

14. Hon. Thiru P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. Hon. Thiru K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)—Rural Industries including village, cottage and small industries, Milk and Dairy Development and Waqfs.

16. Hon. Thiru THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)—Health.

17. Hon. Selvi P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians—Overseas, Refugees and Evacuees; Correctional Administration.

18. Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)—Handlooms, Khadi, Textiles and Yarn.

PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finance.

2. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

3. THIRU P. MUSIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

4. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

5. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

6. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

7. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

8. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜே. இராமசாமி
2. திரு. பி.எச். பாண்டியன்
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்.
5. திரு. ரா. உமாநாத்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.,

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஆனர்ஸ்)

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி. ஏ.,

திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (எஸ்டேட் அலுவலர்.

தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்,

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

12–2–1979 அன்று அறிவிக்கப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கபபெற்ற) பெயர்ப் பட்டியல். (தொகுதிகள் உள்பட.)

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
1 அண்ணாமலை, திரு. எம். ..	அரூர் (செ.வ.).
2 அப்துல் ரசாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3 அப்துல் லத்தீப், திரு. கி. ..	கடலூர்.
4 அப்புனு கவுண்டர், திரு. கா.	பென்னகரம்.
5 அம்பிகாபதி, திரு. மு. ..	மன்னார்குடி.
6 அமிர்தராஜ், திரு. இரா. ..	திருச்செந்தூர்.
7 அய்யாச்சாமி, திரு. ரா. ..	தாராபுரம் (செ.வ.)
8 அர்ச்சுனன், திரு. வீ.	ஆரணி.
9 அரங்கசாமி, திரு. க.	குன்னூர் (செ.வ.)
10 அரங்கநாதன், திரு. அ. க. ..	வேலூர்.
11 அரங்கநாதன், திரு. மு. ..	திருவல்லிக்கேணி, சென்னை.
12 அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	கோயம்புத்தூர்-மேற்கு.
13 அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	நாமக்கல் (செ.வ.).
14 அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி.
15 அன்பழகன், திரு. க. ..	புரசைவாக்கம், சென்னை.
16 அன்பழகன், திரு. தி. ..	நாட்ராம்பள்ளி.
17 ஆண்டி அம்பலம், திரு.மெ. ..	நத்தம்.
18 ஆதீசுவாமி, திரு. இரா. ..	குளச்சல்.
19 ஆறுமுகம், திரு. இல. ..	திருநாவலூர்.
20 ஆறுமுகம், திரு. எச். ஜி. ..	பர்கூர்.
21 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
22 ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
23 ஆறுமுகம், திரு. சேலம் மு. ..	சேலம்-2.
24 இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25 இராசரத்தினம், திரு, து. ..	பூந்தமல்லி.
26 இராதா, திரு. எஸ். ஆர். ..	கும்பகோணம்.
27 இராமச்சந்திர ரெட்டி, திரு. .. என்.	ஹோசூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி (2)
28	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்.)	அருப்புக்கோட்டை.
29	இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். ஆர்.	சாத்தூர்.
30	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
31	இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.	செஞ்சி.
32	இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
33	இராமசாமி, திரு. எஸ்.ஜே. ..	சோளிங்கர்.
34	இராமசாமி, திரு. கே. என்.கே.	கோபிசெட்டிப்பாளையம்.
35	இராமசாமி, திரு. கொ.	சிவகாசி.
36	இராமசாமி, திரு. த. ..	இராமநாதபுரம்.
37	இராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோவில்.
38	இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்.
39	இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	தல்லி.
40	இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
41	இளங்கோவன், திரு. கோ. ..	திருவையாறு.
42	ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
43	உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி.
44	உச்சி, திரு. கே.	கூடலூர்.
45	உத்திராபதி, திரு. பொ. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
46	உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டினம்.
47	உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
48	எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்).	திருநெல்வேலி.
49	எத்ராஜ், திரு. கி.	அச்சரபாக்கம் (செ.வ.).
50	ஏகாம்பர ரெட்டி, திரு. ..	பள்ளிப்பட்டு.
51	ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை
52	கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
53	கணேசன், திரு. இ. ..	எடப்பாடி.
54	கணேசன், திரு. எஸ். ..	பூம்புகார்.
55	கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு.
56	கந்தசாமி, திரு. கே. ..	ஆண்டிப்பட்டி.
57	கபாலி, திரு, டி. கே. ..	மயிலாப்பூர்-சென்னை.
58	கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
59	கருணாநிதி, திரு. மு. ..	அண்ணாநகர், சென்னை
60	கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ. வ.)
61	கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
62	கருப்பசாமி பாண்டியன் திரு. வி.	ஆலங்குளம்.
63	கலியமூர்த்தி திரு. துரை. ..	சிதம்பரம்.
64	காத்தமுத்து, திரு. கி. பெ.	தொட்டியம்.
65	காளிமுத்து, மாண்புமிகு திரு கா. (அமைச்சர்)	திருப்பரங்குன்றம்.
66	காளியப்பன், திரு. இரா.	ஏற்காடு (ஆ. வா.)
67	காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி.
68	கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
69	கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	பல்லடம்.
70	கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71	கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.)
72	கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்.
73	கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
74	கிருஷ்ணன், திரு. ரா ..	வாசுதேவநல்லூர் (செ.வ.
75	குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
76	குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ. வ.)
77	குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
78	கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்.
79	கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80	கோவிந்தராசன், திரு. சி.	நெல்லிக்குப்பம்.
81	கோவிந்தன், புலவர் ..	கா. செய்யாறு.
82	கோவேந்தன், திரு. மு. ரெ.	பேராவூரணி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
83 சங்கரய்யா, திரு. என். ..	மதுரை கிழக்கு.
84 சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
85 சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
86 சண்முகம், திரு. கூத்தக்குடி ச.	திருப்பத்தூர்.
87 சண்முகம், திரு. ப. உ. ..	திருவண்ணாமலை.
88 சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89 சந்திரசேகரன், திரு. ஆ. ..	கம்பம்.
90 சந்திரன், திரு. ப. ..	பெரணமல்லூர்.
91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியாகராய நகர், சென்னை.
92 சமரசம், டாக்டர், கே. ..	காவேரிப்பட்டிணம்.
93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்).	திருமங்கலம்.
94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபனாசம்.
95 சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை.
96 சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97 சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.)
98 சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99 சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி
100 சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101 சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
102 சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103 சின்னையா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.)
104 சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106 சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107 சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.
108 சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
109 சுந்தரராஜன், திரு, மு. ..	விருதுநகர்.
110 சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111 சுப்பிரமணியம், திரு. ஆ. சி. ..	கடலாடி.
112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113 சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதி
	(1)	(2)
114	சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
115	சுப்பிரமணியன், திரு. ஓ. ..	சிவகங்கை.
116	சுப்பிரமணியன், திரு. மா. ..	சின்னசேலம்.
117	சுப்பிரமணியன், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.)
118	சுப்ரவேலு, திரு. கா. ..	சீர்காழி (செ.வ.)
119	சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120	சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்). ..	மொடக்குறிச்சி.
121	சுட்பையா, திரு. ச. ..	சங்கரநயினார் கோவில் (செ.வ.)
122	சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123	செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
124	செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
125	செல்லப்பா, திரு. அ. ..	வலங்கைமான் (செ.வ.)
126	செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127	செல்வராஜ், திரு. சீனி ..	சமயநல்லூர் (செ.வ.)
128	செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129	சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ.வ.)
130	சோமசுந்தரம், திரு. ஓ. ப. ..	பொள்ளாச்சி.
131	சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
132	சௌந்திரராஜன், திரு. கே.	திருச்சிராப்பள்ளி-2.
133	சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்)	ஸ்ரீரங்கம்.
134	சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி.
135	ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.
136	தங்கவேல், திரு. ர.ச. ..	வால்பாறை (செ.வ.)
137	தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
138	தண்டபாணி, திரு. ரா.க.சு.	காங்கேயம்.
139	தமிழரசன், திரு. இ. ..	பேரணாம்பட்டு (செ.வ

	தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
140	தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141	தனபால், திரு. ப. ..	சங்கரி (செ.வ.)
142	தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம் (செ.வ.)
143	தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144	திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்).	அறந்தாங்கி.
145	திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146	துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா).	திருவோணம்.
147	துரைசாமி, திரு. ப. ..	ராசிபுரம்.
148	துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149	துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150	துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ.வ.)
151	துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
152	தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153	நடராசன், திரு. ஆர். ..	பேரூர்.
154	நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155	நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156	நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157	நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி.	மேட்டூர்.
158	நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159	பட்டாபிராமன், திரு. செ. ..	திருவள்ளூர்.
160	பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161	பரமசிவம், திரு. மொ. ..	வானூர் (செ.வ.).
162	பரமசிவன், திரு. ஏ. எம். ..	மேலூர்.
163	பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164	பழனிசாமி, திரு. சொ. நா.	அவினாசி.
165	பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166	பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167	பழனிவேல், திரு. என். ..	பழனி (செ.வ.).
168	பாண்டியன், திரு. பி. எச். ..	சோரன்மாதேவி.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
169	பாலகிருஷ்ணன், திரு. சோ. ..	முதுகுளத்தூர்.
170	பாலகுரு, திரு. வெ. ..	சோழவந்தான்,
171	பாலன், திரு. சு.	பெரம்பூர், சென்னை.
172	பாலாஜி, திரு. க. ..	காஞ்சிபுரம்.
173	பாலுச்சாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ.வ.).
174	புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175	புஸ்பராஜு, திரு. த.	ஆலங்குடி.
176	பெரியசாமி, திரு. டி. பி. எம்.	மதுரை மேற்கு.
177	பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ. வ.)
178	பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
179	பெருமாள், திரு. என்.	வரகூர் (செ. வ.)
180	பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181	பொன்னுசாமி, டாக்டர் ஏ.	பெருந்துறை.
182	பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம், சென்னை.
183	பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்)	திருச்செங்கோடு.
184	மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
185	மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.).
186	மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை. (செ. வ.)
187	மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188	மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்)	பாளையங்கோட்டை.
189	மாணிக்கம், திரு. சி... ..	திருச்சிராப்பள்ளி-1.
190	மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191	மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் ..	(நியமன உறுப்பினர்).
192	மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை.
193	மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
194	முசிரிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	முசிரி.
195	முத்துசாமி, திரு. பா. கா. சி.	தர்மபுரி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும்	உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
196	முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
197	முத்துசாமி கரையாளர், திரு. சு.	தென்காசி.
198	முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
199	முத்தையா, திரு. கே. கே. ..	மருங்காபுரி.
200	முருகேசன், திரு. கூ.ச. ..	திருவரம்பூர்.
201	முனிரத்தினம், திரு. இரா. ச.	கும்மிடிபூண்டி.
202	முனுஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்) ..	தாம்பரம்.
203	முனுசாமி, திரு. பொ. ..	வந்தவாசி (செ.வ.).
204	மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
205	யூசுப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
206	ரகுமான்கான், திரு. அ. ..	சேப்பாக்கம்-சென்னை.
207	ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.
208	ரகோத்தமன், திரு. கோ. ..	முகையூர்.
209	ரசாக், திரு. எம். எம். ஏ. ..	கடையநல்லூர்.
210	ரமணி, திரு. கு.	கோயம்புத்தூர் கிழக்கு.
211	ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212	ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213	ராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214	ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. ..	புதுக்கோட்டை.
215	ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ. வ.).
216	ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ.வ.).
217	லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218	லத்தீப், திரு. எம். ஏ. ..	வாணியம்பாடி.
219	வடிவேல், திரு. கு. ..	கரூர்.
220	வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221	வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222	வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223	வின்சென்ட், திரு. எம். .. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	நாகர்கோவில்.
224	விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)		தொகுதி (2)
225	வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
226	வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	ஆத்தூர்.
227	வேங்கா கவுண்டர், திரு. பி...	வீரபாண்டி.
228	வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229	வேலுச்சாமி, திரு. ஓ. சோ.	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
230	ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	செங்கல்பட்டு.
231	ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232	ஜெபமணி, திரு. ர. ..	சாத்தான்குளம்.
233	ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234	ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	காட்பாடி.
235	ஜேம்ஸ், திரு. ஜே. ..	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1 திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
2 திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
3 திரு. ஆர். எம். வீரப்பன்.
4 திரு. கே. நாராயணசாமி.
5 திரு. எஸ். இராகவானந்தம்.
6 திரு. கே. இராஜா முகமது.

தலைமை வழக்கறிஞர் —

திரு. வி. பி. இராமன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1979 மார்ச் 3

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள் (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

பூச்சி மருந்து தெளிக்கும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களது குடும்பங்களுக்கு உதவி.

*வினா எண். 198—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வயல்களில் பூச்சி மருந்து தெளிக்கும் போது நச்சு வாயுவால் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு உதவிப்பணம் வழங்கும் யோசனை உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அந்தத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, வயல்களில் பூச்சி மருந்து தெளிக்கும்போது அந்தத் தொழிலாளர்கள் நச்சு வாயுவால் பாதிக்கப்பட்டு விடுகிறபோது உதவித்தொகை அளிக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். மருந்து தெளிக்கும்போது நச்சுவாயுவால் பாதிக்கப்பட்டு இறந்து போவது மட்டுமல்லாமல் சிலபல நேரங்களில் வயல்களில் வேலை செய்யும்போது விவசாயிகள் நச்சுப்பாம்புகளால் கடிபட்டும் இறந்து விடுகிறார்கள். அவர்களுக்கும்—அத்தகைய பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் உதவிப்பணம் வழங்க அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அப்பேர்ப்பட்ட திட்டம் இன்றைக்கு அரசின் ஆலோசனையில் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு ஆய்வு செய்யலாம் ஆனால் வயல்வெளிகளில் பாம்பு கடித்து யாரும் இறந்து விட்டதாகத் தகவல் இல்லை. ஏனென்றால் வயல்வெளிகளில் நச்சுப் பாம்புகள் இருப்பது இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கிட்டப்பா கேட்கிறானே என்று வேண்டுமானால் அவர்கள் அப்படி நிலைத்தி

ருக்கலாம். வயல்வெளிகளில் தண்ணீர்ப்பாம்பு மட்டுமல்ல. விஷப் பாம்புகளும் இருக்கின்றன. எல்லா நேரங்களிலும் வயல்வெளி களில் விஷப்பாம்பு இருப்பதில்லை என்பது தெரியும். தண்ணீர் இல்லாத நேரங்களில், கோடையில் வெடிப்பு ஏற்படுகின்ற நேரங்களில் நச்சுப் பாம்புகள் இருப்பது உண்டு. அத்தகைய நேரங்களில் வயல்வெளிகளில் பாடுபடுகின்ற தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, கிட்டப்பாவை மறந்துவிட்டு நச்சுப்பாம்புகளை நினைத்து, பாதிக்கப்படுகின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர் களே, நான் நிச்சயமாக நச்சுப் பாம்பையும், கிட்டப்பாவையும் ஒரே மாதிரியாக எண்ணிப்பார்க்க மாட்டேன். திரு. கிட்டப்பா சொல்வதைப்போல கோடைக் காலங்களில் வயல்வெளிகளில் நச்சுப்பாம்பு இருக்கிறது. ஆனால் தண்ணீர் பாய ஆரம்பித்த வுடன் நல்லபாம்பு போன்ற நச்சுப் பாம்புகள் போய்விடுகின்றன சாரைக்கடா, தண்ணீர் பாம்பு போன்ற பாம்புகள்தான் இருக்கும். கோடைக் காலங்களில் நச்சுப்பாம்புகளால் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவதால் எதிர் காலத்தில் அரசு அதுபற்றி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் நச்சுப்பாம்பை மட்டும் குறிப்பிட்டார்கள். பொதுவாக விவசாயத் தொழிலாளர்கள் எந்தவிதமான சமூக பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள். விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது ஏதாவது ஒருவித ஆபத்து ஏற்படும் சந்தர்ப்பம் இருக்கிறது. அம்மாதிரியாக, வேலை செய்து கொண்டிருக்கும்போது எந்தவிதமான விபத்தில் இறந்து போனாலும் அவர்களுடைய குடும்பங்களுக்கு சலுகை, உதவி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர வர்களே, இன்றைக்கு நடைமுறையில் இருப்பது, பனை மரம், தென்னைமரம் ஏறும்போது விபத்துக்குள்ளாவோர், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளில் கழிவு நீரை அப்புறப்படுத்தும் போது விபத்துக்குள்ளாவோர், விவசாயத்திற்கு அல்லது குடி நீருக்கு கிணறுகளை ஆழப்படுத்தும்போதும், புதிதாக வெட்டும் போதும் விபத்துக்குள்ளாவோர் ஆகியோர் குடும்பங்களுக்கு 5000 ரூபாய் உதவித் தொகை அளிக்கும் திட்டம் இருக்கிறது. இவைகள் மட்டுமல்லாமல் இன்னும் எவை எவைகளைச் சேர்த்தால் உண்மையாக வேலை செய்திறபோது ஆபத்துக்குள் ளாகும் குடும்பங்களுக்கு உதவ முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதை அரசு பரிசீலனை செய்யும்.

1979 மார்ச் 3]

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, வெற்றிலை கொடிக்கால் தோட்டங்களில் வேலை செய்யும் போது சீர்த்த மண்டலம் என்ற ஜீவனால் பாதிக்கப்பட்டு, உடனடியாக இறந்து விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்கள் ஏராளமான பேர் இப்படிப்பட்ட சமூகப்பாது காப்பற்று இருக்கிறார்கள். விவசாயத்தில் மட்டுமல்ல; வேறு பல வகைகளிலும் இருக்கிறார்கள்; கிணறு வெட்டும்போது மண்மூடி இறந்துவிடுகிறார்கள். பூச்சி மருந்து தெளிக்கும் போது இறந்து விடுகிறார்கள்: மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் சொன்னமாதிரி விஷப்பாம்புகள் கடிப்பதால் இறந்து விடுகிறார்கள்: தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது பல்வேறு காரணங்களால் இறந்து விடுகிறார்கள். இப்படி பல்வேறு வகைகளில் விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப் படுகின்றார்கள். அத்தகைய பாதிப்புகளுக்கு உள்ளான எல்லாக் குடும்பங்களுக்கும் உதவி செய்யும் ஒரு திட்டத்தை செயல் படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, தோட்டக் காடுகளிலேயும் விஷப்பாம்பு இருக்கும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இதுவரையிலும் அரசினுடைய கவனத்திற்கு இதுபற்றிக் கொண்டுவரப்பட வில்லை. இப்போதுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே அதுபற்றி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரி வித்துக் கொள்கிறேன். அடுத்து நான் முதலிலேயே சொன்னபடி கிணறு வெட்டுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போதும் ஆபத்துக்கள் ஏற்பட்டால் உதவிப் பணம் கொடுப்ப தற்கு அரசாங்கத்தினுடைய ஆணையிலே இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலை நடைமுறையில் இருந்தாலும் அது தங்களுக்கெல்லாம் கிடைக்க வில்லை என்ற ஐயப்பாட்டின் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் அதுபற்றி குறிப்பிட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். ஆகவே எங்கெங்கே இந்த உதவி சரியாகக் கிடைக்கவில்லை என்று சொன்னால், அது குறித்து அவர்கள் மனு செய்தால் அது குறித்து ஆராய்வதற்கு அரசு பின்வாங்காது. இந்தத் திட்டம் ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதுதானே தவிர வேறொன்றும் இல்லை.

4 [1979 மார்ச் 3

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயக் காலங்களிலே வயல் வெளிகளிலே நல்ல பாம்பு இருப்பது இல்லை. அதைச் சார்ந்த, அதன் ஆண் இனமாகிய சாரைப்பாம்பு இருக்கிறது. அதுவும் அந்த அளவுக்கு வீரியம் உள்ள பாம்புதான். மாண்புமிகு அமைச்சரவர்கள சாரைக்கடா பாம்பு என்று குறிப்பிட்டார்கள். ஆகவே சாரைக் கடா என்று ஒரு பாம்பு உண்டா என்று தெரிந்து கொள்கிறேன். அடுத்த பாம்பு கடித்து இறந்தாலும் அல்லது வேறு விவசாயத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும்போது விபத்துக்கள் ஏற்பட்டு அதில் இறந்தாலும் அவர்களுடைய குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, முதலில் இந்த உதவி ஆயிரம் ரூபாய் என்ற அளவிலேதான் இருந்தது. ஆனால் சென்ற ஆண்டு அதாவது 1978-79 வரவு செலவுத் திட்டத்தின்போது இந்த அரசு புதியதாக ஒரு திட்டத்தை அறிவித்து ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, அது மிகக் குறைந்த தொகை என்று கருதிய காரணத்தால் 5 ஆயிரம் ரூபாய் என்று ஆக்கி இருக்கிறது. ஆனால் இன்றைக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது பற்றிச் சொல்கிறார்கள். அரசு அதைப்பற்றி யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரப்பிக்குளம் ஆளியாறு ஆயக்கட்டுகளில் தண்டத் தீர்வை

* வினா எண். 199—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத்தில் பரம்பிக்குளம் ஆளியாறு பாசனப் பகுதிகளில் விதிக்கப்பட்டுள்ள தண்டத் தீர்வையை ரத்து செய்ய வேண்டும் என்று மார்ச்-ஏப்ரல் மாதத்தில் விவசாயிகள் குழு ஒன்று அமைச்சர்களை சந்தித்து கோரிக்கை வைத்ததா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே, இந்தத் தண்டத் தீர்வை விதித்து இருப்பது தாலுக்காவாரியாக எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தத் தண்டத் தீர்வை ரத்து செய்யப்பட வேண்டும். ஏனென்றால்

1979 மார்ச் 3]

விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே அவர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து இந்தத் தண்டத் தீர்வையை ரத்து செய்ய அரசாங்கம் உறுதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்தத் தண்டத்தீர்வை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் வருவாய்த்துறை அமைச்சராக இருந்தபோது கோயம்புத்தூரிலே அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டது, அந்தக் கமிட்டியிலே தண்டத் தீர்வை பற்றி தீர்மானித்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின்படி 1381-ஆம் பசலி வரைக்கும் உள்ள தண்டத் தீர்வையை ரத்து செய்வது என்றும் அதற்குப் பிறகு 1382,1383,1384-வது பசலிகளுக்கு தண்டத் தீர்வை இரண்டு மடங்காகப் போடுவது என்றும் அதற்குப் பிறகு 5 மடங்காகப் போடுவது என்றும் முடிவு செய்தார்கள். அதுமட்டுமல்ல. எந்தெந்த நிலம் நஞ்சை ஆயக்கட்டிலே இருக்கிறது என்றும், எந்தெந்த நிலம் புஞ்சை ஆயக்கட்டிலே இருக்கிறது என்றும் தெரிந்து கொண்டு நஞ்சை ஆயக்கட்டிலே புன்செய் பயிர் செய்தால் தண்டத் தீர்வை போட வேண்டும் என்றும் அவர்கள் வருவாய்த் துறை அமைச்சராக இருக்கும்போது தெரிவித்தார்கள். ஆகவே அதன்படிதான் இப்போது நாங்களும் நடக்கிறோம். ஆனால் இன்றைக்கு அதைப்பற்றி எல்லாம் விவசாயிகள் அரசிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அது குறித்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு பகுதிகளிலே இந்தத் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியிலே உள்ள வாய்க்கால் கசிந்து நீர் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே நெல்லைத் தவிர வேறு பயிர்கள் போட முடியாத நிலைமை இருக்கிறது. ஆனால் ஒரு முறை நெல்லும் இன்னொரு முறை புஞ்சை பயிரும் மகசூல் செய்ய வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆகவே அவர்கள் வேறு என்ன பயிர் விதைத்தாலும் அவர்களுக்கு தண்டத் தீர்வை 100 ரூபாய், 150 ரூபாய் என்று போடப்பட்டுவிடுகிறது. அந்தப் பகுதியிலே நீர் கசிந்துகொண்டிருப்பதால் வேறு பயிரும் வைக்க முடியாது. இந்த மாதிரி நிலைமையினை அமைச்சரவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன். ஆகவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இந்தத் தண்டத் தீர்வை என்பதை அறவே நீக்குவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 3

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும். கசிவுநீர் எங்கெங்கு ஏற்படும் என்றால் அந்த நிலம், ஓடுகிற வாய்க்காலைவிட தாழ்ந்த இடத்தில் இருந்தால் கசிவுநீர் ஏற்படலாம். சுற்றிலும் நன்செய் இருந்தால் கசிவுநீர் ஏற்பட முடியும். கசிவுநீர் எங்கெங்கு ஏற்படும் என்று பார்த்து, கசிவு நீரால் பாதிக்கப்பட்ட நிலங்களை நன்செய் ஆயக்கட்டில் சேர்ப்பதற்கு — இதுபற்றி முன்னாள் அமைச்சர் அவர்கள் தீர்மானம் போட்டு சேர்த்திருக்கிறார்கள். அதில் கவனக்குறைவு ஏதாவது இருந்தால் அங்குள்ள விவசாயிகள் சொன்னால் இந்த அரசு கவனிக்கும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தண்டத் தீர்வை மொத்தம் எவ்வளவு விதிக்கப்படுகிறது என்ற என் கேள்விக்கு பதில் இல்லை. நாங்கள் தண்டத் தீர்வையை ரத்து செய்திருந்தோம், அதனால் நாங்கள் நல்ல பெயர் வாங்க முடிந்தது. அதே நல்ல பெயரை நீங்களும் வாங்கிக் கொள்வீர்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நல்ல பெயர் வாங்குவதில் பலவிதம் உண்டு. நல்லதைச் செய்து நல்ல பெயர் வாங்குவதுண்டு. நல்லதைச் செய்தும் நல்ல பெயர் வாங்காமல் இருப்பதும் உண்டு. கெட்டதைச் செய்து, மக்களுக்குத் தெரியாமல் செய்துவிட்டு நல்லதுமாதிரியாக்கி நல்ல பெயர் வாங்குவதும் உண்டு. இந்த அரசை பொறுத்தவரையில், நல்ல பெயர் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் மக்களுக்கு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். நல்ல பெயர் வந்தாலும் வரட்டும், போனாலும் போகட்டும். அதைப் பற்றி கவலையில்லை. முதலில் நீங்கள் 1381 பசலியில் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். 1382,1383,1384 பசலிகளுக்கு இரண்டு மடங்கு போடவேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகுள்ள பசலியில் ஐந்து மடங்கு போடவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறீர்கள். அந்தத் தீர்மானம்இன்று நடைமுறையில் இருக்கிறது. அதைமறுபரிசீலனை செய்யவேண்டும் என்று இப்போது உள்ளவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மறுபரிசீலனை செய்ய இந்த அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

வெள்ளிங்கிரி மலைச்சாலை

*வினா எண். 200— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1979 மார்ச் 3]

கோவை மாவட்டம் வெள்ளிங்கிரி மலையில் உள்ள கோவிலுக்குச் செல்ல மலைப்பாதை அமைக்கும் திட்டம் பரிசீலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. ஆ. நடராசன் : அந்தக் கோவில் ஏழுமலைகளைக் கொண்டிருப்பதால் அந்தப் பகுதியில் ஏராளமான பக்தர்கள் வந்து செல்வதற்கு அங்கே பாதை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்தக் கோவில் மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடரிலிருந்து ஏழு மைல் தொலைவில் ஆறாயிரம் அடி உயரத்தில் உள்ளது. அதை அடைகிறவழிகளில் கடுமையான புதர்களும், அடர்ந்த காடுகளும், செங்குத்தான பாறைகளும் உள்ளன. ஆகவே கோடிக்கணக்கான ரூபாய் செலவிட்டால்தான் அதற்கு பாதைகள் அமைக்க இயலும். எனவே அது பற்றிய பரிசீலனை இப்போது அரசினிடம் இல்லை.

பிளவக்கல் அணைப்பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

* வினா எண். 201—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு சுற்றுலா வாரியம் திருவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள பிளவக்கல் அணைக்கட்டு பகுதியை சுற்றுலாவுக்கான இடம் என்று ஏற்றுக்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு, ஆர். எம். விரப்பன்: பிளவக்கல் அணைக் கட்டுப் பகுதி சுற்றுலா மையமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும் அதை மாவட்ட உலாத் தலமாக (District Excursion Centre) பயன்படுத்தபரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : வட நாட்டிலிருந்து வருகிற யாத்திரீகர்கள், அவர்கள் இங்கு வரும்போது மதுரையில் உள்ள மீனாட்சி அம்மன் கோவில் மற்றும் ராமேஸ்வரத்திற்கு சென்று விட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோவிலுக்கும் சென்று விட்டு செல்கிறார்கள். ஆகவே அந்தப் பிளவாக்கல் அணைக்கட்டுப் பகுதியை சுற்றுலா மையமாக்கினால் தினந் தோறும் வரும் பிரயாணிகள் பார்த்து மனம் மகிழ்ந்து செல்ல ஏதுவாக இருக்கும். எனவே அப்பகுதியை சுற்றுலா மையமாக்

கினால் அந்தப் பகுதிகள் செழிப்படையும் என்பதோடு அந்தப் பகுதி மக்கள் மனதில் ஒரு எழுச்சியும் ஏற்படும் என்பதால் அமைச்சர் அவர்கள் இதில் நேரடி கவனம் செலுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர், எம், வீரப்பன் : நான் நேரடி கவனம் செலுத்தும் முறையில் அந்தப் பகுதியை சென்ற ஆண்டு நேரில் சென்று பார்வையிட்டேன். அங்கு கோவிலாறு, பெரியாறு என்ற இரண்டு அணைத்தேக்கங்கள் இருக்கின்றன. அதையொட்டி அந்தப் பகுதியை நல்லமுறையில் மக்கள் வந்து விடுமுறைக் காலங்களில் பொழுதுபோக்கிச் செல்லவும் கண்டு மகிழ்ந்து? செல்லவும் அவ்வகையில் ஏற்பாடுகள் செய்ய இயலும் என்று தெரிவித்து அது சம்பந்தமாக பொதுப்பணித்துறை மற்றும் இரிகேஷன் துறையும் சேர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று சுற்றுலாத்துறை கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஆசிரியர் பயிற்சியில் புதிய முறை

*வினா எண், 202—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆசிரியர் பயிற்சியில் இதுவரை கையாளப்பட்டு வந்த முறையை கைவிட்டு புது முறையை கையாள அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ)&(ஆ) : 1977—1978—முதல் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சிக்கான திருந்திய பாடத்திட்டம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் அமுலுக்கு வந்துள்ளது, அதனை மாற்றும் உத்தேசம் எதுவும் இல்லை.

திரு, என். கிட்டப்பா : ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தற்போது திராவிட முன்னேற்றக் கழகக் காலத்தில் இருந்த அளவுக்கு இல்லாமல் பெரும்பாலும் மூடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சில பயிற்சிப் பள்ளிகளே இருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியர்கள்—மாணவர்கள் முறை ஒழுங்குபடுத்தப்பட்டால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கும் வேலை கிடைக்கும் என்ற நிலை இருப்பதால், இந்த முறையை பின்பற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதுடன், புதிதாக ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளை திறக்க முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 3]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் ஆசிரியர்களின் தேவைகள் கருதியும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் பெரும்பான்மையாக வேலையில்லாதிருக்கும் நிலையை தவிர்க்கும் பொருட்டும் ஆசிரியப் பயிற்சி பள்ளிகளில் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது. இக்காரணத்தால் 1972—1973&1974—1975—ல் மாணவர்கள் ஆசிரியப் பயிற்சி பள்ளியில் சேர்க்கப்படவில்லை. இரண்டாம் ஆண்டு வகுப்பு மட்டுமே அப்போது நடந்தது. மாணவர்களைச் சேர்த்தலில் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. 1972—1973-க்கு முன்பு 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். ஆனால் மேற்கண்ட ஆணையின்படி ஒரு வகுப்புக்கு 30 மாணவர்களும், ஒவ்வொரு ஆசிரியப் பயிற்சி பள்ளியிலும் ஒரே ஒரு வகுப்பு மட்டுமே இருக்க வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் ஆசிரியப்பயிற்சிப் பள்ளியில் எண்ணிக்கை குறைக்கப்பட்டு ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் 2 ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் (ஒன்று ஆண்களுக்கும், ஒன்று பெண்களுக்கும்) நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 30—லிருந்து 25 ஆக மீண்டும் குறைக்கப்பட்டது. இருந்தபோதிலும் 10 மாணவர்கள் அதிகமாக தகுந்த காரணங்களுக்காக தகுதியுடையவர்களை சேர்த்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்களையும் மாணவர்களையும் மனதில் வைத்துத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இவ்விதம் செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, எட்டாவது வரை படித்துவிட்டு இடைநிலை ஆசிரியர்களாக 25 ஆண்டுகளாக 30 ஆண்டுகளாக எந்தவிதமான உயர்வும் பெறாமல், இடைநிலை ஆசிரியர் என்ற நிலையிலேயே ஓய்வு பெற வேண்டிய நிலையில் தான் இப்போது இருந்து வருகிறார்கள். ஆனால் அண்டை மாநிலங்களில் இப்படிப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு குறுகிய கால பயிற்சி கொடுத்து முதல்நிலை உயர்வு கொடுத்து வருகிறார்கள். அதுபோன்ற ஒரு கோரிக்கை இடைநிலை ஆசிரியர்களிடமிருந்து தமிழக அரசுக்கு வந்திருக்கிறது. அதை இந்த அரசு பரிசிலித்து அவர்களுக்கு நல்லதொரு முடிவை ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்களில் தகுதி பெற்றவர்களுக்கு முதல்நிலை தகுதி அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

[1979 மார்ச் 3

திரு. க. சுப்பு: ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களுக்கு இடம் கிடைக்காமல் மிகவும் திண்டாடுகிறார்கள். செகண்டரி கிரேட் டீச்சர்ஸ்-க்கு என்ன பயிற்சி கொடுக்கப்படுகிறதோ அதே பயிற்சித்தான் இவர்களுக்கும் அளிக்கப்படுகிறது, ரொம்ப வித்தியாசம் இல்லை, சிறிய வித்தியாசங்கள் இருக்கலாம். ஆகவே செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும்போதே தமிழ் ஆசிரியர்களுக்கும் சேர்த்து பயிற்சி அளிப்பதற்கு ஒரு திட்டம் வகுத்தால், நிறையப் பேர்களுக்கு இடம் கிடைக்கும், இதன் மூலம் இடம் கிடைக்கவில்லை என்ற பிரச்னையையும் தீர்க்கலாம். ஆகவே இதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு தரப்படும் பயிற்சி போலவே புலவர் தகுதியுள்ள தமிழ் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, தமிழ் புலவர் பட்டம் பெற்ற தமிழ் ஆசிரியர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு இரண்டு முறை மட்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் புலவர் பட்டம் பெற்ற பெண் ஆசிரியர்களுக்கு இடம் கிடைப்பதில் மிக கஷ்டங்கள் இருக்கின்றன. முக்கியமாக இந்த பயிற்சிகளில் புலவர் பட்டம் பெற்ற பெண் தமிழ் ஆசிரியர்களுக்கு இடம் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பெண்களுக்கு தரப்படுகின்ற பயிற்சியில் பெண்களுக்கு இடம் கிடைப்பதில் சிரமம் இருக்கிறது என்று சொல்வதன் மூலம் இந்தப் பயிற்சியில் ஆண்களை மட்டும் தான் சேர்த்துக் கொள்ளப்படுவது போன்ற கருத்து தொனிக்கிறது. பெண்களுக்கான பயிற்சியில் பெண்கள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆசிரியர்களது ஓய்வூதியம்.

* வினா எண். 203—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1-10-1970-க்குமுன் ஓய்வுபெற்ற ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

(இ) மற்ற சலுகைகள் என்ன?

1979 மார்ச் 3]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) 1-10-70-க்கு முன்னர், ஆனால் 1-6-70-க்கு பின்னர் ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் 1-10-70—க்குப்பின் ஒய்வுபெற்ற ஆசிரியர்களைப் போல தளர்த்தப்பட்ட ஒய்வூதிய விதிகளின்படி ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. இவ்விதிகளின்படி ஒய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு அரசு ஊழியர்களைப் போலவே உயர்ந்த அளவு 33/80 என்ற விகிதத்தில் ஒய்வூதியம் அளிக்கப்படுகிறது.

1-6-70-க்கு முன் ஒய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு பணிக்காலம் மற்றும் ஒய்வு பெறுவதற்குமுன் பெற்ற கடைசி 12 மாதங்களில் சராசரி ஊதியம் ஆகியவற்றின் அடிப்படையில் உயர்ந்த அளவு 30/120 என்ற விகிதத்தில் ஒய்வூதியம் அளிக்கப்படுகிறது.

1-10-70-க்கு முன் ஆனால் 1-6-70-க்குப்பின் ஒய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு பணிக்கொடையும், குடும்ப ஒய்வூதியமும் உண்டு. 1-6-70-க்கு முன்-ஒய்வுபெற்ற ஆசிரியர்கள் தனது வருங்கால வைப்பு - நிதியின் இருப்பில் உள்ள தொகையில் 1/3 பாகம் அரசு பங்குத்தொகையாகவும் ஆயுள் காப்பீட்டு - நிதியில் - முதலீடு செய்திருந்தால் - அத்தொகையும், ஒய்வுபெறும்போது பெறு கிறார்கள். சில விதிகளுக்குட்பட்டு குடும்ப ஒய்வூதியமும் பெற முடியும்.

[முற்பகல் 10-20]

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, ஒய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் என்ன தொகை அளிக்கப் படுகிறது? அந்த குறைந்தபட்ச தொகையை உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா? அடுத்து, சென்னையிலே உள்ளவர்கள் நேரிலே அந்தப் பணத்தைப் பெறுவது போல், இதர பகுதியிலே உள்ளவர்களும் பெறுவதற்கான சூழ்நிலையை உண்டாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஒய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு இந்த அரசு 33/80 என்கிற வகை யிலே ஒய்வூதியம் அளிக்கப்படுகிறது.

வடசென்னைப் பகுதியில் பாலங்களை அகலப்படுத்தல்

* வினா எண் 204—திரு.சு. பாலன்: மாண்புமிகு உள்ளாட் சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) சென்னையில் உள்ள கான்ஸ்ரோட் பாலம் (வியாசர் பாடி) ஒட்டேரி பாலம் ஆகிய இரண்டையும் உலக வங்கி மூலம் கடன் பெற்று அகலப்படுத்த திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அவ்வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ&ஆ) உலக வங்கி கடன் திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலை கிராமப்பணித்துறையினரால் கான் ஸ்ரோடு பாலம் (வியாசர்பாடி) அகலப்படுத்த வேலை துவக்கப்பட்டுள்ளது. சென்னைமாநகராட்சி தன் நிதியைக் கொண்டு ஓட்டேரி பாலத்தை அகலப்படுத்தும் பூர்வாங்க வேலையைத் துவக்கியுள்ளது.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, சென்னையிலே இப்படிபட்ட பாலங்கள் கட்டப்பட்டு நீண்டகாலமாக இருக்கின்ற காரணத்தால், எப்போது இடிந்து விழுமோ என்ற நிலையில் உள்ள பாலங்களை மீண்டும் கட்டுவதற்கான வேலையை இந்த அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே குறிப்பிட்ட இந்த இரண்டு பாலங்களைப் பற்றிய கேள்விக்கு பதில் அறிவித்திருக்கிறேன். மற்றப் பாலங்களைப் பற்றி தனியாக கேள்வி கேட்டால், தகவல் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு தொகுதியாக இருந்தாலும், திரு அரங்கநாதனுக்கு அனுமதி அளிக்கிறேன். திரு. மு, அரங்கநாதன்,

திரு சென்னை மு, அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியையொட்டியே, லாயிட்ஸ் சாலை பாலத்தையும், அதே போல் பீட்டர்ஸ் ரோடு பாலத்தையும் செம்மைப்படுத்துவதற்கு, போக்குவரத்துக்கு மிகவும் முக்கியமாக இருக்கின்ற காரணத்தால், இவைகளையும் அகலப்படுத்துவதற்கு உலக வங்கியிடமிருந்து உதவிபெற்று அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த இரண்டு பாலங்களுக்கு திரு. பாலன் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டது போல, இவைகளைப் பற்றி தனியாக கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

Staff of Local Bodies

* Q.No.205—Thiru K. SUPPU: will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that the Government orders No.410/R.D & L,A., dated 28-2-73 No.106/P.W.D., dated 22-1-77 and 294, P,W.D., dated 22-2-77 are not yet implemented by the Department and

(b) If so the reason therefor ?

1979 மார்ச் 3]

மாண்புமிகு திரு. கா, காளிமுத்து: (அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, முதலிலே இந்தக் கேள்வியே என்னவென்று புரியவில்லை. 28-2-73....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து இதைப்பற்றி சுப்புவைக் கேளுங்கள். கேள்வியே புரியவில்லை என்று சொல்லுகிறீர்கள்.

திரு துரை முருகன்: தலைவர் அவர்களே, இந்த அரசு ஆணை 410, 106, 294 என்று போடப்பட்டிருக்கிறது. அது பற்றி எனக்கு என்ன வென்று தெரியவில்லை. எனவே, அமைச்சர் அவர்கள் அந்த அரசு ஆணைகள் என்ன என்பது பற்றி விளக்கம் தந்தால், துணைக் கேள்விகள் போடுவதற்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதைப் பற்றி கேள்வி போட்டவருக்கும் அமைச்சருக்கும் தெரியும். அவர்கள் அந்த அரசு ஆணைகள் செயல்படுத்தப் படவில்லை என்கிற முறையிலே கேள்வி கேட்டிருக்கிறார். ஆனால், அந்த ஆணைகள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி என்ன என்று புரிந்து கொண்டு வந்திருக்க வேண்டும்.

திரு.க.சுப்பு: விஷயம் என்னவென்று எனக்கே தெரியாது இந்தக் கேள்வி ரொம்ப நாளைக்கு முன்னால் குறுகிய கால வினாவாகப் போடப்பட்டது.

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: கேள்வியைப் போடுகிற உறுப்பினர் கேள்வியைக் கொடுத்து அதற்கு அமைச்சர் பதில்சொல்லும் போது எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும்படி இருக்கவேண்டும். அது சபையின் சொத்தாக மாறவேண்டும். விவரங்களைச் சொன்னால்தான் துணைக் கேள்விகள் கேட்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் கேள்வியைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. துரை முருகன் அவர்கள் கேள்வி புரியவில்லை என்று சொல்லுகிறார். அமைச்சர் பதில் சொன்ன பிறகு புரியவில்லை என்று சொன்னால் தங்கள் வாதம் சரியாக இருக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. மு. கருணாநிதி: அரசாணை எண்கள் 410 என்பது என்ன 106 என்பது என்ன, 294 என்பது என்ன என்றே புரியவில்லை. அதை விளக்கினால் துணைக் கேள்விகள் கேட்க சாதமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 23-2–1973 தேதியிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 410ல் டிப்ளமா தகுதி பெற்றவர் சென்னை மாநகராட்சியில் 10 வருடங்கள் ஓவர்சியராகப் பணிபுரிந்தால் அவர்களை சூபர்வைசராக பதவி உயர்த்தலாம். டிப்ளமா தகுதியில்லாதோர் ஓவர்சியராகவே தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து கணக்கு ஆய்வாளர் இம்மாதிரி பதவி உயர்வு பெறுவது உயர்வினைக் குறிக்காது. வெறும் பதவி மாற்றத்தைத்தான் குறிக்கும். ஆகையால் உயர்வு ஊதியம் பெற முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். இது அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது.

22-2-1977 நாளிட்ட பொதுப்பணித் துறை அரசாணை எண் 294ல் பொதுப்பணி நெடுஞ்சாலை நிலைமைப்பணி துறைகளில் இருக்கும் மேற்பார்வையாளர் பதவியை இளநிலை பொறியாளர் என்றும், இளநிலை பொறியாளர் பதவியை உதவிப் பொறியாளர் என்றும் மாற்றி உத்தரவிட்டது. இவ்வுத்திரவை அடிப்படையாக கொண்டு 22-6-78 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 954ல் சென்னை மாநகராட்சியிலுள்ள மேற்பார்வையாளர் பதவியை இளநிலைப் பொறியாளர் என்றும் இளநிலைப் பொறியாளர் பதவியை உதவிப் பொறியாளர் என்றும் மாற்றி உத்திரவிட்டுள்ளது.

22-1-1977 நாளிட்ட பொதுப்பணித் துறை அரசாணை எண் 106 மேற்பாவையாளர் பதவிக்கு சம்பளம் விகிதத்தை உயர்த்த ஆணை பிறபித்துள்ளது. இதற்கேற்ப மாநகராட்சியில் உள்ள மேற்பார்வையாளர் பதவிக்கான சம்பள விகிதத்தை மாற்ற அரசு பரிசீலித்து வருகிறது.

அடையாறு பகுதியில் சலவைத் துறை அமைத்தல்.

* வினா எண் 206 திரு. டி. கே. கபாலி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அடையார் சலவையார்புரம் பகுதியில் டோபி கானா கட்டுவதற்கு குறிப்பேதும் ஆய்வில் இருந்ததா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1979 மார்ச் 3]

திரு. டி. கே. கபாலி: சலவையார்புரம் பகுதியில் டோபி கானா கட்டுவதற்கு கலைஞர் ஆட்சிக் காலத்தில் நிலம் ஒதுக்கப் பட்டது. தற்போது அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அங்கே மாநகராட்சி நிலம் இல்லை. ஆகவே, வேறு இடத்தில் நிலம் வாங்கி புதிதாகக் கட்ட வேண்டுமென்று ஆணையாளர் அரசுக்கு எழுதி அனுப்பி யிருக்கிறார். அரசு அதைத் பரிசீலித்து வருகிறது.

திரு. டி. கே. கபாலி: அங்கே வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அரசு அதை வாங்கி உடனடி யாக டோபிகானா கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. செல்வராசன்: வட சென்னையில் ராபின்சன் பூங்காவில் இருக்கும் டோபிகானா மோசமான நிலைமையில் இருக்கிறது. அதை உடனடியாகப் பழுது பார்க்க அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதை முதலில் அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திசையன்விளை குடிநீர்த் திட்டம்.

* வினா எண் 207—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள திசையன்விளை பேரூராட்சி பகுதிக்கு குடிநீர்த் திட்டம் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் தற்போது அத்திட்டத்தின் நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் ஆய்வுப் பணிகள் முடிவடைந்து அதற்கான உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

[1979 மார்ச் 3

கீழக்கடையம் குடிநீர்த் திட்டம்.

*வினா எண் 208—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள கீழக்கடையம் குடிநீர் திட்ட வேலைகளுக்கென மதிப்பீடு என்ன ?

(ஆ) இத்திட்டத்திற்கு அரசு மான்யம் உண்டா ?

(இ) பயன்பெறும் கிராமங்களின் பெயர்கள் அவற்றின் ஜனத்தொகையும் என்ன ?

(ஈ) இத்திட்டத்தை பக்கத்திலுள்ள கிராமங்களுக்கும் விஸ்தரிக்குமாறு சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் கோரியுள்ளனவா ?

(உ) ஆம் எனில், அரசின் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ரூ. 2,50,000

(ஆ) ஆம்.

(இ) இத்திட்டத்தினால் பயன் பெறும் கிராமங்கள் அவற்றின் மக்கட்தொகை விவரங்கள் பின்வருமாறு : —

	கிராமத்தின் பெயர்.	மக்கள் தொகை.
1	கல்யாணிபுரம்	440
2	பலவனூர்	1,665
3	கீழக்கடயம்	2,804
4	அங்கப்பாபுரம்	136
5	நரயப்பாபுரம்	369
6	செக்கடியூர்	384
7	சேர்வைக்காரன்பட்டி	743

(ஈ) ஆம்.

(உ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இந்தத் திட்டத்தில் அதிகப்படியான அளவு தண்ணீர் தேக்க கெபாசிடி இருக்கிறது என்பதைப் பற்றி அரசு அறியுமா ? அதன் அடிப்படையில் அந்த வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் விஸ்தரிக்குமாறு கேட்டிருக்கிறார்களா? இந்தத் திட்டத்தைச் சீக்கிரமாக அமல் நடத்த அரசு முன்வருமா?

1979 மார்ச் 31]

(முற்பகல் 10.30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் நீர் ஆதாரம் ஐம்பு நதிக் கரையில் உள்ள திறந்த கிணறு ஆகும். இக்கிணற்றில் கிடைக்கும் குறைந்த ஊற்றைப் பயன்படுத்தி அதிகபட்சம் மக்கள் பயன் பெற வேண்டும் என்ற அடிப்படையில் சமீபத்தில் மாற்றுத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கடயம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கீழ்க்கண்ட கிராமங்கள் சேர்க்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

1 காட்டேரிப்பட்டி

2 கேளையாபிள்ளையூர்

3 அருணாசலம்பட்டி

4 மயிராலனூர்

5 புறங்காட்டுப் புலியூர்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கடயம் ஒன்றியத்தில் இந்த 12 கிராமங்களுக்கும் சேர்ந்து ரூ. 6.21 லட்சங்கள் செலவில் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கென ஒரு திருத்தப்பட்ட உத்தேச மதிப்பீட்டைத் தயார் செய்து அரசின் ஒப்புதலுக்காக வும், இத்தொகையை மான்யமாக வழங்குமாறும் கேட்டு அனுப்பியுள்ளது. இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்த போதிலும் இக்குடிநீர் திட்டம் மேற்கண்ட 12 கிராமங்களும் விரிவாக்கப்பட்டு எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டதாக வாரியம் தெரிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகளும் பதில்களும் சுருக்கமாக இருக்க வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர் களுக்கும் தெரியும், அமைச்சர்களுக்கும் தெரியும். கேள்விக்கு பதில் நீண்டதாக இருந்தால் அதை அறிக்கையாக அச்சிட்டு மேசைமீது வைத்திருந்தால் உறுப்பினர்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, நான் கேட்க வேண்டியதைத் தாங்களே சொல்லி விட்டீர்கள். நன்றி. எழுத்துப் பூர்வமாகக் கொடுத்திருந்தால் நாங்கள் கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்பாக இருக்கும். வெக்காலிப்பட்டி கடையம் பெரும்பத்து பஞ்சாயத்துக்கூட அதை யொட்டித்தான் இருக்கிறது. அந்தத் திட்டத்திலே அதையும் சேர்க்க வேண்டுமென்று அந்தப் பஞ்சாயத்து ஒரு கோரிக்கையை அனுப்பியிருக்கிறது. ஆகவே அதையும் சேர்த்துக்கொள்ள அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது சொன்னதற்கு மேல் வேறு கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுத்தால் தண்ணீர் கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு விடும்.

சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு வீடுகள்.

* வினா எண் 209—திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க திட்டமுள்ளதா ?

(ஆ) ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வீடுகள் எவவளவு ? ஒவ்வொரு வீட்டுக்கும் தொழிலாளிகளிடம் பெற்ற தொகை எவ்வளவு ?

(இ) அதிகாரிகளுக்கு கட்டப்பட்டுள்ள பங்களாக்கள் எத்தனை ? அவற்றின் மதிப்பென்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சேரன் போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்காக சேரன் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலமாக, கோவையிலும், பொள்ளாச்சியிலும் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக ஈரோடு, திருப்பூர் போன்ற இடங்களில் வீடுகள் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகள் பற்றிய விபரம் :

இடம்.	டைப்.	எண்ணிக்கை.	வீட்டின் மதிப்பு.	காலி மனைக்கு வசூலிக்கப் பட்ட முன் பணம்.
கோவை	'ஏ'	14	ரூ. 33,000	ரூ. 2,850
கோவை	'பி'	23	ரூ. 19,000	ரூ. 2,000
கோவை	'சி'	105	ரூ. 10,000	ரூ. 1,150
பொள்ளாச்சி	'பி'	10	ரூ. 19,000	ரூ. 1,100
பொள்ளாச்சி	'சி'	152	ரூ. 10,000	ரூ. 650

1979 மார்ச் 3]

(இ) கோவையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளில் ரூ. 600-க்குமேல் ரூ. 1,500-க்குள் சம்பளம் பெறும் அலுவலர்களில் 14 பேருக்கு சுமார் ரூ. 33,000 மதிப்புள்ள 'ஏ' டைப் வீடும், 9 பேருக்கு ரூ. 19,000 மதிப்புள்ள 'பி' டைப் வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சேரன் டிரான்ஸ் போர்டில் சுமார் 4,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய பதிலின்படி பார்த்தால் 200, 250 பேர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு தான் முடியும் என்றால் அந்த நிலையை மாற்றி குறைந்த அளவில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறபோது அந்தத் திட்டத்தை கழகத்தின் சார்பிலே கட்டிக் கொடுக்கச் செய்ய ஏற்பாடு செய்வார்களா? கூட்டுறவுத் திட்டம் என்று வருகிறபோது 30 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு பெரும் தொகை ஆவதால் அந்தத் திட்டத்தில் தொழிலாளர்கள் சேர்ந்து பயனடைய முடியாது. ஆகவே அந்தக் கழகமே அதை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு வீடுகளைக் கட்டி வாடகைக்கு விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகம் மட்டுமல்ல, அனைத்துப் போக்கு வரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்களுக்குச் சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ அளிப்பதுபற்றி நடைமுறையிலே எந்த முறையில் செய்யலாம் என்று அரசு ஆலோசித்து அதை ஹட்கோ மூலம் செய்யலாமா என்று ஆராய்ந்து வருகிறது. ஹட்கோவைப் பொறுத்த வரையில் வட்டி விகிதம் சற்று அதிகமாக இருப்பதால் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சலுகை ஹட்கோ மூலம் செய்கிறபோது கிடைக்காத நிலைமை ஏற்படுகிறது. எனவே தொழிலாளர் நலத்துறை மூலமாக மீண்டும் ஹட்கோ மூலமாக பெறுவதற்காக கேட்டு இருக்கிறோம். அத்துடன், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கி மூலமும், எல்.ஐ. சி. மூலமும் நிதி பெற்று இந்தப் பணியை மேற்கொள்ள ஏற்ற ஆய்வுகளை நடத்தி வருகிறோம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கூறிய பதிலில் 600 ரூபாய்க்கு மேற்பட்டவர்கள் என்ற முறையிலே சொன்னார்கள். அதிலே அனைவருக்கும் வீடு கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அனைத்துக் கார்ப்பரேஷனைச் சேர்ந்த சகல தொழிலாளர்களுக்கும் வீட்டுமனைகள் வழங்குவதோடு வீடுகள் கட்டிக் கொள்ள நீண்ட காலத் தவணையில் கடன் வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அவர்கள் வாடகை

வீடுகளில் இருந்தால் வேலைப்போன பிறகு காலி செய்துவிட வேண்டிவரும். எனவே, கடனிலே நிரந்தரமாக வீடு கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, 'ஹட்கோ' மூலமும் எல்.ஐ,சி. மூலமும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி மூலமும் நிதியுதவி பெற்று அவர்களுக்குச் சுலபமான தவணைகளில் கடன் உதவி தர இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் முறையில், தொழிலாளர்களிடம் முன் பணமாக ஒரு பகுதியைப்பெற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். கழகத்தின் சார்பில் இந்த வீடுகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டதா? அல்லது மாநில அரசு வீடுகளுக்கு உதவித்தொகை வழங்கியுள்ளதா என்பதை அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகம் ஏறத்தாழ பதினோரு இலட்சத்து எண்பத்தெட்டாயிரம் ரூபாய் இதற்கு நிதியுதவி அளித்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் போல, சேர, சோழ, பாண்டியன், அண்ணா தந்தை பெரியார், கட்டபொம்மன் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்துகொண்டிருக்கும் எல்லோருக்கும் வீடுகள் கட்டித்தரும் வாய்ப்பினை உருவாக்கி மேற்கொண்டிருக்கும் முயற்சியைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதிலே டெப்போக்கள் உள்ள இடங்கள் மட்டுமல்ல, 'பங்கு' என்று அழைக்கப்படும் இடங்களில் கூட அத்தகைய தொழிலாளர்களுக்கு என்ன வசதி செய்து தரப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் மாயூரம் போன்ற இடங்களில் — பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இப்பொழுது புதிதாகப் பலயிடங்களில்விட்டிருப்பதைப் போல அங்கேயும் பேருந்துகள் விட்டிருக்கிறார்கள் — அங்கு பேருந்துகள் நிறுத்தப்படும்பொழுது அதிலே வேலை செய்யும் தொழிலாளர்கள் அங்குள்ள பஸ் ஸ்டேன்டிலேயே படுக்க வேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது. அதை மாற்றி மற்ற தொழிலாளர்களுக்கு, டெப்போக்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளைப்போல அவர்களுக்கும் அளிக்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 3]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றும் தொழிலாளர்கள் வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்ற நல்ல முயற்சியை மேற்கொள்ளும்பொழுது அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகாமையில் இப்படிப்பட்ட இடங்களை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் செயல்பட்டு வருகிறது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்குக் கோவை மாவட்டத்தில் பல் வேறு இடங்களில் வீடு கட்டப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் நீலகிரி மாவட்டத்தில் முழுக்க முழுக்க சேரன் போக்குவரத்தைத் தவிர வேறு வண்டிகளோ அல்லது ஊழியர்களோ இல்லை, ஆகவே, நீலகிரி மாவட்டம் புறக்கணிக்கப்படாமல் அங்கே தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிக்கு ஏற்பாடு செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட இடங்களைத்தான் குறிப்பிட்டேன். கட்ட இருக்கின்ற இடங்களிலே நீலகிரி மாவட்டமும் கருத்தில் கொள்ளப்படும்.

கெடிலம் ஆற்றின் அருகே நில ஆக்கிரமிப்பு

* வினா எண். 210—திரு. இல. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(ஆ) திருநாவலூர் தொகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் கெடிலம் நதிக்கு அருகாமையில் உள்ள இடம் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு ஓர் அரிசி ஆலையும், விடுதியும் கட்டி நடத்தப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். (அ) அரசுக்கு இதுபற்றித் தெரியும்.

(ஆ) மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1979 மார்ச் 3

கள்ளக்குறிச்சியில் பேருந்து பணிமனை

¼ வினா எண். 211— திரு. சின்னசேலம் மா, சுப்பிரமணியன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சியில் அரசு போக்குவரத்துப் பணிமனை ஒன்று ஏற்படுத்தும் திட்டம்: எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பணிமனை ஒன்றைத் துவக்க இடம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நிலத்தைக் கையகப்படுத்திய பின்பு, கட்டுமான வேலை துவக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தையும் வடாற்காடு மாவட்டத்தையும் இணைத்துப் பெரியார் போக்குவரத்துக் கழகம் இயங்கி வருகிறது. இரண்டு மாவட்டங்களுக்கும் மையமாக கள்ளக்குறிச்சி இருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பே நிலத்தைக் கையகப்படுத்த அரசு முன் வந்திருந்தும் இதுவரையில் அதற்கான எந்தவிதமான முயற்சியும் இல்லாமல் இருக்கிறது. உடனடியாக அந்த இடத்தைக் கையகப்படுத்தி பணிமனையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40]

* மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியில் ரூ. 14,000 செலவில் நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நிலம் வாங்கப்பட்டவுடன் பணிமனை கட்டப்படுகின்ற நிலை ஏற்படும்.

பூம்புகாரில் தொழிற்பேட்டை

வினா எண். 212—திரு. எஸ். கணேசன், திரு. என். கிட்டப்பா மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பூம்புகாரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பூம்புகார் பகுதியில் தொழிற் பேட்டை அமைக்கக்கோரி தொழில் முனைவோர்களிடமிருந்து போதிய அளவில் கோரிக்கைகள் வரப்பெற்றால், அங்கு தொழிற்பேட்டை அமைப்பது அல்லது சிறுதொழில் கூடங்கள் கட்டுவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

1979 மார்ச் 3]

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் பூம்புகார், திருவாரூர், மற்றும் ஒரு இடம் ஆக 3 இடங்களைத் தேர்ந்தெடுத்து, 3 இடங்களிலும் தொழிற்பேட்டைகள் அமைப்பது என்ற அடிப் படையில், குறிப்பாக, பூம்புகாரில் அதற்கான ஆக்கப்பணிகள் துவக்கப்பட்டு சிறப்பாக செயல்படத் துவங்க வேண்டிய நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப் பட்டது. அதற்குத் பின்னால் அதுபற்றி இம்மன்றத்தில் கேட்கப் பட்ட கேள்விக்கு பூம்புகார் பகுதியில் தொழிற்பேட்டை துவங்குகின்ற அத்தகைய நிலை இல்லை என்று இதே அவையில் அறிவிக்கப்பட்டது, ஆனால், இப்பொழுது மகிழ்ச்சிதரத்தக்க அளவுக்கு பூம்புகாரிலே தொழிற்பேட்டை அமைக்கக்கோரி தொழில் முனைவர்கள் முன்வந்தால், தொழிற்பேட்டை அமைப் பதற்கு அரசு தயாராக இருப்பதாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் கோவை செழியன் பூம்புகாரிலே முகாமிட்டு, எப்படியும் சிறந்த முறையில் தொழிற்பேட்டை உருவாவதற்குரிய முயற்சி களை எடுப்பதாகத் தெரிவித்ததாக, நான் மிக நம்பகமாக அறிகிறேன், அந்த முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளச் செய்து, பூம்புகாரில் சிறப்பான தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, 1965-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த—சென்னை யிலுள்ள சிறு தொழில் பணி நிலையத்தின் இயக்குநர் பூம்புகார் பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும், அங்கே எந்த வகையான தொழில்களை நிறுவலாம் என்பது குறித்தும் அரசுக்கு ஒரு தகவலை அனுப்பினார்கள். அந்த அடிப்படையிலேதான் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறு வனத்தின் சார்பிலே இங்கே உள்ள அதிகாரிகள் அங்கே சென்று என்ன என்ன வகையான தொழில்களை, மூல ஆதாரங்களைக் கொண்ட தொழில்களை (Resource based industry) அமைக்க லாமா அல்லது சிறிய அளவிலே தொழிற்பேட்டை அமைக்க லாமா என்பதை நாம் பரிசீலித்து வருகிறோம். ஆனால், தொழில் முனைவோர்கள் தொழில் செய்ய முன்வரவேண்டும். காரணம், அங்கே அரசாங்கமே தொழிற்சாலையை நிறுவும் குறிப்பு பரிசிலனையில் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் முனைவோர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்ற தகவலைக் கேட்டிருக்கிறோம். ஒவ்வொரு வட்டாரத் திலும் மாவட்ட ஆட்சித் தலைவர், தொழில் மைய அலுவலர் எந்த எந்தப் பகுதிகளில் என்ன என்ன தொழில்களை உருவாக்கலாம் என்ற அறிக்கைகளைத் தந்து கொண்டிருக்கிறார் கள். அந்த அடிப்படையிலே சிறுதொழில் கூடங்களைக் கட்ட வாய்ப்பிருக்கிறதா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 மார்ச் 3

Industrial Estate at Ponnamaravathy

* Q. No. 213 Thiru N. SUNDARARAJ : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) Whether there is any praoposal to start an industrial estate in Ponnamaravathy in Pudukkottai district ; and

(b) if so, the number of persons who have come forward to start industries there ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ;

(அ & ஆ) புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமரா வதியில் தொழிற்பேட்டை அமைக்க தற்சமயம் திட்டம் எதுவும் இல்லை. எனினும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி (சிட்கோ) இந்த ஆண்டு சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் 10 நுண் தொழிற்கூடங்களை பொன்னமரா வதியில் நிறுவ உத்தேசித்துள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, பொதுவாக பொன்னமராவதி போன்ற நகரங்கள், தமிழகத்திலே உள்ள வசதி படைத்தவர்கள் இருக்கக்கூடிய நகரங்கள். அந்த நகரங்களிலே தொழிற்சாலைகள் துவங்கப்படுவதென்பது சிரம மில்லாத காரியம், மிகவும் எளிதான காரியம். அரசாங்கம் தனது திட்டங்களை வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நினைத்தால் அரசுத் துறையிலே உள்ள அதிகாரிகளும் மற்ற வர்களும் வசதி படைத்தவர்களும் சென்று, நேரடியாகச் சந்தித்து அவர்களை ஊக்குவித்து, தொழிற்சாலை அமைப்ப தற்கான திட்டங்களை உருவாக்க வேண்டுமே தவிர, வசதி படைத்தவர்கள் என்ன தொழில்செய்ய விரும்பினாலும், எங்களை வந்து சந்தியுங்கள் என்று ஏதோ ஸ்டீரியோ டைப் நிலை இருப்பது நல்ல சூழ்நிலையை உருவாக்காது. அதன் காரணமாக அந்த நகரத்திலே தொழிற்சாலை இன்னமும் அமைக்கப்படா மலிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் தனது கொள்கையை மாற்றிக்கொண்டு, வசதி உள்ளவர்களை நேரடியாகச் சந்தித்து, தொழில் திட்டங்களை வேகமாகச் செயல்படுத்த முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்தகால அனுபவத்தைச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த ஆட்சி அமைந்த பிறகு மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன. குறிப்பாக, புதுக்கோட்டை மாவட்டத்திலே தொழில் மையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம், தொழில்களைத் துவங்க வாய்ப்பு வசதிகளை எல்லாம் கணக்கிட்டு, அங்கே தொழிற்சாலைகளைத் தொடங்குவது பற்றி அரசுக்கு தக்க

1979 மார்ச் 3]

ஆலோசனைகளையும், வங்கிகளின் மூலமாக நிதிபெற்றுத் தருகிற முயற்சிகளையும் அங்கே உள்ள தொழில் மையம் மேற்கொள்கிறது. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு வட்டத்திற்கும் 15 நாளைக்கு ஒருமுறை தொழில் மையத்தில் உள்ள அனைத்து அலுவலர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரும் (Motivation Campaign) முனைப்புமுகாம் என்ற வகையில், தொழில் முனைப்பை ஊக்குவிக்கிற பணியிலே இந்தத் தொழிலைத் துவங்க வேண்டுமானால், இதைப் பயன் படுத்துங்கள், இதன் மூலம் என்ன வருவாய் கிடைக்கும் என்று சொல்லி வருகிறார்கள். அந்த அடிப்படையில், முதலாவது கட்டமாக 10 நுண் தொழிற்கூடங்களை பொன்னமராவதியில் நிறுவ சிறு தொழில் வளர்ச்சிக்கழகம் உத்தேசித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய மோடிவேஷன் காம்பைன்கள் சில சென்னையில் இருக்கின்றன. ஆனால், புதுக்கோட்டையில் இல்லை. அங்கே இருக்கக் கூடிய வசதி படைத்தவர்கள் தொழில் அதிபர்கள் ஆகியவர்களுடன் நேரிடையாக அரசு தொடர்பு கொண்டு முயற்சி செய்தால் பல லட்சம் ரூபாய் பெறுமானங்களில் பல தொழிற்சாலைகளை நிறுவ முடியும் என்று நம்புகிறேன். இந்த வகையில் அரசு என்ன முயற்சிகளைச் செய்து வருகிறது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் தொழில் ரீதியாகப் பின் தங்கிய மாவட்டம் என்ற அடிப்படையில்தான் அதற்கு முன் உரிமை கொடுத்து அரசு முயற்சி செய்து வருகிறது. நான் இங்கே குறிப்பிட்டது சிறு தொழில் வளர்ச்சி, கிராம தொழில் முன்னேற்றம் போன்றவைகள்தான் இந்த மோடிவேஷன் கம்பைன்களில் அடங்கும். அங்கேயும் பெரிய தொழில்களை சில தொழில் நிறுவனங்கள் துவங்க இருக்கின்றன. அதைப்போல தனிப்பட்ட சிலர் தொழிற்சாலைகளை உருவாக்க முன் வந்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக தொழில் முனைவோரிடமிருந்து சிறு தொழில்களை ஆரம்பிக்கக் கோரும் மனுக்களைச் சேகரிக்குமாறு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர், புதுக்கோட்டையிலுள்ள தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழக உதவி முன்னேற்ற அலுவலரை கேட்டுக் கொண்டார். ஆனால் தொழில் முனைவோரிடமிருந்து எந்த விதமான பதிலையும் இது சம்பந்தமாக தாங்கள் இதுவரை பெறவில்லை என்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழக பொது நிர்வாகி கூறுகிறார். மேலும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1977-78ம் ஆண்டில், தொழில் கொட்டகைகள் கட்டும் திட்டத்தில் இருக்கும் இடங்களில் இவ்விடங்கள் சேர்க்கப்படவில்லை என்றும் தொழில் முனைவோரிடமிருந்து

தேவையான கோரிக்கைகள் வந்தால் அப்பொழுது இவைகளைப் பற்றி பரிசீலனை செய்யலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பொன்னமராவதியில் ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்த தற்சமயம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் ஒரு செயற் குறிப்பும் இல்லை என்றாலும் 1978–79-ம் ஆண்டுக்குரிய நுண் தொழிற்கூடங்கள் கட்டும் திட்டத்தின்கீழ் (Tiny sector programme) 10 சிறிய தொழிற்கூடங்கள் பொன்னமராவதியில் அமைக்க சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் உத்தேசித்திருக்கிறது. அதற்கு இயந்திரங்கள் தளவாடங்கள் முதலியவற்றில் மூலதன முதலீடு ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்படாத தொழில்களே சிறுதொழில்கள் என எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கடந்த கால அனுபவம் என்று சொன்னார்கள். அந்த அனுபவம் என்ன என்று விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய அனுபவம் தர்மபுரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், ஹூசூர், ராணிப்பேட்டை போன்ற இடங்களில் எல்லாம் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன என்பது என்னுடைய அனுபவம். ஆனால் அவருடைய அனுபவம் என்னவோ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கடந்த கால அனுபவம் என்று சொன்னது மாவட்டங்களில் உள்ள தொழில் முனைவர்கள் அவர்களாகவே இங்கே வந்து எங்களுடைய பகுதிகளிலே தொழிற்சாலை துவங்க இருக்கிறோம், அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லுகிற நிலைமை இருந்தது என்பதைக் குறிப்பிடுவதாகும். ஆனால் இப்பொழுது இந்த மோடிவேஷன் காம்பைன்களில் உள்ளவர்கள் நேரிடையாகச்சென்று தொழில் முனைவர்களைச்சந்தித்து, கடன் வழங்கும் நிறுவனங்களின் மூலம் கடன் வசதிகளைக் கூட பெற்றுத் தந்து சிறு தொழில் களைத்தொடங்க உதவியளிக்கப் பெறுகிறது. நடுத்தர, பெரிய தொழிற்சாலைகள் சம்பந்தமாக அரசு தனியாக கவனம் செலுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 216— இதே அமைச்சருடைய பதிலில் வரும் என்பதால் கேள்வி எண் 216 எடுக்கப்படுகிறது.

தாளவாடியில் பட்டு நூல் தயாரிப்பு

* வினா எண் 216—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு கிராமத்தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1979 மார்ச் 3]

கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த தாளவாடியில் பட்டு நூல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

இல்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி போன்ற பிற்பட்ட பகுதியில் பட்டுநூல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஆய்வில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது பிற்பட்ட பகுதியாக இருப்பதால், தனிப் பட்டோர் முயற்சியில் ஒரு பட்டுநூல் தொழிற்சாலையை அமைத்து அந்தப் பிற்பட்ட பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையிலாவது அரசு இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 11-1-1972-லிருந்து பட்டு நூற்பு தொழிற்சாலை ஒன்று தாளவாடியில் இயங்கி வருகிறது. இதனால் புதிதாக வேறு ஒரு தொழிற்சாலையை அரசு சார்பில் அமைப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தனி நபர்கள் முன் வந்தால் அவர்களுக்கு வேண்டிய அனுமதி வழங்குவதோடு அவர்களின் மொத்த மூலதனத்தில் பொருளாதார உதவியாக 25 சதவீதம் உதவித் தொகை கொடுத்து அந்தத் தொழிலை நிறுவுவதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

பதிவு செய்துள்ள சித்த வைத்தியர்கள்

*வினா எண் 214—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சித்த வைத்தியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும் முறையைக் கைவிட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், போலி மருத்துவர்கள் பெருகி வருவதைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) 1970–ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மையக்குழு சட்டம் (Indian Medicine Central Council Act 1970) 17-வது பிரிவின் படி, அச்சட்டத்தின்கீழ் "அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதி"

[1979 மார்ச் 3

பெற்றவர்களை அப்பிரிவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட நாளான 1-10-76—க்குப் பின்னரும் சட்டபூர்வமாகப் பதிவு செய்ய முடியும். ஆனால் அத்தகைய ''கல்வித் தகுதி'' பெறாத பரம்டரை இந்தியமுறை மருத்துவர்களை தற்போது பதிவு செய்வதில் சில சட்ட நுணுக்கப் பிரச்சினைகள் உள்ளதால் அதுபற்றி மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 1-10-76—க்குப் பின்னர் போலி மருத்துவர்கள் இந்திய மருத்துவத்தொழில் புரிந்தால், 1970—ம் ஆண்டு இந்திய மருத்துவ மையக்குழு சட்டம் 17 (4) பிரிவின்படி ஓராண்டு வரை சிறை தண்டனையோ அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டிற்குமோ உள்ளாவார்கள். எனவே இச்சட்டத்தின் துணை கொண்டு போலி இந்திய முறை மருத்துவர்கள் பெருகி வருவதைக்கட்டுப்படுத்தலாம்.

[முற்பகல் 10-50]

திரு. என் கிட்டப்பா : தலைவரவர்களே, சித்த வைத்தியர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும் போது அதற்கான காலம் அதிகமாகத் தேவைப்படுகிறது என்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் தற்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் பல விதிமுறைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். என்னென்ன விதிமுறைகளின்கீழ் சித்த வைத்தியர்கள் முறைப்படி பதிவு செய்யப்படுகிறார்கள் இந்த அரசின் மூலமாக என்பதை அறிவிப்பார்களா? அதற்கான காலகட்டம் இப்போது நீண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அந்த காலகட்டத்தைக் குறைத்து, இன்னும் குறுகிய காலத்திலே தகுதிச் சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, முறையாக இந்திய மருத்துவக் கல்வி பயின்றவர்கள் சித்தா, ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் தமிழ்நாட்டில் இந்திய மருத்துவ மையக் கழகத்தினால் கீழ்க் கண்டவாறு பதிவு செய்யப்படுகிறார்கள்:—

(1) பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள்— 'ஏ ஸ்பெஷல்'

(2) அரசு வழங்கும் டிப்ளமா பெற்றவர்கள் — 'ஏ'

(3) வாரியம் வழங்கும் சான்றிதழ் பெற்றவர்கள் — 'பி' பிரிவு.

(4) கிராம வைத்தியத்தில் சான்றிதழ் பெற்றவர்கள்— 'சி' பிரிவு.

இந்த வகையில் பதிவு செய்யப்படுகிறார்கள். பெரும்பாலான பரம்பரை வைத்தியம் செய்கின்றவர்கள் கிராமங்களில் நிறைந்து காணப்படுகிறார்கள் அப்படிப்பட்ட பலரிடம் இன்னும் கிடைக்கப் பெறாத பல சித்த வைத்தியக் குறிப்புகள்முடங்கி இருக்கின்றன.

1979 மார்ச் 3]

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற வைத்தியப் பிரிவுகளில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் தங்களுடைய பெயருக்கு முன்னால் 'டாக்டர்' என்று போட்டுக் கொள்கிறார்கள். உதாரணமாக, ஹோமியோபதியில் பட்டம் பெற்றவர்களும் டாக்டர் என்று போட்டுக் கொள்கிறார்கள்; எம். பி. பி. எஸ். படித்தவர்களும் டாக்டர் என்று போட்டுக் கொள்கிறார்கள் அதனால் மக்களுக்கு ஒரு குழப்பம் ஏற்படுகிறது. ஆகவே சித்தா டாக்டர், ஆயுர்வேதிக் டாக்டர், யுனானி டாக்டர் என்று போட்டால் நல்லது. டாக்டர் சின்னசாமி, டாக்டர் கோவிந்தசாமி என்று ஹோமியோபதி படித்தவர்களும், எம், பி., பி. எஸ. படித்தவர்களும் போட்டுக்கொள்கிறார்கள். ஆகவே இந்த இரு படிப்பிற்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுகின்ற வகையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு, திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, டாக்டர் என்ற சொல் மருத்துவர் என்பதைக் குறிக்கும். ஒவ்வொரு துறையிலும் மருத்துவத்தில் முறைப்படி தேர்ச்சி பெற்றவர்கள் டாக்டர் என்று போட்டுக்கொள்ள தகுதி பெற்றவர்கள். யுனானி முறையில் தேர்ச்சி பெற்றவர்களும், சித்த வைத்தியத்தில் தேர்ச்சி பெற்றவர்களும், ஹோமியோபதியில் தேர்ச்சி பெற்றவர்களும் டாக்டர்களாக இருக்கிறார்கள். அப்படித் தேர்ச்சி பெற்றிருக்கிறவர்கள் தங்களுடைய பெயருக்குப் பின்னால் அவர்கள் பெற்றிருக்கிற கல்வித் தகுதியையும் போட்டிருக்கிறார்கள். ஆகவே, இதிலே மக்களுக்கு எந்தவிதமான குழப்பமும் இல்லை. பெரும்பாலானவர்கள் சித்த மருத்துவம், ஆயுர்வேதம் என்று போட்டிருக்கிறார்கள்.

திரு. ரா. க. சு. தண்டபாணி: தலைவரவர்களே, கிராம மருத்துவத்திலே பயிற்சி பெறுவது தற்போது நடைபெறுகிறதா அல்லது நிறுத்தப்பட்டிருக்கிறதா? இந்த ஆட்சியை இன்றைக்கு 'குழந்தை உள்ளத்தோடு நடைபெறுகின்ற நல்லாட்சி' என்று தாய்மார்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் சேலத்திற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் வந்திருந்தபோது, குழந்தை உள்ளம் கொண்டு நல்லாட்சி நடத்துகிறீர்கள் என்று தாய்மார்கள் பாராட்டினார்கள். மேலும் இது குழந்தைகள் ஆண்டு. ஆகவே, கிராம மருத்துவத்தில், குழந்தைகள் வைத்தியத்தில் விசேஷ பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

1979 மார்ச் 3

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது கிராம மருத்துவத்திற்கான பயிற்சி நடைமுறையில் நீண்ட காலமாக இல்லை. ஆகவே, அப்படி பதிவு செய்கின்ற ஒரு பிரச்சனை இல்லை. சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி போன்ற மருத்துவத்திலே குழந்தைகளுக்கான விசேஷ பயிற்சி பெறும் பிரிவும் பயிலுவதற்கு வழிவகைச் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் எப்படிச் செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் எடுத்துக்கூறினால் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது குழந்தைகள் ஆண்டு என்பதை நினைவுபடுத்தினார்கள். இது குழந்தைகள் ஆண்டு என்பதால் குழந்தைகள் கட்டுப்பாட்டை நிறுத்தி வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, குழந்தைகள் சீரோடும் சிறப்போடும் வளர்வதோடு அவர்கள் திடகாத்திரம் உடையவர்களாகவும் வளரவேண்டும் என்பதுதான் குழந்தைகள் ஆண்டைக் கொண்டாடுவதன் நோக்கமாகும். குழந்தைகள் குறைவாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வது பெற்ற குழந்தைகள் நல்ல முறையில் பேணிக் காக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே குழந்தைகள் நலம் பேணும் இந்தக் குழந்தைகள் ஆண்டில் குடும்பநலத்திட்டம் செயல்படுவது பற்றி தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சித்த வைத்தியத்திற்குரிய பல நூல்கள் திரு. சி. டி. நாயுடு அவர்களிடமும், டாக்டர் ஆனந்தகுமார் அவர்களிடமும் இருந்ததாகக் கேள்விப்பட்டேன். அவற்றை அரசாங்கம் பெற்று, பாதுகாத்து, பயன்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்க மருத்துவர்கள் தனியாகத் தொழில் நடத்துதல்

*வினா எண் 215— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
டாக்டர் கே. சமரசம்
திரு. கு. ரமணி
திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
திரு. கா. அப்புனு கவுண்டர்

1979 மார்ச் 3]

திரு. டி. எம். தைலப்பன்
திரு. என். கிட்டப்பா
திரு. மெ. ஆண்டி அம்பலம்: } மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க டாக்டர்கள் தனியாக தொழில் நடத்துவதை (Private practice) தடை செய்யும் நோக்கம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) அரசாங்க மருத்துவ அதிகாரிகள் தனியாகத் தொழில் செய்தலை ரத்து செய்யலாம் என்று நிர்வாக சீர்திருத்தக் குழுவும் மேல்மட்டக் குழுவும் பரிந்துரை செய்தன. இப்பிரச்சினை அமைச்சரவையில் பரிசிலிக்கப்பட்டு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

அலகாபாத் உயர்நீதிமன்றம் அரசாங்க மருத்துவர்கள் தனியாக தொழில் செய்வதை தடைசெய்த உத்தரவுக்கு சாதகமாக தீர்ப்பு அளித்தது. அதன்பேரில் பாதிக்கப்பட்ட அரசாங்க மருத்துவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்துள்ளனர். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பிறப்பிக்கப் பட்டபின் இப்பிரச்சினை மேலும் ஆராயப்படும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, ஆடுகின்ற குடி ஆடிக் கொண்டிருக்கட்டும், ஆண்ட குடி கெட்டுக் கொண்டிருக்கட்டும் என்பது முதுமொழி. அதுபோன்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் வெளியிலே தொழில் நடத்தி முதலீட்டுகின்ற வகையிலே தவறுகள் பல நடந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் தான் தன்னுடைய பதிலிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்களே, ஆகவே அதையே திரும்பத் திரும்பக் கேட்காமல் வேறு ஏதாவது தகவல் வேண்டுமானால் கேளுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த விஷயம் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்ற காரணத்தால் அந்தத் தீர்ப்பு வந்தவுடன் பரிசிலிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே இதற்காக சட்டத்திலேயே திருத்தம் செய்வதற்கு இந்த அமைச்சரவை முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இதுபற்றி உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு வர இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது டாக்டர்கள் பல மணி நேரம் வெளியிலே உள்ள மருத்துவ மனைகளிலே போய்ச் செயல்படு கிறார்கள். ஆகையால் அரசாங்க மருத்துவ மனைகளிலே கிடைக்க வேண்டிய சேவை கிடைக்காமல் இருக்கின்றது. ஆகவே அதைக் கிடைக்கச் செய்கின்ற அளவுக்கு, அந்த டாக்டர்களைத் தூண்டுகிற அளவுக்கு, அதாவது ஒரு இன்ட்யூஸ் மென்டாக அவர்களுக்கு டியூட்டி அலவன்ஸ் என்று கொடுத்து அவர்கள் வெளி மருத்துவ மனைகளிலே செயல்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்கான அளவிலேதான் இந்த அரசு உச்ச நீதிமன்றத்தினு டைய தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஸ்டான்லி மருத்துவ மனையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகிறபோது வெளியிலே மருத்துவமனை வைத்திருக்கின்ற டாக்டர்கள் மருந்துகளைத் திருடிச்செல்வதாக.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அவர் கேள்வியைக் கேட்கின்றபோதே சம்பந்தம் இல்லை என்று கூறி உட்கார வைத்துவிடுகிறீர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். தலைவர் செய்ய வேண்டிய வேலையை திரு துரைமுருகன் அவர்கள் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எனக்கு ஒத்துழைப்பு தரவேண்டும். எந்த உறுப்பினர் பற்றியதாக இருந்தாலும் நீங்கள் எழுந்து எழுந்து பேசுவது சரியல்ல. அப்படி நீங்கள் பேசுவது எந்த முறையின்கீழ் வருகிறது என்பது தெரியவில்லை. முதல் வரிசையிலே இருக்கின்ற தலைவர்களும் இதைப்பற்றி ஏன் என்று கேட்டு ஒத்துழைப்பதும் இல்லை. ஆகவே நீங்கள் உட்காருங்கள். அவர் கேட்ட கேள்விக்குத்தான் நான் சொன்னேன்.

1979 மார்ச் 3]

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, நியாயத்திற்கு முன் வரிசை என்றும் பின்வரிசை என்றும் கிடையாது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு கொஞ்சம் ஒத்துழையுங்கள். உட்காருங்கள். அடுத்த உறுப்பினரைக் கூப்பிடப்போகிறேன்.

[முற்பகல் 11-00]

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரம் முடிந்துவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஒரு செகன்ட் இருக்கிறது. அவையின் அனுமதியுடன் வினா நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : ஹானரரி சர்ஜன்ஸ், கௌரவ மருத்துவர்கள் நோயாளிகள் அவர்கள் தனிமருத்துவ மனைகளுக்கு வரும்போது அரசாங்க மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளைப் பயன்படுத்துவதால், அரசாங்க மருத்துவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கருதப்படுவதால் அதைத் தவிர்க்க ஆனரரி சர்ஜன்ஸ் நியமிக்கப்படுவதை நிறுத்துவதற்கு அரசு ஆலோசிக்குமா? அதைப்பற்றி அண்மையில்கூட சுகாதார அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பது உண்மையா? உண்மையானால் அதை எப்போது செயல்படுத்தப்போகிறார்கள்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மூலக் கேள்வி அரசாங்க டாக்டர்களைப் பற்றியது. கௌரவ மருத்துவர்களைப் பற்றியதல்ல. ஆகவே தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : அரசாங்க மருத்துவ அதிகாரிகள் தனியாக மருத்துவம் செய்வதால் அரசாங்க மருந்துகளை எடுத்து ட்ரீட்மென்ட் செய்வதாக பொதுமக்கள் சொல்லுகிறார்கள். மேலும் தனியாக சிகிச்சை செய்வதால் அதிகப்படியாக சம்பாதிக்க நினைக்கிறார்கள். ஆகவே, அதை நிறுத்தி அரசாங்கம் அவர்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அப்படி மருத்துவர்கள் பயன்படுத்துவதைத் தடுக்க நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. தனியாக வைத்தியம் பார்ப்பதுபற்றி அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. அதற்காக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

[1979 மார்ச் 3

சௌடாம்பிகை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்.

*வினா எண் 217—திரு ஆ. நடராசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் வெள்ளலூர் ஸ்ரீசௌடாம்பிகை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச்சங்கம் லாபகரமாக நடைபெறுகிறதா ?

(ஆ) அங்கு தற்போது தேங்கியுள்ள சரக்கு எவ்வளவு ?

(இ) இதனால் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனரா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :

(அ) ஆம்.

(ஆ) இப்போது இருப்பில் உள்ள சரக்குகளின் விலை ரூ. 36,000. இது மாத உற்பத்தியில் பாதி அளவேயாகும்.

(இ) இதனால் நெசவாளர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை.

திரு. ஆ. நடராசன் : சென்ற ஆண்டு இந்தச் சங்கத்திற்கு எவ்வளவு ரூபாய லாபம் வந்தது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சென்ற ஆண்டு ஆரம்ப நிலையில் இந்தச் சங்கத்தில் துணித் தேக்கம் அதிகம் இருந்ததால் ஓரளவு நஷ்டத்தில் இயங்கியது. ஆனால் சென்ற ஆண்டு அறிவித்த 20% ரிபேட்டினால் தேங்கிக் கிடந்த துணிகள் அனைத்தும் விற்பனை செய்ததாலும், காசுக் கடன் அதிகரித்திருப்பதாலும் தற்போது அச்சங்கம் லாபத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடங்கள்.

வினா எண். 501—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974, 1975, 1976ஆகிய வருடங்களில் வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் எந்தெந்த புதிய வழித் தடங்களில் பேருந்துகள் விடப்பட்டன?

(ஆ) அவற்றுள் எத்தனை வழித்தடங்கள் தனியார்த் துறை, போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு கொடுக் கப்பட்டன ?

(இ) இன்னும், எந்தெந்த வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதற்கான கோரிக்கை மனுக்கள் நிலுவையிலுள்ளன?

(ஈ) பேருந்து வழித்தடங்களில் நீட்டிப்பு (Extension) கேட்டு பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை? அவற்றில் நீட்டிப்பு பெறப்பட்டவை எத்தனை?

விடை —

விவர அறிக்கை * ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

நகரசுத்தித் தொழிலாளர் சங்கங்கள்

வினா எண். 502— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி பற்றிய நடைமுறை விதி எண். 21 பிரகாரம் நகரசுத்தித் தொழிலாளர்கள் அயலார் பொறுப்பேற்றுள்ள சங்கங்களில் இருக்கக் கூடாது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்த விதிமுறையைத் திருத்த உத்தேசம் உண்டா?

விடை —

(அ) சரி.

(ஆ) திருத்தம் தேவையில்லை.

காட்பாடி அருகே உள்ள மேம்பாலம்

வினா எண். 503— திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்பாடி ரயில் நிலையத்திற்கு மேற்கே உள்ள மேம்பாலம் சிறியதாக உள்ளதால் அதைப் பெரிதாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை —

உண்டு.

சண்முக ஆற்றின் குறுக்கே பாலம்

வினா எண். 504— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

* 219-ம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

(அ) பழனி வட்டத்தில் மானூறுக்கு அருகே சண்முகம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை —

(அ) இல்லே.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பணியிலமர்த்தப்பெற்ற தமிழாசிரியர்கள்

வினா எண். 505— திரு. கா. அப்பனு கவுண்டர்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்க் கல்லூரிகளில் புலவர் பட்டம் பெற்று தமிழாசிரியர் பணியில் சேர்ந்தோர் எத்தனை பேர்?

விடை —

1975–76—34.

1976–77—20.

1977–78—74.

அம்பாசமுத்திரம் தொகுதியில் தெரு விளக்குகள்

வினா எண். 506— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணிமுத்தாறு டவுன்ஷிப் கமிட்டியின் எல்லையான மாஞ்சோலே, நாலுமுக்கு மற்றுமுள்ள தோட்டப் பகுதிகளில் தெரு விளக்குகளுக்கு டவுன்ஷிப் கமிட்டி பணம் கட்டாததால் சமீப காலமாக தெரு விளக்குகள் எரியவில்லேயென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மேற்படி தெரு விளக்குகள் அனைத்தும் உடனடியாக எரிய அரசு என்ன ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளது?

விடை —

(அ) ஆம்.

(ஆ) தற்போது விளக்குகள் எரிகின்றன)

1979 மார்ச் 3]

நீலகிரி மாவட்டத்தில் அமைக்கப்பெற்ற தார்ச்சாலைகள்.

வினா எண் 507—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாடு திட் டத்தின் கீழ் தார் போடப்பட்ட சாலைகள் எத்தனை ?

(ஆ) எல்லாச் சாலைகளும் தார் போடப்பட்டு முடிந்துவிட் டனவா ?

(இ) இந்தச்சாலைகளுக்கு தார் போடப்பட்டு முடிக்க தனித் தனியாகச் செலவழிக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

விடை —

சபை முன் ஓர் விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் ஏரியின் குறுக்கே பாலம்

வினா எண் 508—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஏரியின் கோடியில் ஒரு பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை —

இல்லை.

சென்னையில் விளம்பரப் பலகைகள் நிறுவ அனுமதி

வினா எண் 509—திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர எல்லைக்குள் நடைபாதை ஓரத்தில் விளம்பரப்பலகைகள் நிறுவ எந்தெந்த விளம்பர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

*225-ம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

(ஆ) எந்தவித முறையின் அடிப்படையில் அனுமதி வழங்கப் பட்டுள்ளது ?

(இ) எத்தனை ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது ?

விடை —

ஒரு விவர அறிக்கை * சட்டமன்றப்பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

கேரளாவிலிருந்து தமிழகத்துக்கு வாங்கப்பெற்ற மின்சாரம்.

வினா எண் 510—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 பிப்ரவரி மாதம் கேரளாவிலிருந்து தமிழகத் துக்கு வாங்கப்பெற்ற மின்சாரம் எவ்வளவு யூனிட்டுகள் ?

(ஆ) அதற்கு கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

விடை —

(அ) 1977 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் 7,70,34,365 யூனிட்டு மின்சாரம் கேரள மின்சார வாரியத்திடமிருந்து மூளி யாறு முனையில் வாங்கப்பட்டது.

(ஆ) அதற்காக ரூ. 96,29,295 கொடுக்கப்பட்டது.

ஸ்ரீமதுரை விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன்கள்

வினா எண் 511—திரு. கே. உச்சி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) 1977-78-ல் நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியி லுள்ள ஸ்ரீமதுரை பஞ்சாயத்திலுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடன்கள் கூட்டுறவுச் சங்கம் மூலம் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) ரூ. 1.58 இலட்சம்.

*229-ம்பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது

1979 மார்ச் 3]

சந்தேக வழக்கின் கீழ் தண்டிக்கப் பெற்றவர்கள்

வினா எண் 512—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–77 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சந்தேக வழக்கின் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை —

	1976	1977
(அ)	36,635	43,109
(ஆ)	1,43,940	19,999

குடவாசலில் தீயணைப்பு நிலையம்

வினா எண் 513—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி குடவாசல் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முதல் துவங்கும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

குறியமலை-கொலக்கம்பை சாலை மேம்பாடு

வினா எண் 514—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை தொகுதி மேலூர் கிராமம் குறியமலையிலிருந்து கொலக்கம்பை வரை செல்லும் சாலையை மலை-மேம்பாட்டு திட்டத்தில் எடுத்து செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) ஆம். உண்டு.

(ஆ) இவ்வேலை வரைவு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு 1979-80-க்கான இரண்டாம் பாக திட்டங்களில் (Part II schemes) செயல்படுத்தப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

[1979 மார்ச் 3

நீலகிரி மாவட்ட பழங்குடியினர்களுக்கு வீடுகள்.

வினா எண் 515—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் தொகை 20,515 ஆகும்.

(ஆ) 1,065 பேருக்கு இதுவரை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நன்னிலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

வினா எண் 516—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நன்னிலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

விடை—

இல்லை.

தெய்வீகப் பேரவை.

வினா எண் 517—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி அற நிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் தெய்வீகப் பேரவை தற்போது இயங்கி வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில் அரசு அதற்கு நிதி உதவி ஏதேனும் அளித்து வருகின்றதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தெய்வீகப் பேரவை, 1860-ம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒன்றாகும். இப்பேரவைக்கு அரசு நிதி உதவி ஏதும் செய்யவில்லை.

1979 மார்ச் 3]

ஆனால், கோயில்கள் தங்கள் உபரி நிதியிலிருந்து நிதியுதவி செய்து வந்தன. 1976-ம் ஆண்டிலிருந்து கோயில்கள் உபரி நிதியிலிருந்து செய்து வந்த நிதி மாற்றமும் நிறுத்தப்பட்டு விட்டது.

மாநில விளையாட்டுக் குழுவுக்கு அளித்த தொகை

வினா எண் 518—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநில விளையாட்டுக் குழுவுக்கு 1977–78-ம் ஆண்டில் அரசு அளித்த தொகை எவ்வளவு ?

விடை—

ரூபாய் 16,00,000.

தமிழ்நாட்டில் மின்சார மேடை அமைக்கப்பெற்றுள்ள சுடுகாடுகள்.

வினா எண் 519—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எங்கெங்கு மின்சார பரியல் கிரவுண்டுகள் உள்ளன ?

(ஆ) அதை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் சென்னை மயிலாப்பூரில் மட்டும் ஒரு மின்சார சுடுகாடு இயங்குகிறது.

(ஆ) இல்லை.

போர்த்தி கிராமத்திற்கு சாலை.

வினா எண் 520—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் வட்டம், போர்த்தி கிராமத்திற்கு சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

ஆம்.

[1979 மார்ச் 3

உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக தமிழ்ப் புலவர்கள்.

வினா எண் 521—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975-ம் ஆண்டிலிருந்து இதுவரை தமிழ்ப் புலவர்களில் எத்தனைப் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் வருட வாரியாக?

விடை—

ஒரு உயர்நிலைப் பள்ளியில் 1976-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ம் நாள் முதல் ஒரு முதனிலைத் தமிழாசிரியர் தலைமை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்.

வட ஆற்காடு மாவட்டத்தில் இறைவை நீர்பாசன கூட்டுறவுச் சங்கங்கள்.

வினா எண் 522—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் லிப்ட் இரிகேஷன் திட்டம் எத்தனை செயல்படுகிறது; தாலுக்கா வாரியாக?

விடை—

வடாற்காடு மாவட்டத்தில் செயல் படும் இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவு சங்கங்களின் (Lift Irrigation Co-operative Societies) எண்ணிக்கை வட்ட வாரியாகக் (Taluk-wise) கீழே தரப்பட்டுள்ளது :—

வட்டத்தின் பெயர்.	இறைவை நீர்பாசன கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை.
(1)	(2)
வேலூர்	3
ஆரணி	1
செங்கம்	1
திருப்பத்தூர்	8

1979 மார்ச் 3]

பந்தநல்லூரில் உபமின் நிலையம்.

வினா எண் 523 — திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கும்பகோணம் தாலூகா பந்தநல்லூரில் உபமின் நிலையம் (Sub-station) அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் அமைக்கப்படும்?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

நன்னிலத்தில் மேல்நிலை குடிநீர் தொட்டிகள்.

வினா எண் 524 — திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் ஒன்றியத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்ட மேல்நிலைக் குடிநீர் தொட்டிகள் எத்தனை?

(ஆ) அவற்றில் இயங்கிக் கொண்டிருப்பவைகள் எத்தனை?

விடை —(அ) 19.

(ஆ) 18.

Pallavaram Municipal Office

Q. No. 525—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Municipal Office of Pallavaram is located in the Chrompet area; and

(b) if so, the steps taken to situate the Municipal Office within the Pallavaram area?

Ans. —

(a) Yes.

(b) The Municipality is taking action to acquire land to construct office building in G.S.T Road in between Pallavaram and Chrompet.

Trees in Velankanni Shrine sea shore areas

Q. No. 526 : THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether the Government are aware that (1) Coconut and (2) Palmyrah trees are slowly disappearing from the Velankanni Shrine sea shore area in Thanjavur district; and

(b) if so, the steps taken thereon ?

விடை—

விவர அறிக்கை* அவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

Bridge across Pambaru

Q. No. 527 – THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Highways Department has sent proposal to the Government for the construction of a bridge across Pambaru on the main road under the jurisdiction of the Nedungudi Highways in Thirumayam in Pudukottai district;

(b) if so, the details thereof; and

(c) when the scheme will be implemented

Ans.—

(a) No.

(b) Does not arise.

(c) Does not arise.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழில் இயல்துறை வளர்ச்சித் திட்டம்

வினா எண். 528— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழில் இயல்துறை வளர்ச்சிக்கு அரசு ஏதேனு திட்டம் தயாரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

அவை முன் ஒரு விவர அறிக்கை ** வைக்கப்பட்டுள்ளது.

* 231-ம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

** 232-ம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1979 மார்ச் 3]

தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்துக் கழகத்தின் பெருநகர்ப் பிரிவு.

வினா எண். 529—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்துக் கழகம் சென்னை பெருநகர் பகுதிக்காக நகர சர்வீஸ் ஒன்றை துவக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

சிட்லிங்கில் அரசு மருத்துவமனை.

வினா எண். 530—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரூர் வட்டம் மலைவாசி மக்கள் வாழும் பகுதியான சிட்லிங்கில் அரசு மருத்துவமனைக் கட்டும் உத்தேசம் உள்ளதா ?

விடை —

இல்லை.

விவசாயத்திற்கு காவிரித் தண்ணீர்.

வினா எண். 531—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1978–79 ஆண்டின் விவசாயத்திற்கு காவிரியில் தண்ணீர் பெற மைசூர் அரசிற்கு ஏதேனும் ஈடாக அளிக்கப்பட்டதா ?

விடை —

இல்லை.

பாபநாசம் மின் நிலையம்.

வினா எண். 532—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாபநாசம் பவர் ஹவுஸ் 1977 ஆம் வருடத்தில் எத்தனை நாட்கள் தண்ணீர் இல்லாததால் தடைபட்டது ?

(ஆ) அதற்காக அசுர எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) 1977 ஆம் ஆண்டில் பாபநாசம் மின் நிலையத்தில் ஒரு நாள் கூட மின் உற்பத்தி நிறுத்தப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலூர் நகராட்சி அலுவலக வளவுக்குள் உள்ள அனுமார் கோயில்.

வினா எண். 533—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேலூர் நகராட்சி அலுவலகச் சுற்றுச் சுவருக்குள் அனுமார் கோயில் ஒன்று இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது அமைக்கப்பட எப்போது அனுமதி தரப்பட்டது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) இது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் இல்லை என்று வேலூர் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி மாணவர்கள் விடுதியில் வானொலிப் பெட்டி.

வினா எண். 534— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய மாணவர்கள் விடுதியில் வானொலிப்பெட்டி வைக்க அரசிடம் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

1979 மார்ச் 3]

விடை —

(அ) இல்லை, ஏற்கனவே அவ்விடுதியில் ஒரு வானொலிப் பெட்டி அமைக்கப்பட்டு பயிற்சியாளர்களால் பயன்படுத்தப்படுகின்றது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கருப்பூர் கிராமத்திற்குப் புதிய நீர்ப்பாசனக் குளம்.

வினா எண் 535—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதியில் கருப்பூர் கிராமத்திற்கு புதிய நீர்ப்பாசனக்குளம் அமைக்கும் திட்டம் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எப்பொழுது இத்திட்டத்தை நிறைவேற்றும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

அரிசன நலப் பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடங்கள்.

வினா எண் 536—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணித் தொகுதி அலிவலம் ஆண்டிவயல் கிராம அரிசன நலப் பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை —

அலிவலம் மற்றும் ஆண்டிவயல் கிராமங்களிலுள்ள அரிசன நலப்பள்ளிகளுக்கு நிரந்தர கட்டிடங்கள் கட்டும் திட்டம் இப்பொழுதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை.

பேராவூரணி வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடம்.

வினா எண் 537.—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை :—

4·11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேராவூரணி வட்டாட்சியர் அலுவலகம் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

துறவிக்காடு-ஆண்டிக்காடு சாலை.

வினா எண் 538.—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

துறவிக்காடு-ஆண்டிக்காடு சாலையை தார் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை —

இல்லை.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பட்டதாரி ஆசிரியர்கள்.

வினா எண் 539 — திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ் நாட்டில் தற்போது வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து பணியில்லாமல் இருக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் எண்ணிக்கை என்ன?

விடை —

31—10—1978 அன்றைய நிலவரப்படி 10,224 பட்டதாரி ஆசிரியர்கள்.

பதிவு செய்துகொண்டுள்ள அனாதை இல்லங்கள்.

வினா எண் 540— திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர், தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட அனாதை இல்லங்கள் எவ்வளவு?

(ஆ) பதிவு செய்யப்படாத அனாதை இல்லங்கள் எவ்வளவு?

1979 மார்ச் 3]

(இ) அனாதை இல்லங்களை கண்காணிக்க ஆங்காங்கே கண்காணிப்புக் குழுக்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளதா?

விடை —

(அ) தமிழக அரசிடமிருந்து உதவித் தொகை பெறும் அனாதை இல்லங்கள் 375-ம் மத்திய அரசிடமிருந்து உதவித் தொகை பெறும் தனியார் நிறுவனங்கள் 43-ம் இம் மாநிலத்தில் உள்ளன.

(ஆ) விவரங்கள் இல்லை.

(இ) இல்லை.

கிழக்கு இராமநாதபுரத்தில் மானாவாரிப் பயிர்த் திட்டம்.

வினா எண் 541 : திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் வறண்ட இடங்களில் மானாவாரிப் பயிர் செய்வதற்கு அரசு ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன பயிர்கள் பயிரிட அரசு உத்தேசித்துள்ளது?

விடை —

(அ) ஆம்.

(ஆ) (அ) தானிய வகைகள்.

(ஆ) பருப்பு வகைகள்.

(இ) எண்ணெய் வித்துக்கள்.

(ஈ) பருத்தி.

Shopping Complex Buildings.

Q. No 542—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Labour be pleased to state: —

(*a*) whether the World Bank is financing the Shopping Complex buildings of the Tamil Nadu State Housing Board;

(*b*) the details thereof.

Ans. —

(*a*) No. The World Bank is not financing the Shopping Complex Buildings of the Tamil Nadu State Housing Board.

(*b*) Does not arise.

(அ) உலக வங்கி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு கடைகளுககான கட்டிடங்கள் கட்ட நிதி உதவி செய்யவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

இராணிப்பேட்டை அருகில் வழிப்பயண ஓட்டல்

வினா எண் 543—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டைக்கு அருகில் சிப்காட் தொழிற் பேட்டைக்கு அடுத்தாற்போல் வழிப்பயண ஓட்டல் ஒன்று திறக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான செலவுத் தொகை எவ்வளவு?

விடை

ஆம் ;

(அ) 24—9—1978 அன்று இராணிப்பேட்டையில் சாலையோர விடுதி ''மரகதம்'' எனும் பெயரில் திறக்கப்பட்டது.

(ஆ) இதற்கான செலவு ரூ. 7·85 இலட்சம்.

வியாசர்பாடியில் பர்மா அகதிகளுக்கு வீடுகள்.

வினா எண் 544.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்மா அகதிகளுக்காக வியாசர்பாடியில் வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் அதற்காக அரசு செலவழித்த தொகை எவ்வளவு ?

விடை

(அ) மற்றும் (ஆ) பர்மா அகதிகளுக்கு இதுவரை வியாசர்பாடியில் வீடுகள் கட்டித் தரப்படவில்லை. ஆனால் தற்பொழுது மத்திய அரசின் கடன் உதவியுடன் வியாசர்பாடியிலுள்ள பர்மா அகதிகளுக்கு சென்னை, பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

1979 மார்ச் 3]

Public Latrines in Madras

Q. 545—N. KITTAPPA: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the total number of public latrines constructed in Madras by the Madras Corporation, and

(b) the steps taken to maintain them properly?

Ans.

(a) 514

(b) Adequate number of Sanitary Workers are posted for cleaning both in the morning and evening. Water facilities are also provided.

சங்கரப்பேரியில் சலவைத் துறை.

வினா 546.—திரு ந. தனசேகரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி யூனியன் சங்கரப்பேரி என்னும் இடத்தில் சலவைத்துறை அமைக்க கோரிக்கை ஏதேனும் அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை

(அ) ஆம்.

(ஆ) தூத்துக்குடி நகராட்சியின் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் இக்கோரிக்கை ஏற்கப்படவில்லை.

மன்னார்குடி குத்தகை பதிவு அதிகாரிக்கு வரப்பெற்ற விண்ணப்பங்கள்.

வினா 547—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி குத்தகை பதிவு அதிகாரி அவர்களுக்கு குத்தகை பதிவு கோரி 15-9-1978 வரை வந்துள்ள மொத்த விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) இதன் மீது தீர்வு காணப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

விடை

(அ) 185 (30-9-1978 முடிய).

(ஆ) 141 (30-9-1978 முடிய).

[1979 மார்ச் 3

கூடலூர் விவசாயிகளுக்கு குத்தகைக்கு தரிசு நிலங்கள்.

வினா 548—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம் கூடலூரில் நெல் பயிரிட தகுதியான தரிசு நிலங்களை விவசாயிகளுக்கு குத்தகைக்கு விடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

விடை

இல்லை.

நன்னிலம் பிற்பட்ட வகுப்பு மாணவியர் இல்லம்.

வினா 549—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னிலம் பிற்பட்ட மாணவியர் இல்லத்தில் தங்கும் மாணவியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டி அரசிற்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

விடை

நன்னிலம் பிற்பட்ட வகுப்பு மாணவியர் இல்லத்தில் தங்கும் மாணவியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டி விண்ணப்பம் ஏதும் அரசுக்கு வரவில்லை.

கோட்டைப்பட்டி-அரசப்பட்டி ஓடையின் குறுக்கே பாலம்.

வினா 550—திரு, இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்ராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த கோட்டைப்பட்டிக்கும் அரசபட்டிக்கும் இடையில் உள்ள ஓடையின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனின் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

1979 மார்ச் 3]

விடை

(அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து சுமார் ரூ. 60,000 மதிப்பீட்டில் பாலம் கட்டும் வேலையை செயல்படுத்தும்படி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

(2) அறிவிப்பு

மேலவையில் நிறைவேற்றப்பெற்ற சட்ட முன்வடிவுகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓா அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன் வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது:

1. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1979).

2. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1979).

3. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1979).

4. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979).

(3) தகவல் கோரல்

திருச்சி சிம்கோ மீட்டர் நிறுவனம் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. ரா. உமாநாத் : ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிப்பது என்பதுபோல் சிம்கோ மீட்டர்ஸ் நிறுவனம் அமர்த்தியிருக்கிற குண்டர்கள் பொதுமக்களைத் தாக்கி விட்டார்கள் முந்தாநாள், அது சம்பந்தமாக ஒரு பதட்டநிலை பரவியிருக்கிறது. அதுபற்றி அட்ஜெர்ண்மெண்ட் மோஷன் கொடுத்திருக்கிறேன். அதை அவசரமாக இன்றைக்கே எடுத்துக் கொள்ள வேண்டும். பட்ஜட் வரப்போகிறது, ஆகவே அதைப் பற்றி தாங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்றைக்கும் எந்த முறையில் எடுத்துக் கொள்ளுகிறோமோ அந்த முறையில் இதைப் பரிசீலிப்பதற்காக அது என்னுடைய அறையில் இருக்கிறது. நீங்கள் கொடுத்தது, 8-45 மணிக்குத்தான். சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் சொல்லி இதை எடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். இதுபற்றி இன்னும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு தகவல் அனுப்பவில்லை. இது சம்பந்தமான தகவல்களை சேகரித்தவுடனேயே இதை இங்கு வைக்க நான் தயாராய் இருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : நான் சொல்ல வருகின்ற பாயின்ட் என்னவென்றால், சாதாரண நாட்களில் வருகின்ற நோட்டீஸ் மாதிரியோ சாதாரண நாட்களில் கொண்டு வரப்படுகின்ற மோஷன் மாதிரியோ அல்ல இது. இன்று பட்ஜெட் வரப்போகிறது. நான் கொடுத்த அட்ஜெர்ன்மென்ட் மோஷன் உங்கள் முன்னால் இருக்கிறது. இந்த அட்ஜெர்ன்மென்ட் மோஷன் ஜெயிக்குமா தோற்குமா என்பது வேறு விஷயம்.. .. irrespective of what actually happens அப்படி வருகிறபோது, ஒரு வேளை அட்ஜெர்ன்மென்ட் மோஷன் ஜெயித்தால் பட்ஜெட் இங்கே சமர்ப்பிக்க முடியாது. அப்படி சமர்ப்பித்தால்..It will become infructuous—the whole Budget itself will become infructuous நீங்கள் வேண்டுமென்றால் இது தோற்கப்போகிறது என்று ப்ரிஸூம் பண்ணலாம். அது வேறு விஷயம். ஆனால் இருக்கின்ற அட்ஜெர்ன்மென்ட் மோஷனை டிஸ்போஸ் செய்யாமல் பட்ஜெட்டை சமர்ப்பிக்க சொல்வது சரியல்ல என்பது தான் என் பாயின்ட்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களே இதன் மீது முடிவை சொல்ல முடியாது. எப்படி முடிவு எடுக்கலாம் என்கின்ற உரிமை பேரவைத் தலைவரிடம் தான் இருக்கிறது.

அந்த என்னுடைய உரிமையை நீங்கள் எடுத்துக் கொள்ள முடியாது. விதிகளின்படி இதன் உள்ளே அவசர முக்கியத்துவம் இருக்கிறதா என்று பரிசிலித்து பார்த்தபின்னால் அவசர முக்கியத்துவம் இருக்குமென்றால், அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து, அதன் மீது பதில் சொல்லலாம் என்ற நிலையில் அதை நான் அவையில் வைப்பேன். அப்படியில்லாமல் தாங்கள் சொல்வது போல் இதை ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும்; இதை இப்போதே வைத்து தான் ஆக வேண்டும் என்ற நிர்பந்தத்தை அவைத் தலைவரைப் பார்த்து உறுப்பினர் சொல்ல முடியாது, ஒத்திவைப்புத் தீர்மானம் உண்மையிலேயே பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. தகவல் வந்த பின்னால், வைப்பதா இல்லையா என்பது என் முடிவு. மேலும் நீங்கள் அவையில் பொது விவாதத்தின்போது, சந்தர்ப்பம் கிடைக்கின்ற பொழுது பேச வாய்ப்பு உண்டு. ஆனாலும் அவசர முக்கியத்துவத்தைக் கருதி, நீங்கள் கொடுத்திருப்பது என் அறையில் பரிசீலனையில் உள்ளது. அரசின் பதிலை பெற்ற பின் அதை அவையில் வைக்கலாம் என்று இருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : உங்கள் உரிமையை நான் மறுக்கவில்லை. நான் சொல்வது என்னவென்றால், அன்றைக்கே நீங்கள் அமைச்சர்களுக்கு சொல்லியிருக்கிறீர்கள், அவசரமான விஷயங்களுக்கெல்லாம் தகவலைத்திரட்டி வைத்துக்கொள்ளுங்கள் என்று ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே இதன்மீது they must be ready இந்த நிலையில் இன்றைக்கு பட்ஜெட் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்வதற்கு முன்பாகவே நீங்கள் அட்ஜெர்ன்மென்ட் மோஷனுக்கு முடிவு எடுக்க வேண்டும் என்பதிலே தான் என்னுடைய பாயின்டே இருக்கிறது. You should have taken the decision today itself.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்வது, அவர்கள் கொடுத்திருக்கின்ற அட்ஜெர்ன்மென்ட் மோஷன் இருக்கிற போது எப்படி பட்ஜெட்டை முன் வைக்கலாம் என்று கேட்கிறார்கள். இந்த மன்றத்தின் சார்பாக நான் உங்களிடம் கேட்க விரும்புவது, அட்ஜெர்ன்மென்ட் மோஷன் அவையில் வருகிறதா என்பது தான். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் என்ன கொடுத்திருக்கிறார்கள் என்று அவைக்குத் தெரியாது, (குறுக்கீடு) இந்த அவைக்கு தெரியாது..அதற்கு முன்பு. இந்த அவை அதை ஏற்றுக் கொள்கிறதா நிராகரிக்கிறதா என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பு இதை இங்கு அவையில் கொண்டுவர வேண்டுமா வேண்டாமா என்று முடிவு எடுக்க வேண்டியமுழு அதிகாரமும் தங்களிடத்தில் இருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்னை அவையில் இருப்பதாகவே இல்லை. ஆகவே பட்ஜெட்டை வைக்கக்கூடாது என்கின்ற பிரச்னையே

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 3

எழவில்லை என்பதை ரூல்-44 ல் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.. The speaker may withhold consent to the matter being raised before the House.. " என்று உங்கள் அதிகாரம் இருக்கிறது. ஆகவே சபையில் வராத ஒரு பிரச்னையைப் பற்றி இங்கு பேசுவது முறை தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு. உமாநாத் அவர்களுக்கு சொல்ல விரும்புவது..

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பிரச்னை என்பது இந்த அவைக்குத் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் சொன்னது, நீங்கள் சொன்னது எல்லாம் ரிக்கார்டு ஆன பிறகு, அட்ஜெர்ன்மென்ட் மோஷனில் என்ன இருக்கிறது என்று நீங்கள் சொல்லியாய் விட்டது. ஆகவே அவைக்கு தெரியாது என்று சொல்லமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் நிகழ்ச்சியை அனுமதித்தப் பின்னால் தான். இப்போது இந்த பிரச்னை அவையில் இல்லை. என் அறையில் தான் இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : இன்று பட்ஜெட் நாளாக இருப்பதால் அட்ஜெர்ன்மென்ட் மோஷனுக்கு இன்றைய தினமே உங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி டிசிஷன் எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி என்னைக் கட்டாயப்படுத்த முடியாது. இதனுடைய முடிவை பின்னால் அறிவிக்கிறேன்.

திரு. துரை முருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இன்றைய தினம் கல்லூரி ஆசிரியர்கள் 5000 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்..

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஆசிரியர்கள் பிரச்னையிலே அரசு ஒரு நல்ல முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது. எனவே, அப்படி ஒரு நல்ல முடிவுக்கு வருவதற்கு ஒத்துழையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் சொல்லக்கூடாது என்றல்ல. உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : ஒரு வரிகூட பேசுவதற்குவிட மாட்டேன் என்கிறீர்களே, இது நியாயமா?

1979 மார்ச் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப்பேச அனுமதிப்பதோ, அனுமதிக்காததோ அது என் உரிமை. முதலிலே தயவு செய்து உட்காருங்கள். நான் நின்று கொண்டிருக்கும் போது பேசினால், அதை நான் அனுமதிக்க மாட்டேன். முதலிலே, உட்காருங்கள்: நான் உட்கார்ந்த பிறகு நீங்கள் எழுந்து பேசுங்கள்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, சுமார் 5,000 ஆசிரியர்கள் போராட்டத்திலும், 500 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டும், இன்று தமிழகத்திலே பல்வேறு சிறைகளிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், ஆண் ஆசிரியர்களும், பெண் ஆசிரியர்களும் ஒரே அறையிலே போட்டு வைத்திருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதன் தொடர்பாக, தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் ஒரு மாநாடு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க நான் அனுமதிக்க மாட்டேன். அப்படி விளக்கம் சொல்வதும் முறையல்ல. தாங்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. துரை முருகன் : இப்படி தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும், இன்னும் மாணவர்களும் இன்றைக்கு தமிழகத்திலே இத்தகைய போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழகத்திலே உள்ள எல்லாக் கல்லூரிகளும் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன, மாணவர்கள் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் இப்படிப்பட்ட ஒரு பதட்ட சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இது எங்கே கொண்டு போய் விடுமோ தெரியவில்லை. எனவே இப்படி பாதிக்கப்பட்டவர்கள் பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அறையிலே ஆய்விலே இருக்கிறது ; எனக்குத் தெரியும்.

திரு. துரை முருகன் : இதை நான் நேற்றே கொடுத்து விட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லி விட்டேன். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மற்ற உறுப்பினர்கள் கிளப்பியது போல், நானும் ஒரு பிரச்னையைப் பற்றி கிளப்ப வேண்டியிருக்கிறது. மதுரையிலே, திருப்பரங்குன்றத்திலே ஒரு வழக்கறிஞர் தாக்கப்பட்டதன் காரணமாக, நீதி மன்றங்களிலே வழக்குகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவும் என் ஆய்விலே இருக்கிறது.

திரு. கோ. சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே கடந்த 1ஆம் தேதி மாலை 6 மணிக்கு குண்டர்கள் ஏவப்பட்டு, குண்டர்களால் பொதுமக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலை காரணமாக அங்கே ஒரு பதட்ட நிலை உருவாகியிருக்கிறது, அதுபற்றி நானும் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவும் என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது ஒத்தி வைப்புத் தீர்மானம் அல்ல. எந்தவிதமான பதிலையும் எதிர் பார்ப்பதல்ல. தங்கள் ஆய்விலே இருக்கிறது, அதுவரையிலே இந்த அவையிலே எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லுகிறீர்கள். ஆனால், அதே நேரத்தில் அரசாங்கத்தின் ஆய்விலே இருக்கிறது என்று சொன்னால் பயன்படும். தங்கள் ஆய்விலே இருக்கிறது என்று சொல்லுகிறபோது, தாங்கள் அவைகளை அரசாங்கத்திற்கு அனுப்பி, அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அனுப்பி வைத்திருப்பீர்களானால், அதற்கு நன்றி செலுத்துவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் ஆய்விலே இருக்கிறது என்று சொல்லும்போதே, அதனுடைய பொருள் நான் அரசு தரப்பிலே அதற்கான தகவல்களைச் சேகரித்து, அந்தத் தகவல்கள் கிடைத்த பிறகு, அவைகளைத்தள்ளுபடி செய்வதா அல்லது எடுத்துக் கொள்ளுவதா என்பது என்னுடைய முடிவைப் பொறுத்திருக்கிறது.

1979-80ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இப்போது அளிப்பார்கள்.

(4) 1979–80 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் அவைத் தலைவர் அவர்களே,

1979–80 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தையும், 1978-79 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளையும் * அவை முன் வைக்க விழைகின்றேன். 1.

2. வேலைவாய்ப்பு வசதிகளை, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் எளியோர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதும், கல்வி, மருத்துவ வசதிகளை அதிகப்படுத்தி அவற்றைப் பரவலாக்குவதும் வரும் ஆண்டில் அரசு மேற்கொள்ள இருக்கும் பணிகளின் முக்கிய குறிக்கோள்களாகும். தொழில் வளர்ச்சிக்கு தக்க உதவிகள் தந்து, பிற்பட்ட பகுதிகளில் தொழில்கள் அமைவதற்காக ஊக்கமளிப்பதும், கைத்தறித் துறையைத் தரமான துணிகளை உற்பத்தி செய்வதற்கேற்ற முறையில் வலுப்படுத்துவதும், அடுத்த ஆண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள சிறந்த அம்சங்களாகும். வேளாண்மை, அதனுடன் இணைந்த பிற துறைகள், மின் உற்பத்தி இவற்றின் வளர்ச்சியில் தக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நலிந்தோர் நலன், குழந்தைகள் நலன் பற்றிய நிதி ஒதுக்கங்களும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாகும்.

வேளாண்மை உற்பத்தி

3. வரும் ஆண்டில் மொத்தம் 88·73 இலட்சம் டன் உணவு தானியங்களும், 36·45 இலட்சம் டன் பணப் பயிர்களும் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை வேளாண்மைத் துறை வகுத்து செயல்படுத்தும். மேலும் பழத் தோட்டங்கள், தோட்டப் பயிர்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்காக தனி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும். தரமான விதைகள், வேளாண்மை உற்பத்தித் திறன் பெருகுவதற்கு இன்றியமையாதவையாகும். உணவுத் தானிய வகைகளிலும் பணப்பயிர்களிலும் நல்ல விதைகளை உற்பத்தி செய்

* இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.

1. நிதியமைச்சரின் உரையை ஆங்கிலத்தில் 98—130ஆம் பக்கங்களில் காண்க.

வதில் தமிழ்நாடு சிறப்பான பங்கு வகிக்கின்றது. மாநில அரசின் விதைப்பண்ணைகளும், தனிப்பட்ட சீரிய உழவர்களும் உற்பத்தி செய்யும் விதைகளை, தரமானவை என்று சான்றளிக்கும் அமைப்பு தற்போது ஒரு தனிப் பிரிவாக வேளாண்மை இயக்குநரது தலைமையின்கீழ் இயங்கி வருகின்றது. அதனை முற்றிலும் தனித் தன்மை பெற்ற ஒரு அமைப்பாக ஆக்கி, விதை உற்பத்திச் சான்றளிப்புத் துறை ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும், வேளாண்மை பொருட்களுக்கு தரச் சான்று தருவதற்கென 15 'அக்மார்க்' ஆய்வுக் கூடங்களையும், 35 வேளாண்மை விளை பொருள் தரம் பிரிக்கும் மையங்களையும் (Commercial Grading Centres) நிறுவுவதற்கு வரும் ஆண்டில் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு

4. சிறு விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழைகளுக்கும் கால்நடை வளர்ப்பும், பால் பண்ணையும் பெரும் பயனளிக்கும் திட்டங்கள் என்ற காரணத்தால் இவற்றில் தனிக் கவனம் செலுத்தியுள்ளோம். கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்கள் வரும் ஆண்டிலு ம்விரிவுபடுத்தப்படும். இவற்றின்கீழ் 16 கால் நடை கிராம வட்டாரங்கள், 2 கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டங்கள் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும். புதிதாக 10 கால்நடை மருந்தகங்கள் நிறுவப்படும்; 5 கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்படும். சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட அரசூர் கோழி வளர்ப்பிடம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து பெரும் வரவேற்பு இருப்பதால், கப்பலூரில் தற்போதுள்ள வசதிகளைப் பயன்படுத்தி, இதேபோன்று, கோழி வளர்ப்பிடம் ஒன்று நிறுவ வேண்டிய ஒதுக்கீட்டைச் செய்துள்ளோம். 2·25 கோடி ரூபாய் செலவில் நவீன ஆட்டு இறைச்சிக் கொட்டில் ஒன்று ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நவீன, சுகாதார முறையில் ஆட்டு இறைச்சி கொட்டில்கள் நிறுவுவதற்கும், இறைச்சியை பதப்

1979 மார்ச் 3]

படுத்துவதற்கும், விற்பனை வசதிகளைப் பெருக்கு வதற்கும் இறைச்சி அபிவிருத்தி நிறுவனம் ஒன்று அமைக்க முடிவு எடுத்துள்ளோம் என்பதை உறுப்பினர் களுக்கு மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.

பால் பண்ணைத் திட்டங்கள்

5. பால் பெருக்குத் திட்டத்தின் முதல் கட்டத்தில் தமிழகத்தின் சாதனை, இந்திய நாடு முழுவதிலும் பாராட்டைப் பெற்றுள்ளது. பால் பெருக்குத் திட்டம் இரண்டாம் கட்டத்தை அடுத்த ஆண்டு செயலுக்குக் கொண்டு வர மைய அரசு எண்ணியுள்ளது. இதன் கீழ், வரும் ஐந்து ஆண்டுகளில் 40 கோடி ரூபாய் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் 9·5 இலட்சம் கால்நடைகள் கொண்டு வரப்பட்டு, 8 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தை செயல் படுத்துவதையொட்டி, கூட்டுறவு அமைப்பை விரிவு படுத்த வேண்டிய நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளோம்.

வன வளம்

6. காடுகள் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள இந்த அரசு, அடுத்த ஆண்டு 30,700 ஹெக்டேர் பகுதியில் 263 இலட்சம் ரூபாய் செலவில் மரங்கள் வளர்க்க வகை செய்துள்ளது. நடப்பாண்டில் 23,300 ஹெக்டேர் பகுதியில் மரங்கள் வளர்க்க ரூபாய் 239 இலட்சம் செலவிடப்படும். 35 இலட்சம் ரூபாய்ச் செலவில், கட்டி ரப்பர் செய்யும் தொழிற்சாலை ஒன்றும் உருவாக்கப்பட்டு வருகின்றது.

7. கோடைக்கானல் மலைப் பகுதியில் 400 ஹெக் டேர் நிலப் பரப்பில் சின்கோனா பயிரிடும் திட்டத்தை யும், 160 ஹெக்டேரில் ஜெரேனியம் பயிரிடும் திட்டத் தையும் சின்கோனாத் துறை செயல்படுத்தத் தொடங்கி யுள்ளது. மேலும் 400 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் டயஸ்கோரியா பயிரிட்டு, மருந்துப் பொருளான டயஸ்ஜெனின் தயாரிக்கும் திட்டம் ஒன்று, 80 இலட்சம்

ரூபாய்ச் செலவில் செயல்படுத்தப்படுகிறது; இதன் மூலம் அன்னியச் செலாவணியும் மிச்சமாகும். இத் துறைக்கென அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 255 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

8. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் விரிவு படுத்தப்படுவதையொட்டி, அதனை அடுத்துள்ள மிருகக் காட்சிசாலை வண்டலூர் பகுதிக்கு மாற்றப் படும். இயற்கைச் சூழலில் மிருகங்கள் இருக்கும் வண்ணம், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் உருவாக்கப்பட இருக்கும் இக் காட்சிசாலை அமைக்க, முதற் கட்டத்தில் மொத்தம் 105 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். வனத் துறையின் பொறுப்பின் கீழ் இந்த மிருகக் காட்சிசாலை செயல்படும்.

மீனளம்

9. மீனளத் துறை வளர்ச்சிக்கென அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2·76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 160 விசைப் படகுகள் வினியோகிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. தமிழக மீனள வளர்ச்சி நிறுவனம் நேரடியாக இறால் ஏற்றுமதி செய்யும் முயற்சிகளைத் தொடங்கியுள்ளது. மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டும் ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும்.

கிராம வளர்ச்சி

10. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தம் 161 ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் இந்த ஆண்டு பலனடைகின்றன. புதிதாக உருவாக்கப் பட்ட இந்தத் திட்டத்தின் கீழ், கிராம பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான வேளாண்மை உற்பத்தி, நில மேம்பாடு, கறவையின வளர்ச்சி, ஆடு, கோழி வளர்த்தல் ஆகியவற்றுடன், பட்டுப்பூச்சி வளர்த்தல், கிராமப்புறத்தில் தொழில் வளர்ச்சி ஆகியவற்றிற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, அதில் குறிப்பாக நிலமற்ற விவசாயிகள், சிறு உழவர்கள், தாழ்த்தப்பட்டோர்

1979 மார்ச் 3]

ஆகியோர் சிறப்பாக பலன் பெற்று அவர் தம் வாழ்க்கை நிலை உயரும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மொத்தம் 7·12 கோடி ரூபாய் அரசு உதவி தருவதுடன், வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து கணிசமாகக் கூடுதல் நிதி வசதி பெற்று கிராம மக்களுக்கு வழங்கப்படும். வரும் ஆண்டில் 30 ஊராட்சி ஒன்றியங்கள் மேலும் சேர்க்கப்பட்டு, சுமார் 10 கோடி ரூபாய்க்கு மேல் அரசு இதற்கென செலவிட எண்ணியுள்ளது. இத் திட்டம், அரசின் வளர்ச்சித் திட்டங்களின் பலன் சமுதாயத்தின் அடித் தளத்தில் உள்ளவர்களுக்கும் போய்ச் சேர்வதற்கு தக்க உதவி செய்யும். மேலும், கிராமப்புறங்களில் நிலவும் வேலையின்மையை ஒழிப்பதற்கான பெரு முயற்சியிலும் இத் திட்டம் சிறப்பான பங்கு வகிக்கும்.

11. கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கட்கு குறுகிய காலக் கைத்தொழில் பயிற்சி அளிப்பதற்கான புதிய திட்டமொன்றையும் அடுத்த ஆண்டு அரசு செயல் படுத்தும். சுமார் 10,000 பேர்களுக்கு கைத்தொழில் பயிற்சி அளிப்பதற்கும், கருவிகள் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

12. கிராமப்புறங்களில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதென்பது ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. சிறு விவசாயிகள் மேம்பாட்டு அமைப்பு (Small Farmers Development Agency), வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டு திட்டம் (Drought Prone Area Programme), ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Development Programme) ஆகியவற்றின் மூலம் பலர் பயனடைந் துள்ளனர். ஆயினும், இவற்றினால் நேரடியாக பயன் எய்தாத, வேலை வாய்ப்பு ஏதும் கிடைக்காத, படித்த, படிக்காத, வேலையில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு ''உறுதியான வேலை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வாய்ப்புத் திட்டம்'' செயலாக்கப்படும். இத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருக்கும், 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர் (Contractor) இல்லாமல், அரசுத் துறைகளின் நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப்படும். இத்திட்டங்களில் வேலை செய்யும் கிராம மக்களின் ஊதியம், அன்றாடம் நிறைவேற்றப்பட்ட பணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு வாரம் ஒரு முறை வழங்கப்படும். இதன்படி நாளொன்றுக்குச் சுமார் ரூபாய் மூன்றும், அரிசியும் கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும். இப்புதிய திட்டத்திற்கென நிர்வாகஅலுவலர்களுக்கு தக்க பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாசன வசதி

13. இவ்வாண்டு பி.டி. ராஜன் கால்வாய்த் திட்டம், மருதா நதி நீர்த் தேக்கத் திட்டம் ஆகிய இரண்டு நடுத்தரப் பாசன திட்டங்கள் முடிக்கப்பட உள்ளன. இத்திட்டங்களினாலும், பிற பாசனத் திட்டங்களினாலும் இவ்வாண்டு கூடுதலாக 3,000 ஹெக்டேர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. பாசனத் துறைக்காக வரும் ஆண்டுத் திட்டத்தில் 25·17 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. புதிய பாசனத் திட்டங்களுக்காக ஒரு கோடி ரூபாயும் வெள்ளத் தடுப்பு, கடல் அரிப்பு தடுப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு கோடி ரூபாயும் குறிப்பிடத்தக்கவையாகும். வரும் ஆண்டில் சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்காகவும் ஏரி குளங்களைத் தூர் வாரி சீரமைக்கவும் வரவு-செலவுத் திட்டத்தில் 2·75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்

பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கிருதமால் நதி-பரலையாறு பகுதியில் 183 இலட்ச ரூபாய்ச் செலவில் 100 குழாய்க் கிணறுகள் அமைத்து 12,500 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்ட வேலை வரும் ஆண்டில் தொடங்கப்படும்.

மின் உற்பத்தி

14. மின்சார உற்பத்தியிலும், மின் வழங்குவதிலும் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வந்ததன் விளைவாக மின்சார விநியோகம் ஒரே ஆண்டு காலத்தில் 17 சத விகிதம் உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 9,448 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரத்திற்கு எதிராக இந்த ஆண்டு 11,000 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாட்டில் மொத்தம் உள்ள 25,526 அரிசன குடியிருப்புகளில் 25,305 குடியிருப்புகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள குடியிருப்புகளும் ஓரிரு மாதங்களில் மின்னொளி பெற்றுவிடும். இந்த ஆண்டு மின்வசதிப் பணிகளுக்காக 114 கோடி ரூபாய் செலவிட ஆண்டுத் திட்டம் வகை செய்கின்றது. சேர்வலாறு நீர் மின் திட்டம், மேட்டூர் அணைக்குக் கீழ் நீர் மின் உற்பத்தி செய்யும் புதிய திட்டம், தூத்துக்குடி அனல் மின் நிலையப் பணி இவற்றுக்கு ஏற்ற நிதி ஒதுக்கங்கள் செய்துள்ளதன் காரணமாக அடுத்த ஆண்டு மின் திட்டப் பணிகளுக்கு 152 கோடி ரூபாய் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றின் பயனாக தமிழ்நாடு மின்கட்டமைப்பின் (Tamil Nadu Grid) நிறுவப்பட்ட திறன் 2509 மெகாவாட்டிலிருந்து, அடுத்த ஆண்டு 2929 மெகாவாட்டாக உயரும் என்று எதிர்பார்க்கலாம். மேலும் குடிசைப்பகுதியில் வாழும் எளியோரும் மின்சார இணைப்பு பெற்று பயனடைவதற்காக, மின்சார மீட்டர்கள் இன்றி, மாதாந்திரத்தொகை மட்டும் செலுத்தும் திட்டமொன்று, அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

தொழில் வளர்ச்சி

15. சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் வளர்ச்சியில் சிறப்பு கவனம் செலுத்துவதும், அதன் மூலம் வேலை வாய்ப்புகளை கிராமப் பகுதிகளில் பெருமளவில் பரவலாக உருவாக்க முயற்சிகள் எடுப்பதும், அரசின் தொழிற் கொள்கையின் முக்கிய அம்சங்களாகும். இதனடிப்படையில் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக, பட்டுத் தொழில் வளர்ச்சி, தீப்பெட்டித் தொழில் பெருக்கம், தேயிலைத் தொழில் கூட்டுறவுகள் விரிவாக்கம், சிறு தொழில்கள் இவற்றில் ஒரு ஆண்டுக் காலத்தில் 1,30,000 நபருக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டத் தொழில் மையங்கள் சிறப்பான பணியாற்றியுள்ளன. புதிய சிறு தொழில்கள் தொடங்குவதற்கான திட்டங் களைத் தீட்டுதல், பொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் பற்றிய ஆய்வுகள் செய்தல், தொழில் முனைவர்களுக்கு (Entrepreneurs) தொழில் நுட்ப உதவி அளித்தல், நிறுவனங்களிடமிருந்து நிதி பெற்றுத் தருதல் போன்ற தேவையான பல்வேறு உதவிகளை ஒருங்கிணைந்த முறையில் இந்த மையங் கள் அளித்து வருகின்றன. தற்போது 8 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் இத் திட்டம், ஒரு சில மாதங் களுக்குள் மாநிலம் முழுவதும் விரிவாக்கப்படும். இதற்கென மொத்தம் 153 இலட்சம் ரூபாய் அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு நியமிக்கப்பட்ட டாக்டர் நாயுடம்மா அவர்கள் தலைமையிலான குழு, கிராமப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி பரவலாக சிறு தொழில்களை ஏற்படுத்தவும், கைவினைஞர்கள் தத்தம் தொழில்களை நவீனப்படுத்தவும் பல்வேறு பரிந்துரைகளைக் கொண்ட தனது அறிக்கையை சில நாட்களுக்கு முன் அரசுக்கு அளித்துள்ளது. பல்லாயிரக் கணக்கானோர்க்கு வேலை வாய்ப்புகளைத் தருவதற் கேற்ப, 300-க்கு மேற்பட்ட சிறு தொழில்கள் தொடங்க அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள

1979 மார்ச் 3]

ஆலோசனைகளை அரசு பரிசீலித்து விரைவில் செயல் படுத்த உறுதி கொண்டுள்ளது. சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், கதர்-கிராமத் தொழில் வாரியம் போன்ற நிறுவனங்களும் இம் முயற்சியில் பெரும் பங்கு வகிக்கும். இதனைச் செயல்படுத்துவதைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கு இந்தக் குழு, கிராமத் தொழில் வளர்ச்சிக் குழு என்ற பெயரில் அரசுக்கு தொடர்ந்து உதவி அளித்து வரும்.

16. இந்த ஆண்டு பட்டுப்பூச்சி வளர்ப்பதற்குத் தேவையான முசுக்கொட்டை புதிதாக சுமார் 4,000 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது ; 1979–80ஆம் ஆண்டில் கூடுதலாக 8,000 ஏக்கரில் பயிரிட திட்டமிடப் பட்டுள்ளது. மேலும் பட்டுப்பூச்சி வளர்ப்பதில் உழவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், பட்டு நூல் பிரித்தெடுப்பதற்கான கருவிகளை வழங்குவதற்கும், பட்டுக் கூடு, பட்டு நூல் விற்பதற்கான வசதிகளை உருவாக்குதல் போன்ற புதிய திட்டங்களுக்காகவும் அடுத்த ஆண்டு மொத்தம் 1·23 கோடி ரூபாய் செல விடப்படும். இந்த ஆண்டில் சுமார் 20,000 கூடுதல் வேலை வாய்ப்புகளும், அடுத்த ஆண்டில் சுமார் 40,000 கூடுதல் வேலை வாய்ப்புகளும் இதன் மூலம் உருவாக்கப்படும். இத் தொழிலின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதற்கென தனித் துறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

17. வரும் ஆண்டில் மூன்று புதிய தீப்பெட்டி பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும் ; மேலும் 20 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்படும். தற்போதுள்ள பணிக் கூட்டுறவுச் சங்கங்களில், கூடுதல் உற்பத்தியாளர்களைச் சேர்க்கவும் திட்டமிட்டுள் ளோம். தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மெழுகு, பொட்டாசியம் குளோரேட் போன்ற அடிப்படை மூலப் பொருட்கள் வினியோகத்தில் சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றது. இவற்றின் விளைவாக இந்தத் தொழிலில் வரும் ஆண்டில் சுமார் 30,000 கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

18. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நாட்டின் மற்ற பகுதிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. கடந்த ஆண்டில் சுமார் 5,500 சிறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 11 தேயிலைத் தொழிற்சாலைகள் மொத்தம் 53 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்துள்ளன. தமிழ்நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் 10 சதவீதம் இத் தொழிற்சாலைகள் வாயிலாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். நடப்பு ஆண்டில் 6 தொழிற்சாலைகளை விரிவுபடுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. அடுத்த ஆண்டில் மற்றுமொரு தொழிற்சாலை தொடங்கப்படும். இம் முயற்சிகளினால் கூடுதலாக 3,500 ஏக்கரில் தேயிலை பயிரிடப்படுவதுடன் 10,000 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்படும்.

19. கிராம கைத்தொழில்கள் வளர்ச்சியிலும், கதர் வளர்ச்சியிலும் அரசு தொடர்ந்து தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. 1976–77-ல் 4 கோடி ரூபாய் அளவில் இருந்த கதர் விற்பனை இந்த ஆண்டில் $6\frac{1}{4}$ கோடி ரூபாய் அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கதர் வாரியத்தின் ஆதரவில் உள்ள கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை இந்த ஆண்டு 27·3 கோடி ரூபாயை எட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. வரும் ஆண்டில் கதர் விற்பனை $6\frac{1}{2}$ கோடி ரூபாயாகவும், கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை 32 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

20. இந்த ஆண்டு புதிதாக தொடங்கப்பட்ட, சின்னஞ்சிறு தொழில்கள் நடத்த 900 தொழிற்கூடங்கள் கட்டும் புதிய திட்டத்தின்கீழ், இதுவரை 310 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 590 தொழிற்கூடங்களும் இவ்வாண்டுக்குள் கட்டி முடிக்கப்படும். வணிக வங்கிகள் இந்த தொழிற் கூடங்களை தொழில் முனைவர்கள் (Entrepreneurs) நேரடியாக வாங்க உதவ முன்வந்து, இந்த திட்டத்திற்குப் பெரிய ஆதரவை அளித்துள்ளன. இதன் விளைவாக அடுத்த

1979 மார்ச் 3]

ஆண்டு சுமார் 200 இடங்களில் மொத்தம் சுமார் 2,000 சின்னஞ் சிறு தொழிற் கூடங்களை, 1·5 கோடி ரூபாய் செலவில் கட்டி சிறு தொழில் முயற்சிக்கு ஊக்கம் அளிக்க சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் திட்டம் வகுத்துள்ளது. மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் மூலதன உதவித்தொகை தற்போது 33 தாலூகாக்களில் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்துடன் மேலும் பல பின்தங்கிய தாலூகாக்களில் மாநில அரசு தனது பொறுப்பிலிருந்து சிறு தொழில் நடத்த முனைவர்களுக்கு மூலதன மானியம் அளிக்க முடிவு செய்துள்ளது. இதன்கீழ், சிறு தொழில் முதலீட்டில் மொத்தத்தில் 15 சத வீதத்திற்கு மேற்படாமல் அரசு மானியம் வழங்கும். புதிய சிறு தொழில்களை ஏற்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கும் அதே நேரத்தில், முன்பே ஏற்படுத்தப்பட்ட சிறு தொழில்கள் நலிவு அடைவதைத் தடுப்பதும், நலிந்துள்ள சிறு தொழில்கள் இருப்பின், நலிந்துள்ளதன் காரணத்தை அறிந்து மீண்டும் அச் சிறு தொழில்கள் வளர வசதி செய்து கொடுப்பதும் இந்த அரசின் கொள்கையாகும். இதன் அடிப்படையில் நலிவுற்ற சிறு தொழில்கள் புத்துயிர் பெறுவதற்கு அரசு புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. தற்போது நலிவுற்ற சிறு தொழில்களை சீரமைப்பது பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப்பதற்காக தொழிற் துறைச் செயலாளர் தலைமையில், வணிக வங்கிகள், மத்திய அரசின் சிறு தொழில் உதவி நிலையம், தொழில் வணிகத்துறை போன்றோர் அடங்கிய குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. சிறு தொழில் முனைவர்களில் பலர், தொழில் விரிவடையும்போது, மூலதனத்தை ஏற்ற அளவு அதிகரிக்க முடியாமல் துயருறுவதை இக் குழு கண்டறிந்தது. நலிந்த சிறு தொழில்கள் புத்துயிர் பெற வணிக வங்கிகள் தக்க உதவி செய்யும் முறையில், மூலதனத்துக்கான நிதி உதவி (Margin Money) வழங்கும் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. சிட்கோ (SIDCO) நிறுவனம் இதற்காக அடுத்த ஆண்டு முதற்கட்டமாக 25 இலட்சம் ரூபாய் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

21. தமிழக அரசு 29 கோடி ரூபாய்ச் செலவில் அரியலூரில் நிறுவி வரும் சிமெண்ட் ஆலை மே மாதம் செயல்படத் தொடங்கும். அசோக் லேலண்ட் நிறுவனம் கூடுதலாக 5,000 பேருந்துகள் உற்பத்தி செய்வதற்கான முயற்சிக்கும் சிம்ப்ஸன்ஸ் நிறுவனம் புதியதாக 12,000 பேருந்துகள் உற்பத்தி செய்வதற்கான முயற்சிக்கும் மாநில அரசு தக்க உதவிகள் செய்து ஊக்கமளித்து வருகின்றது.

கைத்தறி

22. கைத்தறித் துணிகளின் உற்பத்தியைப் பெருக்கி துணித் தேக்கத்தை தவிர்க்கும் வகையில் புது வண்ணம், புது வடிவமைப்பு, புது ரகங்களில் துணி உற்பத்தி செய்யப்பட்டது. பாலியஸ்டர் துணிகள், கேம்பிரிக் ரகங்கள், அச்சிட்ட வாயில் சேலைகள், அச்சிட்ட பட்டுச் சேலைகள் போன்றவை புதிதாக உற்பத்தி செய்யப்பட்டன. கவர்ச்சிகரமான வண்ணங்களில் துணி உற்பத்தி செய்ய உதவும் வகையில் இரண்டு நவீன சாயச்சாலைகளும் ஒரு வடிவமைப்பு நிலையமும் (Design Centre) இயங்கி வருகின்றன. வரும் ஆண்டில் மேலும் இரண்டு வடிவமைப்பு நிலையங்களும், அய்ந்து நவீன சாயச்சாலைகளும் தொடங்கப்படும். கைத்தறித் துணிகளுக்கு பதனிடும் வசதி அளிக்க நிறுவப்பட்ட ஈரோடு கூட்டுறவு பதனிடும்சாலை, 22·50 இலட்சம் ரூபாய்ச் செலவில் விரிவாக்கப்பட்டு வருகிறது. மேலும் பாலியஸ்டர் ரக துணிகளைப் பதனிடுவதற்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெற்று, 31 இலட்சம் ரூபாய்ச் செலவில் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் பயனாக தொடக்கச் சங்கங்களின் உற்பத்தி 1976–77இல் 35 கோடி ரூபாயிலிருந்து 1978–79இல் 45 கோடி ரூபாயாகவும், கோ-ஆப்டெக்ஸின் விற்பனை 1976–77இல் 18 கோடி ரூபாயாக இருந்தது, 1978–79இல் 30 கோடி ரூபாயாகவும் உயரும்.

1979 மார்ச் 3]

23. தமிழ் நாட்டில் செயல்படும் 12 கூட்டுறவு நூற்பாலைகளில் விரிவாக்க வேலை 12 கோடி ரூபாய்ச் செலவில் முடிக்கப்பட்டு அவற்றின் மொத்த கதிர்கள் 2 இலட்சத்திலிருந்து 2·94 இலட்சம் ஆக உயர்த்தப் பட்டுள்ளன. 1977-ம் ஆண்டு நூல் உற்பத்தியில் 114 இலட்சம் ரூபாய் மொத்தம் நஷ்டமடைந்த இந்த ஆலைகள், 1978இல் மொத்தம் 200 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இயங்கின.

24. தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நிர்வாகத்தில் உள்ள இரண்டு நூற்பாலைகளிலும், உத்தரவாதம் அளித்துள்ள தனியார் துறை நூற்பாலைகளிலும் உற்பத்தி, உற்பத்தித் திறன், வேலைவாய்ப்பு முதலியவை அதிகரித்துள்ளன. அரசின் உத்தரவாதம் திரும்பப் பெற்று, ஒரு ஆலை மீண்டும் முந்தைய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் கைத்தறித் துறைக்கென மொத்தம் 866 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து

25. தமிழக அரசின் போக்குவரத்து நிறுவனங்கள், பயணிகளுக்கு நல்ல வசதிகளைத் தருவதற்கேற்ப பேருந்துகளை 7 அல்லது 8 ஆண்டுகட்குள்ளேயே மாற்றி, புதிய பேருந்துகள் விடும் கொள்கையைப் பின்பற்றி வருகின்றன. இதற்கென மொத்தம் 15·2 கோடி ரூபாய் செலவில் 950 பேருந்துகள் அடுத்த ஆண்டில் வாங்கப்படும். மேலும் போக்குவரத்து வசதிகளற்ற பகுதிகளுக்கு வசதி அளிக்கவும், மற்ற பகுதிகளில் தேவைக்கேற்ப வசதிகளைப் பெருக்குவதற்குமாக மொத்தம் சுமார் 520 சிற்றுந்துகள் (Minibuses), பேருந்துகள் 8·32 கோடி ரூபாய்ச் செலவில் அடுத்த ஆண்டு வாங்கப்படும். போக்குவரத்துக் கழகங்களில் ஒன்றைத் தவிர மற்ற நிறுவனங்களனைத்தும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. அவை, ஈட்டும் ஆதாயத்தின் ஒரு பகுதியை சாலை மேம்பாட்டு வசதிக்காக செலவிடத் திட்டமிட்டுள்ளன. சாலைகளைச் செம்மை

யாகப் பேணவேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அரசு, வருவாய்க் கணக்கில், இந்த ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் மொத்தம் 12·12 கோடி ரூபாயும் அடுத்த ஆண்டு மொத்தம் 19·07 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. அடுத்த ஆண்டு மூலதனக் கணக்கின்கீழ் சாலைகள் அமைக்க 10·14 கோடி ரூபாய் செலவிடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

கல்வி

26. அடுத்த ஆண்டின் வரவு - செலவுத் திட்டம், ஆரம்பக் கல்விக்கென புதிதாக 1,000 கூடுதல் ஆசிரியர்களை நியமிப்பதற்கும் 200 உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிப்பதற்கும் வகை செய்கிறது. 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்கள் வழங்கவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்தை நன் முறையில் செயல் படுத்துவதற்கு ஏற்ற முறையில் இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மையச் சமையற் கூடங்களை கேர் (CARE) நிறுவன உதவியுடன் அடுத்த ஆண்டில் அரசு நிறுவும். பள்ளியில் தொடர்ந்து படிக்க வசதியற்று, இடையில் படிப்பை நிறுத்தி விடுபவர்கள் பலர்; இவர்களில் ஆர்வமுள்ளவர்கள் 14 வயது நிரம்பிய பின், நேரடியாக எழுதித் தேர்ச்சி பெற வாய்ப்பு தரும் வகையில் எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு ஒன்றை அரசு நடத்தும். இதே நோக்கத்துடன், பள்ளியிறுதித் தேர்விலும், பகுதி முறைத் தேர்வுக்கு (Compartmentalisation) அரசு அனுமதி அளித்துள்ளது.

27. இந்த ஆண்டு தொடங்கப்பட்ட உயர்நிலைக் கல்விக்கு மேற்பட்ட இரண்டாண்டுப் படிப்புக்கான திட்டங்கள் நன்முறையில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. சுமார் 78,000 மாணவர்கள் புகுமுக வகுப்பில் படிப்பதற்கு எதிராக, இந்த ஆண்டு புதிய 11வது வகுப்பில் 1,14,000 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் 187

1979 மார்ச் 3]

கல்லூரிகளில் மட்டுமே மேல்படிப்பிற்காக இருந்து வந்த வாய்ப்பு, இவ்வாண்டு முதல் 912 உயர்நிலைப் பள்ளிகளில் உருவாக்கப்பட்டதன் மூலம் உயர் கல்வி பெறுவதற்கான வசதிகள் பரவலாக்கப்பட்டுள்ளன என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் புதிதாக அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்கான முயற்சிகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டு, வரும் கல்வி ஆண்டு தொடக்கத்தில் அவை கட்டி முடிக்கப்படும். இவற்றிற்கு மொத்தம் 6·0 கோடி ரூபாய் செலவிடப்படும். நகராட்சி, தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கூடங்கள் கட்டுவதற்கும், கூடுதல் இட வசதியை உருவாக்கும் பொருட்டும் ஈட்டு மானியம் அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது. இதன்படி, அறிவியல் ஆய்வுக் கூடம், விஞ்ஞானக் கருவிகள், கூடுதல் இட வசதி ஆகியவற்றிற்காக பள்ளி ஒன்றுக்கு மொத்தம் $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் வரை செலவிட அனுமதித்து, அதில் 40 சதவிகிதம் வரை 1 இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் அரசு ஈட்டு மானியமாக வழங்கும். இதற்கென வரும் ஆண்டில் மொத்தம் 1.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் அத்தகைய பள்ளி ஒவ்வொன்றின் நூலகத்திற்கும் சுமார் 6 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் வாங்குவதற்கும் அவ்வாறே ஈட்டு மானியம் வழங்கப்படும். அரசுப் பள்ளிகள், பிற பள்ளிகள் இவற்றில் புத்தகங்கள் வாங்குவதற்காக மொத்தம் 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் படிப்பு முறைக்கென 1,740 பட்ட மேற்படிப்பு பெற்ற ஆசிரியர்களை வரும் ஆண்டில் கூடுதலாக நியமிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இப் புதிய கல்வித் திட்டத்தின்கீழ் தொழில் பயிற்சி தர மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியடைந்துள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன். மொத்தம் 709 பள்ளிகளில் 1,153 பிரிவுகளில் 24,400 மாணவர்கள் தொழில் பயிற்சி தரும் பிரிவுகளில் சேர்ந்துள்ளார்கள் என்பதும், இந்திய நாடு முழுவதற்கும் நமது

மாநிலம் இதில் வழிகாட்டியாகத் திகழ்கின்றது என்பதும் நாமனைவரும் பெருமிதம் அடைவதற்கு உரியதாகும்.

28. அடுத்த ஆண்டு கல்லூரிகளில் புகுமுக வகுப்பு இல்லாமல் போகும்போது கல்லூரிகளில் தொடர்ந்து பணியாற்றி வருபவர்கள், வேலை வாய்ப்பை இழந்து விடமாட்டார்கள் என்ற அரசின் உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். பல்வேறு கல்லூரிகளில் புதிய பட்ட வகுப்புகள், பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கவும், மாலைநேர வகுப்புகள் தொடங்கவும் மொத்தம் 8 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை மேம் படுத்திக் கொள்வதற்காக, அவர்களை மேற் படிப்புக்கு அனுப்பவும் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. தற்போது சென்னையிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரையிலும் சட்டக் கல்லூரிகள் இயங்கிவருகின்றன, சட்டக் கல்லூரி வசதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கோவை, திருச்சி ஆகிய பகுதிகளில் சட்டக் கல்லூரிகள் அடுத்த ஆண்டு துவக்கப்படும்.

29. அடுத்த ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் புதிய பாலிடெக்னிக் ஒன்று நிறுவப்படும். சென்னையில் கப்பற் கட்டுமானத் தொழில் பற்றியும், பிளாஸ்டிக் தொழில் பற்றியும், திருச்சியிலும், கோவையிலும் எலெக்ட்ரானிக் தொழில் பற்றியும் புதிய பாடத் திட்டங்கள் அடுத்த ஆண்டு முதல் கற்பிக்கப்படும்.

தமிழ் வளர்ச்சி

30. தமிழ்க் கலை, பண்பாடு இவற்றின் வளர்ச் சிக்கான முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாமல்லபுரத்திலுள்ள சிற்பப் பள்ளி, வசதிகள் கூடுதலாகப் பெற்று, உற்பத்திப் பிரிவுடன் செயல்படும். சென்னை அரும் பொருட்காட்சி யக மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கங்களும் செய்யப் பட்டுள்ளன. மாவட்டத் தலைமையிடங்கள்

1979 மார்ச் 3]

ஒவ்வொன்றிலும் அரும் பொருட்காட்சியகம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு சேலத்தில் அரும் பொருட் காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளையும் அரசு செய்யும்.

மருத்துவ வசதி

31. ''மாநிலத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள ஒவ்வொருவரும், நகரப்பகுதியில் உள்ளோர் பெறும் வசதிகளை அடையவேண்டும் என்பதே இந்த அரசின் இலட்சியம்'' என்று சென்ற வரவு-செலவுத் திட்ட உரையின்போது குறிப்பிட்டேன். கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளைப் பரவலாக்கும் இந்த அரசின் புதிய திட்டத்தின்கீழ், வரும் ஆண்டில் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 62 இலட்சம் ரூபாய் செலவில் நடமாடும் மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்படும். இத்துடன் மொத்தம், மாநிலத்தில் 224 ஆரம்ப சுகாதார நிலையங்கள், நடமாடும் மருத்துவப் பிரிவுகள் கொண்டதாக அமையும். கிராமங்களில் வைத்திய வசதியைப் பரவலாக்கும் இந்த சீரிய முயற்சிக்கு, மத்திய அரசு தனது சிறப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கவேண்டும் என்று மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. கிராமப் புறங்களில் நல்ல வசதிகளை உருவாக்குவதில் பேரார்வம் கொண்டுள்ள இந்த அரசு, மற்றுமொரு புதிய திட்டத்தை வரும் ஆண்டிலிருந்து செயல் படுத்த முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர் களனைவரும் வரவேற்பர் என்பதில் எனக்கு அய்ய மில்லை. விபத்துக்கள் கிராமப்புறங்களில் ஏற்படும் போது, வேண்டிய மருத்துவ உதவிகளை விரைந்து தருவதற்காக 50 மருத்துவ மனைகளில் விபத்து உதவிப் பிரிவுகள் 45 இலட்ச ரூபாய்ச் செலவில் ஏற்படுத்தப்படும். தக்க மருத்துவ வசதி அளிப் பதற்கு ஏற்ற கருவிகள் கொண்ட வண்டிகளுடன் இவை செயல்படும். ஆரம்ப சுகாதார நிலையங்கள்

முதலுதவி அளிப்பதற்கும் மருத்துவ மனைகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கும் பயன்படுத்தப்படும். ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கும், மருத்துவர்களுக்கான வீடுகள் கட்டுவதற்கும் வரும் ஆண்டில் 43·75 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளோம். ஆரம்ப சுகாதார நிலையங்களையொட்டிய கிளை நிலையங்களில் மருந்துகள் வழங்கப்படுவதற்கும் கூடுதலாக வரும் ஆண்டிலிருந்து 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை அவையின்முன் வைத்தபோது தொண்டு நிறுவனங்கள் அமைக்கும் 50 சிறு சுகாதார நிலையங் களுக்கு உதவ திட்டமிட்டதை உறுப்பினர்கள் அறிவார்கள். இந்த ஆண்டு 66 சிறு சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், இந்த அரசு இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 120 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க உதவியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். வரும் ஆண்டில் அரசு இத் திட்டத் திற்குத் தொடர்ந்து ஆதரவு தந்து, 60 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க உதவும்.

32. செவிலியர் பயிற்சிக்கான வசதி விரிவாக்கப் பட்டதன் விளைவாக இந்த ஆண்டு 300 பயிற்சி இடங்கள் உள்ளன; அடுத்த ஆண்டில் இதனை மேலும் விரிவுபடுத்தி 550 பயிற்சி இடங்களாக உயர்த்தப்படும். இதற்கென சேலத்திலும், திருச்சியிலும் புதிய பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்படும். கண் சிகிச்சை, காது-மூக்கு-தொண்டை மருத்துவம், இரத்த சேமிப்பு, மருத்துவப் பதிவேட்டுத் துறை போன்ற சிறப்புத் துறைகளின்கீழ், 10 மாவட்ட மருத்துவ மனைகளிலும், 14 மற்ற அரசு மருத்துவ மனைகளிலும் மொத்தம் 28 சிறப்புப் பிரிவுகள் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும். இரண்டு மாவட்ட மருத்துவ மனைகளிலும் 17 மற்ற மருத்துவ மனைகளிலும் கூடுதல் கட்டடங்கள் கட்ட மொத்தம் 53 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1979 மார்ச் 3]

33. மருத்துவக் கல்வி, மருத்துவ ஆராய்ச்சியின் மேம்பாட்டிற்காக சென்னை மருத்துவக் கல்லூரி ஒரு பட்ட மேற்படிப்பு நிலையமாக மாற்றப்படும். இதற்காக இக்கல்லூரியில் உள்ள எல்லாப் பிரிவுகளும் தரம் உயர்த்தப்பட்டு மாநில மட்டத்தில் சிறந்த மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இக் கல்லூரிக்கு நரம்பியல் பிரிவு போன்ற பிரிவுகளில் சிறப்பான கருவிகள் வாங்குவதற்காகவும் அரசு வரும் ஆண்டில் வகை செய்துள்ளது. மருத்துவக் கல்லூரிகள் மேம்பாட்டுக்கான புதிய பணிகளுக்காக 32·87 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டின் மருத்துவத் திட்டங்களின் விளைவாக 326 மருத்துவர் பதவிகளும், 489 செவிலியர் பதவிகளும், 690 துணை மருத்துவப் பணியாளர் பதவிகளும், மற்ற பதவிகள் 405-ம் உருவாக்கப்படும்.

34. இந்திய மருத்துவ முறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் இரண்டு மூலிகைப் பண்ணைகளை விரிவாக்கி புதிதாக அய்ந்து இடங்களில் மூலிகைப் பண்ணைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ முறையின்கீழ் 20 கிராம மருந்தகங்கள் தொடங்கவும், 15 மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இந்திய மருத்துவத் துறைக்கு 126 இலட்சம் ரூபாய் மொத்தம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வசதி

35. நடப்பு ஆண்டில் 2,317 முதல், இரண்டாம் பிரிவு கிராமங்களுக்கு, சுமார் 12 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் வழங்கி இருக்கிறது. இதன் மூலம் ஏறக்குறைய 10 இலட்சம் மக்கள் பயனடைந்து இருக்கிறார்கள். மொத்தம் 5,420 குடிநீர் வசதி அற்ற முதல், இரண்டாம் பிரிவு கிராமங்களுக்கு ரூபாய் 25 கோடி செலவில் நீர் வழங்கும் பணி அடுத்த ஆண்டு நிறைவு பெறும். மூன்றாம் பிரிவு கிராமங்களுக்கு நீர் வழங்கும் பணியும் அடுத்த ஆண்டு

முதல் மேற்கொள்ளப்படும். மேலும் மாநிலம் முழுவதிலும் 17,000 கைப் பம்புகளை பராமரிப்பதற்கு 230 பணியாளர்களைக் கொண்ட நடமாடும் குழுக்கள் வாரியத்தின்கீழ் பணியாற்றி வருகின்றனர்; வாரியம் 2,730 மின் பம்புகளையும் பராமரித்து வருகிறது.

36. நடப்பு ஆண்டில் 39 நகராட்சி குடிநீர் திட்டங்கள், 68 நகர பஞ்சாயத்து குடிநீர் திட்டங்கள், 6 நகராட்சி வடிகால் திட்டங்கள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டில் மேலும் 4 நகராட்சி, 41 நகர பஞ்சாயத்து குடிநீர் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டில் 18 நகர குடிநீர் திட்டங்கள் நிறைவு பெற்று நீர் வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டில் 24 குடிநீர் திட்டங்களும் 8 வடிகால் திட்டங்களும் நிறைவுபெறும். நகர குடிநீர் வடிகால் திட்டங்களுக்காக இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் ஆண்டொன்றுக்கு சுமார் 7 கோடி ரூபாய் செலவிடப்படும்.

37. சுமார் 16·16 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுவாணி நீர் திட்டத்திற்கு இந்த ஆண்டு சுமார் 3·46 கோடி ரூபாயும், வரும் ஆண்டு 4·87 கோடி ரூபாயும் செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டமும் அடுத்த ஆண்டு நிறைவு பெறும்.

குழந்தைகள் நலன்

38. 1979ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டாக கொண்டாடப்படுகின்றது. குழந்தைகள் அரும் பொருட்காட்சியகம் (Children's Museum) நிறுவ 6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக 250 புதிய குழந்தைகள் காப்பகங்கள் வரும் ஆண்டில் திறக்கப்படும். அடுத்த ஆண்டில் 400 குழந்தை காப்பகங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்படும். அடுத்த ஆண்டில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான இல்லம் ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. வரும்

1979 மார்ச் 3]

ஆண்டில் எளிய குடும்பத்திலுள்ள 700 குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகளும், 1,000 ஊனமுற்ற குழந்தைகளுக்கு நடமாட உதவும் ஊன்று கோல்களும் அளிக்கப்படும். ஊனமுற்ற குழந்தைகள் அரசு நிறுவனப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய புதிய சலுகை தரவும் அரசு முடிவு செய்துள்ளது.

சமூக நலன்

39. ஊனமுற்றோர்க்கு 1,000 மூன்று சக்கர வண்டிகள் அடுத்த ஆண்டில் வழங்கப்படும். அத்தகையோர் சொந்தமாகத் தொழில் செய்ய வசதியளிக்க 1,000 சிறு கடைகள் (Bunk Stall) அமைத்துத் தரப்படும். திக்கற்ற 1,000 விதவைகளுக்கு தையல் இயந்திரங்களை இலவசமாக வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலன்

40. தீண்டாமைக் குற்றங்களை இழைப்போர் மீது தீவிர நடவடிக்கை எடுப்பதற்காக 6 நடமாடும் பிரிவுகள் செயல்பட்டு வந்தன. நடப்பாண்டில் கூடுதலாக 7 பிரிவுகள் உருவாக்கப்பட்டு சென்னை, நீலகிரி தவிர்த்து மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்த தனிப்பிரிவுகள் இயங்கும். அரிசன வீட்டு வசதிக்கென அடுத்த ஆண்டும் 2·20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் பச்சைமலைப் பகுதியில் பெரியபாக்கத்தில் பழங்குடி மாணவர் தங்கிப் படிக்கும் பள்ளி ஒன்றும், நீலகிரி மாவட்டத்தில் இரண்டு பள்ளிகளில் மாணவ மாணவியர் தங்கும் கூடங்களும் (Dormitories) அடுத்த ஆண்டு உருவாக்கப்படும். வரும் ஆண்டில் 15 புதிய விடுதிகள் திறக்கப்படும். அடுத்த ஆண்டு அரிசன, பழங்குடி மக்கள் நல வளர்ச்சிக்கென மொத்தம் 18·3 கோடி ரூபாய் செலவிடப்படும். பிற்பட்ட வகுப்பினரது நலனுக்கு 7·07 கோடி ரூபாய் செலவிடப்படும்.

தொழிலாளர் நலன்

41. தொழில் அமைதியைக் காப்பதிலும், தொழிலாளர் நலன்களைப் பேணுவதிலும் அரசு சிறப்பு கவனம் தொடர்ந்து செலுத்தி வருகின்றது. குறிப்பிட்ட சில தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் உடல் நலம் பரிசோதனை செய்யும் திட்டம் இவ்வாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது. தொழிலாளர் நல நிதி வாயிலாக தொழிலாளரின் குழந்தைகள் கல்வி வசதிக்கு உதவும் செயற்குறிப்புகளும் பரிசீலனையில் இருந்து வருகின்றன. அண்மையில் உருவாக்கப்பட்ட அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (Overseas Manpower Corporation) அயல் நாடுகளில் எந்தெந்தப் பணிகளுக்கு தேவை இருந்து வருகிறது என்பதைப் பற்றிய விவரங்களையும் நம் மாநிலத்திலிருந்து வெளிநாடு செல்ல விரும்புவோர் தகுதி, அனுபவம் போன்ற விவரங்களையும் தொகுத்து வருகின்றது.

வீட்டு வசதி

42. கிராமப்புறங்களில் வீட்டு வசதி அளிப்பதில் அரசு வரும் ஆண்டிலும் தொடர்ந்து கவனம் செலுத்தி வரும். கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மூலம் ஒரு இலட்சம் வீடுகளை கட்டும் புதிய திட்டத்தை ஆளுநர் உரையில் அறிவித்துள்ளோம். வரும் ஆண்டில் மாநிலக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், கிராமப்புற வீட்டுவசதிக்காக 4 கோடி ரூபாய் கடனளிக்கத் திட்டமிட்டுள்ளது. அரசு அலுவலர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கான வீட்டு வசதிகளைப் பெருக்குவதற்காக இந்த ஆண்டு 2,00 இலட்சம் ரூபாய் அரசு செலவு செய்யும். வரும் ஆண்டில் கூடுதலாக 50 இலட்சம் ரூபாய் செலவு செய்து இத் திட்டம் பரவலாக்கப்படும். அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட கடன் உதவி அளிப்பதற்காக அடுத்த ஆண்டு 182·5 இலட்ச ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

1979 மார்ச் 3]

சென்னைப் பெருநகர வளர்ச்சி

43. உலக வங்கியின் உதவியுடன் சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தை (Madras Urban Development Project) அரசு செயல்படுத்தி வருகிறது. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வீட்டு மனைகளை உருவாக்குவது, சாலைகள் அமைப்பது, போக்குவரத்து, குடிநீர் வடிகால் வசதிகளை மேம்படுத்துவது, சத்துணவு வழங்குவது, சிறு தொழில்களை வளர்ப்பது குறித்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை நகர வளர்ச்சித் திட்டங்களுக்காக வரும் ஆண்டு மொத்தம் 14·05 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் சென்னை நகரை அடுத்துள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் வீட்டுவசதி அமைப்புத் திட்டங் களை அரசு செயல்படுத்தி வருகிறது. அரும்பாக்கத்தில் பணிகள் முடிக்கப்பட்டு இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் மக்கள் குடியேறத் துவங்குவர். இதே திட்டத் தின்கீழ், சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் புதிதாக 285 பேருந்துகளை விடுவதன் மூலம், போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கச் செய்துள்ளது. சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தில் நகரின் குடிநீர் வழங்கும் வசதிகளையும் கழிவுநீர் அகற்றும் வசதிகளையும் பெருக்கும் திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை நகரில் குடிநீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றுதல் ஆகிய பணிகளை விரிவுபடுத்தி சீராக்குவதற்கு, இந்த ஆண்டு, சென்னை பெருநகர் குடிநீர்-வடிகால் வாரியம் (Madras Metropolitan Water-Supply and Sewerage Board) புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது. இந்த வாரியம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 20 கோடி ரூபாய்ச் செலவில் குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்றும் வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களைச் செயல் படுத்தும். வரும் ஆண்டில் இந்த வாரியம் 8·12 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

நீதி மன்றங்கள்

44. வரும் ஆண்டில் 11 புதிய குற்றவியல் நீதி மன்றங்கள் அமைக்கவும் வரவு-செலவுத் திட்டம் வகை செய்கின்றது. இவற்றை அமைப்பதின் மூலம் புதிய நீதி மன்றங்கள் உருவாக்குவது பற்றி நீதிபதி வரதராசன் குழு பரிந்துரைத்த குற்றவியல் நீதி மன்றங்கள் முதல் பகுதி, அனைத்தும் அமைக்கப்பட்டுவிடும்.

வருவாய்த் துறை

45. அன்றாடம் மக்களுடன் அரசு தொடர்பு கொள்வதில் கிராம அதிகாரிகள், வருவாய் ஆய்வாளர்கள் (Revenue Inspector) போன்ற வருவாய்த் துறை அலுவலர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட பிர்க்கா (Firka) எல்லைகளை பணிகள் செம்மையாக நடைபெறுவதற்கேற்ற வகையில் திருத்தியமைத்து, கூடுதல் பிர்க்காக்களை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும் வருவாய் ஆய்வாளர்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் வீடு கட்டித்தரும் புதிய திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. வீட்டுவசதி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் 500 இடங்களில் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 200 இடங்களில் வீடுகள் கட்டும் முயற்சி தொடங்கிவிட்டது. துணைத் தாலுக்காக்களை தாலுக்காக்களாக தரம் உயர்த்துவதன் வாயிலாக, வரும் ஆண்டில் புதியதாக 14 இடங்கள் தாலுக்கா தலைமையிடங்களாக விளங்கும். இதற்கென 11·3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தாலுக்கா அலுவலகங்கள், கோட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் கட்டுவதற்கெனவும் ரூபாய் 13 இலட்சம் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.

46. புயல் கொடுமையிலிருந்து கடலோரப் பகுதியிலுள்ள மக்கள் பாதுகாப்புப் பெறுவதற்காக புதிதாக கட்டப்பட்ட இரண்டு புகலிடங்கள் (Cyclone Shelter) சென்ற பருவ மழையின்போது நன்கு பயன்படுத்தப்

1979 மார்ச் 3]

பட்டன. பிற நாட்டவரும், மற்ற பலரும் இத்திட்டத்தை வரவேற்று உதவ தாமாக முன்வந்துள்ளனர். 46 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 23 புகலிடங்கள் செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. செஞ்சிலுவைச் சங்கத்தின் பங்கு போக எஞ்சிய தொகை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து செலவிடப்படும்.

47. நீண்ட காலமாக மறு நிலவரித் திட்டம் (Resettlement) மேற்கொள்ளப்படாத காரணத்தால், இரயத்துவாரி கிராமங்களிலுள்ள நிலப் பதிவேடுகள் பழமையானவையாகவும், தற்போதுள்ள நிலையை பிரதிபலிக்காமலும் உள்ளன. இந் நிலமையை மாற்றி, நிலப் பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டமொன்றை வரும் ஆண்டிலிருந்து செயல்படுத்த இவ்வரசு முடிவெடுத்துள்ளது. 1·48 கோடி ரூபாய்ச் செலவில் மேற்கொள்ள இருக்கும் இத் திட்டத்தின்படி, தமிழகத்தில் நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் மறு நில அளவை செய்யப்பட்ட பகுதிகள் நீங்கலாக, 30,000 சதுர மைல் பரப்புள்ள நிலங்கள் மீண்டும் அளக்கப்பட்டு, கூட்டுப் பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக பிரிக்கப்படுவதுடன், நிலவரைப் படங்கள், மற்றும் கிராமத்திலுள்ள பதிவேடுகள் அனைத்தும் தற்போதைய நிலையைப் பிரதிபலிக்குமாறு திருத்தி அமைக்கப்படும். இத்திட்டம் விவசாயிகள் தங்கு தடையின்றி வங்கிகளில் கடன் உதவி பெற வாய்ப்பு ஏற்படுத்துவதுடன், அவர்கள் தங்கள் உரிமையினை அறியவும் பயன்படும். இது அரசுக்குச் சொந்தமான நிலங்களின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றவும் உதவியாக இருக்கும்.

காவல் துறை

48. அரசின் மதுவிலக்குக் கொள்கையை நன்முறையில் செயல்படுத்த பல்வேறு முனைகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சேலத்தில் புதியதாக மதுப்பொருள் ஆய்வுக் கூடம் ஒன்று அமைக்கப்படும். மேலும், தற்போதுள்ள ஆய்வுக் கூடங்களும் விரிவு

படுத்தப்படும். பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்ளவும், தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்க உதவும் வகையிலும் தொலைபேசித் தொடர்பு இல்லாத எல்லாக் காவல் நிலையங்களிலும் இந்தத் தொடர்பு அமைக்க அனுமதி அளித்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. காவலர்க்கான குடியிருப்புகள் கட்டும் பணி விரைவுபடுத்தப்பட்டு, அடுத்த ஆண்டு இதற்கென 1·50 கோடி ரூபாய் செலவிடவும் வகை செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், காவல் துறையைப் பொதுவாக பலப்படுத்தவும், புதிய காவல் நிலையங்களை ஏற்படுத்தவும் பல இடங்களில் மகளிர் காவல் பிரிவு அமைக்கவும், கைரேகைப் பிரிவுகளை வலுப்படுத்தவும், மற்ற தொடர்புடைய அலுவலகப் பணியாளர் நியமிப்பதற்குமாக மொத்தம் 1·37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மதுவிலக்குக் கொள்கையைச் சீரிய முறையில் செயல்படுத்துதல், சட்டம் ஒழுங்கை நன்முறையில் நிலை நாட்டல், குற்றப் புலனாய்வை திறம்படச் செய்தல் ஆகிய மூன்று பணிகளுக்கும் ஏற்ற முறையில் காவல் துறையைச் சீரமைத்து செம்மைப் படுத்துவதற்கான பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

49. கிராமப்பகுதிகளின் தேவைகளின் அடிப்படையில், அடுத்த ஆண்டு, 20 சிறு நகரங்களில் தீயணைப்பு நிலையங்கள் புதியதாக அமைக்கப்படும். எந்த ஒரு ஆண்டிலும் இவ்வளவு அதிகப்படியான தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டதில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கிராமப்புற மக்களுக்கு தீயணைப்புப் பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்றும் அடுத்த ஆண்டு செயல்படுத்தப்படும்.

50. சிறைச்சாலைகளில் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின் வசதி ஆகியவற்றை அளிப்பதற்கான திட்டங்களை வகுத்து, நடப்பாண்டிலும், அடுத்த ஆண்டிலுமாக மொத்தம் 57 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இது நிறைவேறும்போது, தமிழ்நாட்டிலுள்ள எல்லாச்

சிறைச்சாலைகளும் இந்த அடிப்படை வசதிகள் பெற்றவைகளாக அமையும். மேலும் சிறையிலுள்ள தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவும், ஆழ் கிணறுகள் அமைக்கவும் 23·5 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். தென் மண்டலத்திற்கு சிறைச்சாலை நிர்வாகம் பற்றிய பயிற்சிப் பள்ளி வேலூரில் நிறுவப்பட்டு வருவது இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசு அலுவலர் நலன்

51. மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு முடிவெடுத்து, 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து புதிய ஊதிய விகிதங்களும், அவற்றையொட்டிய, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி, பயணப் படி, மலைவாழ் படி, குளிர்காலப் படி முதலிய பல நன்மைகளும் செயலாக்கப்பட்டுள்ளன. ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து அவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகளை மேலும் தாராளமாக்கியது. உடனடியாகக் கிட்டும் ஊதிய உயர்வின் குறைந்த அளவு, பரிந்துரை செய்யப்பட்ட ரூபாய் 15இலிருந்து, ரூபாய் 20ஆக உயர்த்தப்பட்டது. நடு நிலையிலும் அடி நிலையிலுமுள்ள பெரும்பான்மையான பதவிகளிலுள்ளோர், பத்து ஆண்டு பணிக்குப் பின்னர் உயர் பதவிக்கோ, தேர்வு நிலைக்கோ செல்ல சீரான வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது. ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி கடைநிலை அலுவலர்களுக்கு இது பொருந்தாது. ஆனால் அவர்களுடைய நிலையை அரசு பரிவுடன் கவனித்து, அவர்களுக்கும் தேர்வு நிலை ஏற்படுத்தியுள்ளது. ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகளினால், அரசுக்கு உடனடியான அதிகச் செலவு ஆண்டொன்றுக்கு ரூபாய் 37 கோடியாகவும், நாளடைவில் ரூபாய் 67 கோடியாகவும் இருக்கும். அரசு அலுவலர்களின் நலம் கருதி, மேலும் பல நலன்கள் அவர்களுக்குக் கிட்டும் வகையில் முடிவுகளெடுக்கப்பட்டுள்ளன.

52. அரசு அலுவலர் வீடு கட்ட பெறும் கடன் வசதியின் பயன் மாநிலத்தின் பல பகுதிகளிலுமுள்ள அலுவலர்களுக்குப் பரவலாகவும், விரைவாகவும் கிடைக்க வகை செய்யும் முறையில், இந்த ஒதுக்கீடு மாவட்ட ரீதியாகப் பங்கீடு செய்யப்பட்டு, கடன் வழங்கும் அதிகாரம், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்படும். பெரு நகரங்களில்லாத பகுதிகளில் அலுவலர்கள் வீடு கட்டுவதையும், வாங்குவதையும் ஊக்குவிக்கும் பொருட்டு மூன்றாவது ஊதியக் குழு செய்த பரிந்துரையை அரசு ஏற்று, நகர ஈட்டுப் படி இல்லாத ஊர்களில் வீடு வாங்கவோ, கட்டவோ அளிக்கப்படும் கடன் மீதான வட்டியில் ஒரு சத வீதம் தள்ளுபடி செய்ய முடிவு செய்துள்ளது. அவ்வாறே, கல்லூரிகளிலோ, பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிலோ கல்வி பயிலும் மக்களையுடைய அரசு அலுவலர்களுக்குக் கல்வி வசதி முன்பணம் வழங்குவது பற்றிய பரிந்துரையையும் அரசு ஏற்கிறது. இத் தகுதியுடைய அரசு அலுவலர்களுக்கு ஒரு மாத அடிப்படை ஊதியம் வட்டியில்லாத முன் பணமாக வழங்கப்படும். கல்லூரிகளில் கல்வி பயிலும் மக்களையுடைய அலுவலர்களுக்கு ரூபாய் ஆயிரத்துக்கு மேற்படாமலும், பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளில் (Polytechnics) கல்வி பயிலும் மக்களையுடைய அலுவலர்களுக்கு ரூபாய் அய்ந்நூறுக்கு மேற்படாமலும் அளிக்கப்படும் இம் முன் பணம், பத்து மாதத் தவணைகளில் திரும்பப் பெறப்படும். மக்கள் கல்வி பயின்று வரும் காலத்தில், ஒவ்வொரு ஆண்டும் இம் முன்பணம் பெறலாம்.

53. சைக்கிள் வாங்குவதற்கு அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் முன்பணம் தற்போது 300 ரூபாய் ஆக உள்ளது. இது 400 ரூபாய் ஆக உயர்த்தப்படுகிறது. மாதமொன்றுக்கு 750 ரூபாய்க்கு மேற்படாமல் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு இம் முன் பணம் வழங்கப்படும்; புதிய சைக்கிள் வாங்குவதற்கு மட்டுமே இது தரப்படும். புதிய ஸ்கூட்டர் வாங்குவதற்கான முன்

பணத்தின் உச்ச வரம்பு, ரூபாய் 4,500இலிருந்து ரூபாய் 5,000 ஆக உயர்த்தப்படும். இனி மாதமொன்றுக்கு 750 ரூபாய்க்கு குறையாமல் அடிப்படை ஊதியம் பெறும் அலுவலர்களனைவரும் இம் முன் பணம் பெறுவதற்குத் தகுதி உடையவர்களாவார்கள். பண்டிகை முன் பணம் 250 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. ஊதிய விகிதங்கள் மாற்றியமைக் கப்பட்டதையடுத்து, மாதமொன்றுக்கு ரூபாய் 750-க்குக் கீழ் ஊதியம் பெறுவோர்க்கு மட்டுமே அளிக்கப்பட்டு வந்த இம் முன் பணச் சலுகையை, ரூபாய் 1,000 வரை பெறுவோர்க்கு நீட்டித்து அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது.

54. புதிய ஊதிய விகிதங்கள் செயலாக்கப்படுவதற்கு முன்பாகவே ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியத்தை உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் பலன் 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து கிடைக்கு மென ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெற்று வருபவர்களது வேண்டுகோளுக்கிணங்க, இதை 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்தே செயலாக்க அரசு முடிவு செய்துள்ளது.

உதவித் தொகைகள்

55. முதியோர் உதவித் தொகை பெறும் ஒவ்வொரு ஆணுக்கு ஒரு கைத்தறி வேட்டியும், ஒவ்வொரு பெண் ணுக்கு ஒரு கைத்தறி சேலையும், பொங்கலின் போதும், சுதந்திர தினத்தின் போதும், வரும் ஆண்டு முதல் வழங்கப்படும். மேலும் உதவித் தொகை மாத மொன்றுக்கு 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாகவும் உயர்த்தப்படும். பார்வை இழந்து, ஆதரவற்ற நிலையி லுள்ளவர்களுக்கு வயது எல்லை பாராமல் உதவித் தொகை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. அரசு எடுத்துள்ள இம் முடிவினை மன்ற உறுப்பினரனைவரும் வரவேற்பர் என நம்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

56. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் தியாகிகள், இந்திய தேசிய இராணுவத்தினர் ஆகியோரில் மத்திய அரசு உதவித் தொகை பெறுவோர் மாதம் 200 ரூபாய் பெறுவதுடன் மாநில அரசின் உதவித் தொகையாக 75 ரூபாயும் பெற்று வருகின்றனர். மாநில அரசின் உதவித் தொகை பெறுவோர் 75 ரூபாய் மட்டுமே பெற்று வருகின்றனர். அவ்வாறு மாநில அரசின் உதவித் தொகை மட்டும் பெற்றுவருபவர்களுக்கு, வரும் நிதியாண்டு முதல், மாத உதவித் தொகையை 75 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும் இந்திய தேசிய இராணுவத்துடன் பணியாற்றிய பாலசேனாவிலிருந்து அதற்கென 1973 வரை உதவித் தொகை பெற்று பின் அது நிறுத்தப்பட்டவர்களுக்கு, வரும் ஆண்டு முதல் மீண்டும் உதவித் தொகை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. தமிழ் பேசும் பகுதிகள் தாயகத்துடன் சேர வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகவும், தாய் மொழிப் பற்று, அதன் பாதுகாப்பு இவற்றுக்காகவும் இன்னல் பல ஏற்ற தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்க வகை செய்யும் சட்ட வரைவு ஒன்று மன்ற ஒப்புதலுக்காக விரைவில் கொண்டுவரப்படும்.

நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள்

57. ஏழாவது நிதி ஆணைக் குழு தனது அறிக்கையை சில மாதங்களுக்கு முன் அளித்துள்ளது. இதன் அடிப்படையில் மத்திய அரசு எடுத்த முடிவுகளின் விளைவாக பெரும்பாலான மாநிலங்களின் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை இருந்து வந்த நிலைமை மாறி, இனிவரும் ஆண்டுகளில் வருவாய்க் கணக்கில் ஓரளவு உபரி ஏற்பட வழி செய்யப்பட்டுள்ளது. மூலதன முதலீடுகளின் அவசியங்களையும், கடன் வழங்க வேண்டிய தேவைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, வளர்ச்சிப்

பணிகளுக்கான மொத்த நிதித் தேவைகளின் அடிப்படையில் மாநில அரசு தனது நிதிக் கொள்கையை நிர்ணயிக்க வேண்டியிருக்கும்.

58. மாநில அரசு தனது அலுவலர்களுக்கு மூன்றாவது சம்பள ஆணைக் குழுவின் அடிப்படையில் அளித்தசம்பளம், படிகள் இவற்றுக்கான முழுச் செலவுகளை நிதி ஆணைக் குழு ஒப்புக்கொள்ளவில்லை. ஐய்ந்து ஆண்டுகளில் தமிழக அரசு செலவிட வேண்டிய தொகை 399 கோடி ரூபாயாக அதிகரிக்க இருக்கும் போது ஐய்ந்தாண்டுக் காலத்தில் 252 கோடி ரூபாய்க்கு மட்டுமே செலவினங்களில் நிதி ஆணைக் குழு கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது வருந்தத்தக்கதாகும்.

59. நிதி ஆணைக் குழு மத்திய மாநில நிதித் தொடர்புகள் பற்றிய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய பல இனங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளது:

*நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் கூட்டு நிறுவன வரி (Corporation Tax) மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கேற்ப அரசியல் சட்டத்தை திருத்துவது,

*சர்க்கரை, புகையிலை, துணி இவற்றின் மீதான மாநிலங்களின் விற்பனை வரிக்கு பதிலாக மத்திய அரசு விதிக்கும் கலால் வரிகளில் தக்க மாற்றங்கள் செய்வது.

*இரயில் பயணிகள் கட்டணங்களின் மீது மாநிலங்கள் விதித்து வந்த வரிகளுக்கு பதிலாக தரப்படும் ஈட்டுத் தொகையை உயர்த்துவது,

*தொடர்ந்து விதிக்கப்பட்டு வரும் வருமான வரி மேல்வரியை வருமான வரியுடன் இணைப்பதன் மூலம் அதனை மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்வது போன்ற முக்கிய பரிந்துரைகள் மீது நல்ல முடிவு எடுப்பதற்கேற்ற நடவடிக்கைகள் மத்திய அரசு விரைந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்தாண்டுத் திட்டம்

60. ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்களின் பங்கு 35,160 கோடி ரூபாய், மத்திய அரசின் பங்கு 34,220 கோடி ரூபாய் என்ற அடிப்படையில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. முதன் முறையாக மாநிலங்களின் பங்கு, மத்திய அரசின் பங்கைவிட அதிகமாக அமைய இருப்பதும், நாட்டு வளர்ச்சியில் மாநில அரசுகள் ஏற்றுள்ள அதிகப்படியான பொறுப்புகளை மத்திய அரசும், மத்திய திட்டக் குழுவும் இவ்வாறு உணர்ந்து செயல்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும் 2,000 கோடி ரூபாய் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் பங்கிலிருந்து (Centrally Sponsored Schemes) மாநில அரசுத் திட்டங்களுக்கு (State Planes) மாற்றப்படுவதன் மூலம், ஐந்தாண்டுக் காலத்தில் மாநிலத் திட்டங்களின் பங்கு 37,160 கோடி ரூபாயாகவும் மத்திய அரசின் பங்கு 32,220 கோடி ரூபாயாகவும் அமையும். இந்தப் போக்கு இனியும் தொடர்ந்து, மாநில அரசுகளின் பங்கு வருங்காலத்தில் இன்னும் வளர வேண்டும் என்பதே தமிழக அரசின் ஆவலாகும்.

ஆண்டுத் திட்டம்.

61. வரும் ஆண்டில் 363 கோடி ரூபாய்க்கான வரைவுத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய திட்டக் குழுவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. வரைவுத் திட்டத்தை ஆராய்ந்த பல்வேறு குழுக்கள் மொத்தம் 342 கோடி ரூபாய்க்கான திட்டம் தேவையானதெனக் குறிப்பிட்டன. மத்திய

1979 மார்ச் 3]

திட்டக் குழுவுடன் இதுபற்றி முடிவான உடன்பாடு ஏற்படவில்லை. மதுவிலக்கின் காரணமாக தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இழப்பினைக் கருத்தில் கொண்டு, நியாயமான குறைந்த அளவுத் திட்டம் நிறைவேற்ற மத்திய திட்டக் குழு சிறப்பு நிதி உதவி செய்ய வேண்டுமென்று கோரி வருகின்றோம். சில நாட்களுக்கு முன் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தின்போது ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில், 2,000 கோடி ரூபாய், அத்தகைய திட்டங்களைக் குறைத்து, மாநிலத் திட்டங்களுக்காக 1979–80 முதல் 1982–83 ஆகிய நான்கு ஆண்டுகளில் மாநிலங்களுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது. இதில் தமிழ் நாட்டின் பங்கு சுமார் 150 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டு இதன் மூலம் கிடைக்கும் கூடுதல் மத்திய நிதி உதவியையும், சிறப்பு நிதி பற்றிய நமது கோரிக்கையையும் கருத்தில் கொண்டு வரும் ஆண்டுத் திட்டத்தை 342·87 கோடி ரூபாய் அளவில் தயாரித்துள்ளோம்.

நிதி நிலைமை

62. இந்த ஆண்டில் வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரித்தபோது வருவாய்க் கணக்கில் வரவுகள் 680·08 கோடி ரூபாயாகவும் செலவினங்கள் 726·76 கோடி ரூபாயாகவும், நிகரத் துண்டு விழும் தொகை 46·68 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்போதுள்ள திருத்த மதிப்பீடுகளின்படி வரவுகள் 733·49 கோடி ரூபாயாகவும், செலவினங்கள் 765·37 கோடி ரூபாயாகவும் துண்டு விழும் தொகை 31·88 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மூலதனக் கணக்கில் எதிர்பார்க்கப்பட்ட 63·45 கோடி ரூபாய் செலவுக்கு எதிராக, தற்போதுள்ள மதிப்பீட்டின்படி 67·62 கோடி ரூபாய் செலவு ஏற்படும். வருவாய்க் கணக்கு, மூலதனக் கடன் கணக்குகள், பொதுக் கணக்கு ஆகிய

அனைத்தின் வரவு–செலவுகளின் விளைவாக 1978–79இல் 14·34 கோடி ரூபாய் நிகரச் செலவு இருக்கும் என்றும் எதிர்பார்த்தோம். தற்போதுள்ள மதிப்பீடுகளின்படி எல்லாக் கணக்குகளும் மொத்த மாகப் பார்க்கும்போது 32 இலட்ச ரூபாய் நிகரச் செலவு ஏற்பட்டு, 5·73 கோடி ரூபாய் பற்றாக் குறையுடன் இந்த ஆண்டு நிறைவு பெறும் என நம்புகிறோம்.

63. 1978–79ஆம் ஆண்டுத் திட்டம் 305 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. இப்போதுள்ள மதிப்பீட்டின்படி, இந்த ஆண்டுக்கான திட்டம் 323·42 கோடி ரூபாயாக அமையும். புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக திட்ட முன் நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் 17·6 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள், இத் தொகைக்கு அப்பாற்பட்டவையாகும். இந்த ஆண்டு, அய்ந்தாவது அய்ந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டு. தேசிய வளர்ச்சி மன்றம் மேற்கொண்ட முடிவின்படி, ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டமும் 1978–79ஆம் ஆண்டிலிருந்து தொடங்குவதால், இந்த ஆண்டு செய்யப்பட்டுவரும் திட்டப் பணிகளில் கணிசமான பகுதி, வரும் ஆண்டில் அதாவது 1979–80இல், திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக (Committed Expenditure) மாறிவிடுகின்றது. எடுத்துக்காட்டாக, 1978–79ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஆசிரியர் சம்பளம் அந்த ஆண்டில் திட்டச் செலவாகவும், 1979–80ஆம் ஆண்டில் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாகவும் மாறிவிடும். இத்தகைய செலவுகள் வரும் ஆண்டில் சுமார் 30 கோடி ரூபாய் அளவில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் பல்வேறு துறைகளில் அடுத்த ஆண்டுக்கான திட்டச் செலவை ஆராயும்போது, இதுபோன்ற செலவுகளையும் கருத்தில் கொண்டு ஆராய்வது அவசியமாகும். வரும் ஆண்டில் முன்பு கூறியவாறு, நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் விளைவாக வருவாய்க் கணக்கில் வரவுகள் அதிகரித்து மொத்தம் 849·83 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1979 மார்ச் 3]

செலவுகள் 849·25 கோடி ரூபாயாகவும், இதனடிப் படையில் நிகர உபரி 58 இலட்சம் ரூபாயாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மூலதனக் கணக்கின்கீழ் மொத்தச் செலவு 72·25 கோடி ரூபாயாக இருக்கும். 342·87 கோடி ரூபாய் அளவுள்ள பெரிய திட்டத்தை நிறைவேற்ற முற்படுவதன் காரணமாக, அனைத்துக் கணக்குகளில் மொத்தம் 4·25 கோடி ரூபாய் நிகரச் செலவு ஏற்பட்டு, 1979–80ஆம் ஆண்டின் இறுதிப் பற்றாக்குறை 9·98 கோடி ரூபாயாக அமையும் என்றும் கணக்கிடப் பட்டுள்ளது.

64. இந்தப் பற்றாக்குறையை ஓரளவு ஈடுகட்டுவதற் கான சில முயற்சிகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. தற்போது சென்னை நகரம், அதனைச் சுற்றி 32 கிலோமீட்டர் வரையிலுள்ள பகுதிகள், கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் விற்பனை வரி மீது 5 சதவீத மேல் வரி விதிக்கப்பட்டு வருகின்றது. மேல்வரி விதிக்கப்படும் பகுதியை விரிவு படுத்தி, சிறப்பு நிலை, தேர்வு நிலை, முதல் நிலை நகராட்சிப் பகுதிகளிலும், கோவை, மதுரை, சேலம், திருச்சி நகராட்சிப் பகுதிகளை சுற்றி 16 கிலோ மீட்டர் வரையிலுள்ள பகுதிகளிலும், 1979ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் இந்த மேல்வரியை விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

65. எண்ணெய் எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் கொப்பரை மீது, தற்போது 2 சதவீதம் ஒரு முனை விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகின்றது ; தேங்காய் மீது வரி இல்லை. தேங்காய்க்கான வரி விதிப்பு விலக்கு வாயிலாக கொப்பரை மீதான வரி பெருமளவுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதால், தேங்காய் மீதும் 2 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி நாளை முதல் (1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4ஆம் நாள் முதல்) விதிக்க அரசு முடிவு செய்துள்ளது. சிறிய வியாபாரிகளுக்கு சலுகை தரும் முறையில், ஆண்டுக்கு 25,000 ரூபாய் வரை தேங்காய் விற்பனை செய்பவர் களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

66. தீப்பெட்டி உற்பத்தியில் தமிழ்நாடு நமது நாட்டில் தலையாய இடத்தை வகிக்கின்றது. மற்ற மாநிலங்களின் தேவைகளையும் தமிழ்நாடு பெரும் அளவிற்கு நிறைவு செய்து வருகின்றது. இத்தொழிலை ஊக்குவிக்கவும், மூலப் பொருட்களைத் தட்டின்றி வழங்குவதற்கும் அரசு பல்வேறு உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது. வெளிமாநிலங்களில் பயன்படுத்தப்படும் தீப்பெட்டிகள் மீது வரி விதிப்பதற்கு ஏதுவாக, கையால் செய்யப்படும் தீப்பெட்டிகள் (Hand made Matches) மீது 2 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி விதிக்க அரசு முடிவு செய்துள்ளது. இது நாளை முதல் (1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4ஆம் நாள்) செயல்படத் துவங்கும். சிறிய தொழிலதிபர்களுக்கு உதவும் வகையில், ஆண்டு விற்பனை ரூபாய் 25,000க்கு மேற்படாத சிறிய தொழிலதிபர்களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். மேற்கூறிய மூன்று முயற்சிகளின் விளைவாக, மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

67. அரசு நியமித்த கெய்வார் குழு, விற்பனை வரி நிர்வாகம் பற்றி பல்வேறு பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவற்றில் பல செயல்படுத்தப்பட்டு விட்டன. இக்குழு செய்துள்ள பரிந்துரை ஒன்றின் அடிப்படையில், தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு தரும் சில மாற்றங்களை பொது விற்பனை வரிச் சட்டத்தில் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. தற்போதுள்ள முறையின்படி, ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது, அதில் வெளிப்படையாக, தனித்துக் காணக்கூடிய உறுப்புப் பகுதிகளுக்கு மட்டும் வரிச் சலுகை தரப்பட்டு வருகின்றது. இதனை விரிவாக்கி, மத்திய விற்பனை வரி விகிதத்தையும் கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட தொழில்களுக்கு உதவுவதற்கேற்ற திட்டங்களைத் தயாரிக்கவும், தயாரிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் குறிப்பிடப்படும் மூலப்பொருட்களுக்கும், உறுப்புப் பகுதிகளுக்கும் குறிப்பிடும் அளவுக்கு வரிச் சலுகை தரவும் அரசு திட்டமிட்டுள்ளது.

1979 மார்ச் 3]

இதன் மூலம் வரிச் சலுகை அவசியம் தேவையாக உள்ள தொழில்களுக்கு தக்க அளவுக்கு சலுகை தருவதற்கு முறையான திட்டங்களை அரசு உருவாக்கிச் செயல்படுத்த முடியும்.

68. கெய்வார் குழுவின் இன்னொரு பரிந்துரை இணக்க முறையில் வரி செலுத்துவதைப் பற்றியதாகும். தற்போதுள்ள அமைப்பின்படி, பல முனை வரிவிதிப்பின் கீழ் வரும் பொருட்களின் விற்பனை, ஆண்டுக்கு ரூபாய் 50,000-க்கு மேற்படாமல் இருக்கும்போது, வரி விதிப்பு ஏதும் இல்லை ; ரூபாய் 50,000-க்கு மேற்பட்டு ரூபாய் 1,00,000-க்கு மேற்படாமல் இருக்கும்போது இணக்க முறையில் (Compounding) வரி செலுத்த வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. இத்தகையவர்கள் இணக்க முறையில் வரி செலுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், வரி செலுத்துவதற்கென உள்ள அமைப்பை, தற்போதுள்ள பத்து மட்டங்களிலிருந்து, வரும் ஆண்டு முதல், அய்ந்து மட்டங்களாகக் குறைத்து இணக்க முறையில் செலுத்த வேண்டிய கட்டணத்தையும் குறைக்க அரசு முடிவு செய்துள்ளதை வணிகப் பெருமக்கள் வரவேற்பர் என நம்புகிறேன்.

69. மேற்கூறிய நிதி திரட்டும் முயற்சிகளின் வாயிலாகவும், சட்ட மன்றத்தின் முன் இருந்து வரும், வேளாண்மை வருமான வரி, மோட்டார் வாகன வரி பற்றிய மாற்றங்களின் விளைவாகவும், 1979-80ஆம் ஆண்டின் மொத்தப் பற்றாக்குறை ஓரளவுக்கு சரி செய்யப்படும். நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். இவற்றின் மூலம், வரும் ஆண்டில் 343 கோடி ரூபாய்க்கான ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்றக் கருதியுள்ளோம்.

அவைத் தலைவர் அவர்களே,

70. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நான் அவைமுன் வைக்கும் மூன்றாவது நிதி நிலை அறிக்கை இது.

இன்றைய சமுதாய அமைப்பில் அனைத்துத் துறைகளிலும், புரட்சிகரமான மாற்றம் தேவை. அதற்கு விரைந்து செயல்படுவது தவிர்க்க முடியாத ஒன்று என்ற நோக்கு அரசின் சார்பாக நான் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கைகளில் காணலாம்.

ஆண்டாண்டாக எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஏமாற்றத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் கடை கோடியிலிருக்கும் மக்கள் பொறுமையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள் என்று எண்ணி யாரும் யாரையும் ஏமாற்றிவிட முடியாது.

உழைத்திடக் கரங்கள், உற்பத்தியைப் பெருக்கிட இதய பூர்வமான உணர்வுகள், உயிர்த் துடிப்புள்ள நாடாக தமிழகத்தை மாற்றிட நிறைந்து கிடக்கும் அழுத்தமான தீர்மானங்கள், காலத்தின் சவால் களைச் சந்தித்து சோதனைகளிலிருந்து நாட்டை காத்திடும் கடமைகள்—இவைகளின் மொத்தத் தொகுப்பாக வாழ்ந்திடும் தமிழ்ச் சமுதாயத்தின் விரைவான முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றும் தமிழக அரசின் தூய எண்ணங்களை நல்ல நோக்கங்களை இந்த நிதி நிலை அறிக்கை வெளிப்படுத்தும் என்பது என் நம்பிக்கை !

செல்லரித்துப் போன சித்தாந்தங்களும், உளுத்து மக்கிப் போன உதவாக்கரைத் திட்டங்களும் நாட்டைக் காப்பாற்றாது.

தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத் திற்கு வரவேண்டும். அப்போதுதான் தீட்டப்படு கின்ற திட்டங்களில் உண்மைப் படம் தெரியும். இந்த அவைமுன் மாண்புமிகு உறுப்பினர்களின் பரிசீலனைக்கும், ஆக்க பூர்வமான விமர்சனங் களுக்கும், பலனுள்ள யோசனைகளுக்குமாக வைக்கப் பட்டிருக்கும் இந்த நிதி நிலை அறிக்கை அந்த உண்மை நிலையின் படப்பிடிப்பு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 3]

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் பிரகடனங்களின் செயல் உருவம்.

71. இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க எனக்கு உதவியாக இருந்து செயல்பட்ட நிதித் துறைச் செயலர் திரு. வேங்கடேசன் அவர்களுக்கும் உடன் பணியாற்றிய அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

72. 1979–80ஆம் ஆண்டிற்கான இந்த நிதி நிலை அறிக்கையை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் 5—3—1979 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை 12.18 மணி அளவில் ஒத்தி வைக்கப் பெற்றது.

(5) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

இல்லை.

The Hon. Thiru K. Manoharan: Mr. Speaker Sir,

I rise to present before the House the Revised Estimates for 1978–79 and the Budget Estimates for 1979–80.

2. This Government is committed to the major objectives of increasing employment opportunities, particularly for the poor people in the rural areas and increasing and expanding the educational and medical facilities during the next year. The significant features of the plan for the coming year are assistance for industrial development, incentives for establishment of industries in the backward areas and strengthening of the handloom sector to produce quality goods. Special attention is being paid for the development of the agriculture and the allied sectors as well as for power development. Provisions for the welfare of the weaker sections and for children's welfare are worthy of special mention.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Agricultural Development

3. The Agriculture department will be implementing a number of schemes next year for increasing the production of foodgrains to 88·73 lakh tonnes and commercial crops to 36·45 lakh tonnes. To pay special attention to the development of horticulture, a separate department will be established. Quality seeds are essential for increasing agricultural production. Tamil Nadu's contribution to the production of quality seeds for food and commercial crops has been substantial. A separate Seed Certification Agency for certifying the seeds produced in State Farms in Tamil Nadu and also in the farms of enlightened farmers is already functioning under the

control of the Director of Agriculture. The Government have decided to create a seed certification department making it completely independent of the Agriculture Department. A provision of Rs. 5 lakhs has been made for setting up 15 Agmark Laboratories and 35 commercial grading centres.

Animal Husbandry

4. We have given special attention to Animal Husbandry and Dairy Development since they offer considerable scope for benefiting farmers and landless labourers. The schemes under implementation for upgrading the quality of cattle will be continued next year also. Sixteen more Key Village blocks and 2 more Intensive Cattle Development Projects will be set up in the coming year. Ten Veterinary Dispensaries will be opened and 5 Veterinary Dispensaries will be upgraded as hospitals. The performance of the Arasur hatchery opened last year is encouraging. As this programme has been well received by the farmers, it is proposed to set up another similar hatchery at Kappalur utilising the facilities available there. A modern abattoir at a cost of Rs. 2·25 crores will be set up. I am happy to inform the members that it has been decided to set up a Meat Development Corporation with the objective of modernising the abattoirs and creating facilities for meat processing and marketing in the State.

Dairy Development

5. The achievements of Tamil Nadu under Operation Flood-I have been acclaimed all over the country. The Government of India have now proposed to implement Operation Flood-II from the coming year. It is expected that a sum of Rs. 40

crores will be spent in Tamil Nadu in the coming 5 years. This programme will cover another 9·5 lakhs cattle and will benefit 8 lakh farmers. Necessary provision for strengthening the co-operative wing for implementing the programme has been made in the Budget.

Forest Development

6. Realising the importance of forest development, Government have allocated a sum of Rs. 2,63 lakhs in 1979–80 which will enable us to raise plantations in 30,700 hectares. Plantations in 23,300 hectares at a cost of Rs. 2,39 lakhs will be raised this year. Necessary steps have already been initiated to set up a crumb rubber factory at a cost of Rs. 35 lakhs.

7. The Cinchona department has already started a scheme for geranium cultivation in 160 hectares and cinchona cultivation in 400 hectares in the Kodaikanal Hills. A scheme to produce diosgenin by cultivating dioscorea is also being implemented at a cost of Rs. 80 lakhs. This will give employment to 400 people. It is expected that the scheme will result in considerable saving of foreign exchange. A total provision of Rs. 2,55 lakhs has been made for this department in 1979–80.

8. Madras Zoo will be shifted to Vandalur in view of the expansion of the Central Station. The proposed Zoo which will have the animals in natural surroundings will be a great tourist attraction. This will cost Rs. 1,05 lakhs in the first stage. This new Zoo will function under the control of the Forest Department.

Fisheries

9. A sum of Rs. 2.76 crores has been allocated for fisheries development in the Budget for 1979-80. It is proposed to distribute 160 mechanised boats in the current year. The Fisheries Development Corporation has taken steps for direct export of prawns During the next year also, a sum of Rs. 1 crore will be spent on Fishermen housing.

Rural Development

10. One hundred and sixty-one Panchayat Unions will be benefited under the Integrated Rural Development Programme in the current year. Under this programme, substantial funds have been allocated for agricultural development, land improvement, cattle development, sheep and poultry development, sericulture and village industries which are fundamental for the development of our villages. These schemes are being implemented in a manner that the benefits flow largely to the small farmers, landless labourers and weaker sections of our society. In addition to the assistance of Rs. 7·12 crores from the Government substantial funds will be obtained from the Banks for implementing the various schemes under the Programme. A sum of Rs. 10 crores will be spent under this Programme in the coming year benefiting 30 more Panchayat Unions. This Programme will ensure that the benefits of Government's schemes reach the downtrodden directly. The Programme will also play a vital role in our efforts to eradicate unemployment in the rural areas.

11. During the next year the Government will implement a new scheme of short term training of the rural youth in various crafts. It is proposed to train 10,000 persons under this scheme and to supply hand tools to them.

12. In the Governor's address mention was made about the new Employment Guarantee Scheme for the rural areas. A large number of villagers have benefited through the Small Farmers Development Agency, Drought Prone Area Programme, and the Integrated Rural Development Programme. However, there are some educated and uneducated unemployed persons who did not get any job opportunities or benefits through these schemes and the new scheme is intended to help them. Under this Employment Guarantee Scheme, all unemployed villagers above 18 years of age may register their names requesting for employment. Works will be taken up in order to ensure them job opportunities generally within the district. Such works will be executed under the direct supervision of the respective Government departments without being entrusted to contractors. Persons employed under this scheme will be paid weekly wages calculated on the outturn basis. Under this scheme every person would get approximately Rs. 3 per day plus some rice and wheat. On the days when the Government is unable to give him work every person will get one rupee per day or rice or wheat of equivalent value. A programme to train the officers for the implementation of this scheme is also being drawn up.

Irrigation

13. Marudha Nadhi Reservoir Scheme and P.T. Rajan Channel Scheme will be completed in this year. It is expected that on account of these two schemes and other on-going schemes, an additional extent of 3,000 hectares will be benefited. An outlay of Rs. 25·17 crores has been made in the Annual Plan 1979-80 for the Irrigation sector. Lump sum provisions of Rs. 1 crore each for new medium irrigation schemes and for flood control and anti-sea

erosion schemes are the notable allocations in the Plan. To undertake desilting and reclamation of tanks and special minor irrigation projects, a provision of Rs. 2·75 crores has been made. Work will commence in the coming year on the Girudamal nadhi–Paralayar scheme in Ramanathapuram district for irrigating 12,500 acres through 100 tube wells at a cost of Rs. 1,83 lakhs.

Power

14. There has been a 17 per cent step up in the electricity distributed in the last one year on account of the special and continuous attention given by the Government to generation and distribution of electricity. Against 9,448 million units distributed last year, it is expected that 11,000 million units will be distributed in the current year. 25,305 Harijan hamlets have already been electrified as against a total of 25,526 habitations. The remaining habitations will also be electrified in one or two months. The current year's Plan envisages an outlay of Rs. 114 crores under power. The outlay for power in the coming year will be stepped up to Rs. 152 crores since necessary provisions have been made for Servalar Hydro-Electric Project, Lower Mettur Hydro-Electric Project and Tuticorin Thermal Station. As a result, it is expected that the installed capacity of Tamil Nadu Grid will be increased to 2929 MW. from 2509 MW. In order to provide an incentive to slum dwellers to obtain connections, it is proposed to implement a new scheme for supplying electricity to slum dwellers on payment of a flat rate per month without installing meters.

Industrial Development

15. The primary objective of the Government's Industrial Policy is to encourage the development of small scale and village industries and thereby

create large employment opportunities in the rural areas. As a result of the sustained efforts taken in pursuance of the above objective, it is estimated that an additional employment of the order of 1,30,000 has been created in one year in activities such as sericulture, match industry, co-operative tea factories and small industries. The newly set up District Industries Centres have played a major role in this effort. These Centres are offering a package of services such as formulation of new projects in the small scale sector, organising market studies, technical advice for entrepreneurs and securing financial assistance from the Banks. These centres are at present functioning in eight districts. These will be extended throughout the State in a few months. A sum of Rs. 1,53 lakhs has been provided for this during the next year. Dr. Nayudamma Committee has given its report a few days back with many recommendations for setting up small industries in the rural areas utilising the raw materials available there and for modernising the crafts of rural artisans. These recommendations which indicate the possibilities of setting up more than 300 trades employing lakhs of people will be examined by Government and implemented quickly. The Small Industries Development Corporation and the Khadi and Village Industries Board will play a major role in implementing the decisions of the Government on these recommendations. This Committee will continue to assist the Government in monitoring the implementation of its recommendations.

16. In the current year 4,000 acres will be covered under Mulberry cultivation. Another 8,000 acres will be brought under Mulberry cultivation in 1979-80. A sum of Rs. 1·23 crores has been provided in the next year for training farmers in sericulture, supply of implements for silk reeling and creating facilities for

marketing cocoons and silk yarn. Additional employment for 20,000 persons will be created in the current year and 40,000 persons will get additional employment in the coming year as a result of this scheme. A separate Directorate of Sericulture has also been set up in view of the growing importance of this industry.

17. Three more match service societies will be set up in the coming year; 20 match co-operative societies will also be set up. It is also proposed to increase the number of members in the existing service co-operative societies. The Tamil Nadu Small Industries Corporation has given special attention to the distribution of the basic raw materials such as wax, Potassium Chlorate, etc., required for match industry. It is estimated that this industry will create additional employment for 30,000 persons in the coming year.

18. The Co-operative Tea Factories in Tamil Nadu are functioning as a model for others in the country. There are 11 Tea Factories with a membership of 5,500 small farmers. They produced 53 lakh kilos of tea in 1977–78 which forms 10 per cent of the total tea production in our State. The Government has permitted the expansion of 6 factories in the current year. Another factory will be set up in the coming year. These steps will enable tea cultivation in 3,500 acres additionally giving employment for 10,000 persons.

19. The Government has been giving its continued and special attention to the development of Village Industries and Khadi. The sale of Khadi is expected to reach Rs. 6·25 crores in the current year as against only Rs. 4 crores in 1976-77. It is also anticipated that the sale of village industries products

